உ

முருகக்கடவுடுணை.

சென்னைமாநகர்க்கந்தசுவாமிபேரிற்

# பிள்ளைக்கவி

## திருப்புகழ்-வகுப்பு

## பதிற்றுப்பத்தந்தாதி

வெண்பாக்கள் - பதிகம்.

திருவல்லிக்கேணிப்பதிகம்

திருவான்மியூர்ப்பதிகம்

திருப்போரூர்ப்பதிகம்

திருவொற்றியூர் வெண்பாக்கள்.

இவை,

முருகதாசசுவாமிகளென்றும்

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

## தண்டபாணிசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியன.

ம-ா-ா-ஸ்ரீ அமரம்பேடு,

**சுப்பராயசெட்டியா ரவர்களால்**

ஊ - புஷ்பரதசெட்டியாரவர்களது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன.

ரிஜிஸ்த்தர்—ஈஸ்வரவருஷம் மாசிமீ.

உ

முருகக்கடவுடுணை.

# சாத்துகவி.

புரசை ம-ா-ா-ஸ்ரீ,

அஷ்டாவதானம் - சபாபதிமுதலியாரவர்கள்

இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

மண்டலத்தோர்களும்பரவும் வடிவேற்கைக்கடவுளருள்
வரத்தினுற்சொல்
வண்டமிழ்ச்சீர்வினவியெம துள்ளமெலாங்களிசிறப்ப
வாய்ந்தமேன்மை
கொண்டதிருப்புகழ்க்கார னெனமுருகதாசனெனக்
குலவுஞ்சீர்த்தித்
தண்டபாணியன்றனக்கிங் கென்னகைம்மாறியாமுணர்ந்து
தருதற்பாற்றே.

சிவபூஜா துரந்தரரென்று பேர்பெற்று விளங்கிய

ம-ா-ா-ஸ்ரீ ஐயம்பேட்டை,

நெல்லையப்பமுதலியாரவர்கள் குமாரர்

சிவகுருநாதமூர்த்திகள்

இயற்றியது.

தாழிசை.

திருமின்மருவுஞ்சென்னைநகர்ச் சேந்தன்றனக்காங்கவிமாலை
திரடோணிமையிற்புனைதலுன்னித் தேடித்திருநெல்லையினிடத்துப்
பெருக்கன்பமையுங்கவுமாரர் பேணுமுருகதாசனெனும்
பேரார்தண்டபாணியனைப் பிறங்குங்கருணைவழியழைத்தீண்
டொருவண்பெயர்ச்சீர்த்திருப்புகழு முனாத்தற்கரிதாம்வகுப்பினமு
முயர்வார்பிள்ளைக்கவியுலா மோங்குமிரண்டந்தாதிகளு
மருடர்புலமைக்கலம்பகமும் வண்மைப்பதிகங்களும்பிறவும்
வனைவித்தணிந்தாங்கவற்கிருதாண் மலர்சூட்டியதால்வழுத்துதுமே.

# சாத்துகவி.

ஓம். ப. க. பூ. ஆ. வே. வை. இ. ப. கோ. ம. பு. அ. ச.
ஆதொண்டமண்டலநாட்டார் அ. வை. லக்ஷ்மிமடாலயம்,
ஸ்ரீ. கா. ம. க. நீ. ஆ. தி. க. ஞா. அ. வை. புருஷார்த்ததீக்ஷாசாலை,
இந்தியா கங்காகுல தீக்ஷாநவபீடாதீனபுருஷர்,
ஆகிய
சுப்பராஜ அமிர்தசங்கவைசியபுருஷார்த்த குருகவி ஸ்ரீமான்
இயற்றியவை.

## இரட்டை ஆசிரியவிருத்தம்.

திருமகள்புணர்ந்தநெடு மால்புகழும்வேல்கொண்டு
தேவர்சேநாதிபதியாய்த்
திகழ்சமரபுரியிருந் தடியவர்க்கருள்செயச்
சென்னைமாநகரில்வந்தோன்
பெருகுகலிபுருடன்வலி தீர்வதுகுறித்துப்
பிறங்கும்விளையாடல்செய்வோன்
பேர்முருகதாசன் திருப்புகழக்காரன்
பெருந்தண்டபாணியென்ன
மருவுமொருசித்தனைத் திருநெல்லையூர்நின்று
வருமாறுவரவழைத்து
வண்மைத்திருப்புகழ் வகுப்புக்கலம்பகம்
வயங்குபிள்ளைகவிதையோ
டிருவிதத்தந்தாதி யாதியவைகூறச்செய்
தினிதணிந்தருள்புரிந்தா
னிங்குமங்கும்புலவ ரானந்தமெய்தலா
லியமிகமுழக்கினரோ.

## வெண்பா.

உமாபதிபோல் வெண்ணீ றுடன்முற் றணிந்தோன்
குமார சமையநிலை கொண்டோ — னிமாசலத்தாள்
போற்று மருமைப் புதல்வன் திருப்புகழைச்
சாற்றுந் தமிழே தமிழ்.

உ

முருகக்கடவுடுணே.

சென்னை மாநகர்க்

# கந்தசுவாமி பேரிற் பிள்ளைக்கவி.

நூற்காப்பு.

## விநாயகர் துதி.

பைந்தமிழ்ச்சீர்மன்னுசென்னை பட்டினத்தூர்வாழவந்த
கந்தசுவாமிகளிகூருஞ் - சுந்தரஞ்சேர்
பிள்ளைக்கவிதருவான் பேழைவயிற்றுனைமுகக்
கொள்ளைக்கவின்மருவுங் கோன்.

## சரசுவதி துதி.

வல்லாண்மைதுன்றுசென்னை மாநகரில்வாழ்குகன்மே
லெல்லாருமெச்ச வியம்புவாய் - பொல்லா
விடம்பருகுமீசனெடு மேனுளுதித்தாய்
கடம்பனையபிள்ளைக் கவி.

## காப்புப்பருவம்.

திருமால்.

மணிநிலவுமரகதப் பிடிமருவுபாகத்து
வள்ளலார் தவமுதிர்ந்து
வன்னிவிழிவழியாறு பொறியெனவுருக்கொண்டு
வருமுருக வேளைமகுடத்
தண்ணிநிலவுதலையாறு மங்கதமிலங்குபுய
மாறிரண் டும்பொருந்து
மையனைச்சென்னைமா நகரிலுறைகந்தனை
யளித்தருள வேண்டுமென்றே

பணிநிலவுபாற்கடற் பள்ளிகொண்டானையெழு
பாருமுண் டுமிழுமாலைப்
பசுநிரைவருந்தாத வண்ணமங்நாளுயர்
பருப்பதக் குடைபரிக்குந்
திணிநிலவுதோளானை யாழியொடுசெங்கமுந்
திகழச் சிறந்துளானைச்
செல்வியுறுமார்பனைப் பல்விதத்தினுமிகச்
சிந்திக்கு மெமதுள்ளமே (க)

## பரமசிவன்.

### குழிப்பு.

தன்னதானனதான தன்னதானனதான
தன்னதானனதான தந்தனத்தாத்தன.

அன்னமாமெனவேதன் விண்ணிலேகிடவேன
மன்னமேல்கொடுமாயன் மண்புகப்பார்த்துளா
ரண்ணமாமுடிமீது வெண்மைசேர்மதிசூடு
மண்ணலாடகமாகு மம்பலக்கூத்தனா
ரன்னையாயுலகேழு முன்னமீனியபாவை
யங்ஙனோர்புறம்வாழ வுங்கொள்பொற்பேற்றதே
வம்மைவாதனைதிரு முண்மைமாதவமீயு
மம்மனீறணிவார்கள் சிந்தையிற்றேக்குவார்
கன்னல்வார்சிலைமார னென்னுமோர்படுபாவி
கன்னிமார்பலர்சூழ வந்தெதிர்த்தார்த்தநாள்
கண்ணிறாழல்வீசு தன்மையார்மழுமானோர்
கம்பிெனாடவிர்சூல மொன்றுகைத்தீர்த்தனார்
கண்மைதீர்தமிழ்நால்வர் தம்மைநாடியசீலர்
கன்மமாதியவாம லங்கெடத்தாக்குவார்
கைம்மதாசலமாய வுன்னினார்பலவாய
கண்ணியாரவர்தாளை யஞ்சலித்தேத்துவாம்
வன்னமாயிரகோடி துன்னுசீர்பெறுதோகை
மஞ்ஞைவாகனமேறு மைந்தனைப்பூட்கையால்
வண்மைதோய்தரநீடு பெண்ணினாருயிர்போலு
மன்னைமால்வரைசார்ப சுந்தினைக்காட்டில்வாழ்
வன்மைவேடுவர்பேதை கிண்ணமாமுலைமோக
மன்னுசாமியைஞான பண்டிதப்பேர்ச்சொல்வார்
மம்மர்நோய்மருவாது மெய்ம்மைவீடதுசேரும்
வண்ணமோர்குருவாகு நண்பனைக்கூர்த்தவேல்
சின்னதேயெனநாளு மெண்ணியேசிடுமீனர்
தென்னனூர்புகமோதும் வன்பனைப்பாக்கொடோர்

தென்னனுருயிர்சோரும் வெம்மைபோய்மிகுகூனல்
செம்மையாகிமிர்சீர்செய் தன்பில்பொய்த்தீர்க்கமே
செம்முசாரணராதி யெண்ணிலார்கெடுபோர்கொள்
செம்மலாமுருகோனை யம்புயப்பூக்கணீர்
செங்நெலார்வயலூடு மென்மையோதிமமோவில்
சென்னைமாநகர்மேவு கந்தனைக்காக்கவே. (௨)

## பராசத்தி.

தனனதனதன தனதனதனதன தனனதனதன தனதனதனதன
தன்னத்தனத்தனன தன்னத்தனத்தனன தானனா.

அமலபரசிவ பசுபதியெனுமொரு கணவர்தனதிள முலைமயல்கொடுதின
முன்னிட்டமெப்படிய வண்ணத்திருப்பனெனு
மொழியொடநுதினமடிதொழவுளமகிழ் சிவையையிமவரைதருமகவெனவரு
சின்னக்குயிற்பெடையென் வண்மைத்தனிக்கொடியை
யகிலமுழுமையு முதவியசிறுவயி றுடையகவுரியை மதன்வழிபடவொரு
கன்னற்சிலைத்திறமை தன்னைக்கொடுத்தவளை-வாடாதே
யளவில்சுகமுற வுதவிடுமிறைவியை மரணமொடுபவ மெனுமிருளிரிதலை
நண்ணிக்கழற்கமல முன்னித்தனக்குரிய
பொறிகணுவன்முழு மவுனிகளதுசுழி முனையினடமிடு முதல்வியைமுருகவிழ்
வன்னத்தகட்டிதழ்க டுன்னுற்றபுட்பவகை
யணியுமழகிய குழலியையனநிகர் நடையினெயின்மலி வனிதையையொருகவி
பின்னுற்றுவப்படிசி லுண்ணச்சமைத்தவளை-வாளேநேர்
சமரபிரபல பலமருவியவிழி யிலகுதிரிபுர தகனியையடியவர்
கண்முற்றிகழ்ச்சிதரு கன்னிக்கிளிப்பிள்ளையை
வெளிறுமலர்மிசை மதியெனநிலவிய சரசுபதிதிரு மகளெனுமிருவர்க
ளென்னச்சொலிப்பரவு தன்மைக்குமொத்தபிடி
தனையெனிகலவ ரடியொடுகெடவரு முனிவின்மிகைகமழ் திருவுளமிசைவுறு
பொன்னைப்பணத்தின்மகிழ் புன்மைக்குணத்தினரை-நாடாதாள்
சகுணமுதன்மைகொள் பகவதிபயிரவி விமலையதிநய விகசிதமொழிபல
பன்னித்தொடுத்துவரு பெண்ணுப்பில்கற்பினவ
ளறிவிலறிவரு செயலினளெனவுணர் பெரியர்தமையிகழ் கொடியவர்குடரணி
மின்னக்குதிப்பவளை நன்மைக்குவித்தனைய
தருமமயிலினை யிமகரனெனவொரு பணியைவிடுகரு ணையின்முதியவடனை
யுண்மைக்கவிப்புலவ ருண்ணிற்குமுத்தமியை-நானேர்வேன்
முமலமுதவிய திரிகுணவழிசெலு மனதையிருபத மலர்களிலொருவித
மன்னத்திருத்தியருண் மெய்ம்மைக்குருக்களரன்
மதலையெனலையு மவர்பணிகொளுமுயர் குரவரொனலையு நிசமெனுநிலையினர்
விண்ணைக்குறிக்குமவ ரின்னற்றவிர்த்தகுகர்

முகுளசததள பரிமளமதுகர சலசமலர்திகழ் கரமுறுகுறமக
ளெண்ணத்திருப்பதையு முன்னிட்டியற்றுமதி-மாலோவார்
மொளுமொளெனுமொலியொடுமெதவருவிகள் வழியவிடுமெழில்குலவுறுமவை
வெண்மைக்களிற்றின்மகள் பொன்மைக்குருக்கமிகு [யவ
சிறுவர்சரவண பவர்கதிரயில்வலி யதுகொடவுணர்கள் குலமறமுனிபவர்
மொய்ம்மொய்த்திசைக்கவலர் செம்மைக்கடப்பமலர்
முருகுசொரிதரு குரவமென்மலர்செழு மலரிபுனலிம லிகைதுளவறுகிவை
சென்னிக்குமிட்டுளைசெ யெண்ணிக்கையற்றமலை-மேல்வாழ்வார்
கமலமிசைவளர் திசைமுகனதுதலை யுடைதலிலதுபல் வயினுயர்தரவுள
கைம்மற்செலுத்துமவர் முன்னைத்தொழிற்செய்தவர்
திருடனெனவொரு தரமருணையிலொரு புலவனுவல்கயி லமைவரும்விழை
மென்னைச்சொலச்சொலிய கண்மைத்தலைக்கடவுள் [வொடு
கடலினொடுபொரு நையுமுதலியபல புனலிலனலின்முன் முழுகியபனுவல்க
ளிம்மைப்பிறப்பினிலென் முன்னிற்பதைக்கருது-சீர்தோய்வார்
கமடமுதுகினி லொருமலையினையலை தவளவுததியி னடுநடுமெரிபுகழ்
திண்ணப்புயத்தொருவர் தொன்மைக்குடைச்சரணர்
தனனதன்தன தனதனதனதன தன்னதனதன தனதனதனதன
தன்னத்தனத்தனன தன்னத்தனத்தவெனல் [வளமுறு
கழறியலகைகள் குதிகொளவமர்பொரும் வயவர்தமிழ்நய மொடுபொருள்வ
சென்னைப்பதிக்குமரர் தம்மைப்புரக்கவென-வேதானே. (௩)

## விநாயகர்.

தன்னதனாதந்த் தானனத்தாத்தனா.

மும்மையுலகோரொன்று மூலவித்தாச்சொலோர்
முன்னவனையீசன்றன் மேனியிற்போர்த்ததோ
லம்மைநினைவூடொன்ற லாலெழிற்பூட்கையே
யன்னமுகமாவந்து ளானைமிக்கேத்துவாம்
வெம்மைமலிசூரொன்ற மாவறத்தாக்கும்வேன்
மின்னுமகன்மார்பங்கொள் வீரனைப்போற்றுவார்
செம்மையுறல்காணுங்கு கேசனைக்கீர்த்திதோய்
சென்னைநகர்வாழ்கந்த சாமியைக்காக்கவே. (௪)

## திருமகள்.

தந்ததனதந்ததன தந்ததனதந்ததன
தன்னதானனதன்ன தையனத்தாத்தனா.

பங்கயமலர்ந்தனைய கண்குலவுகொண்டல்புணர்
பன்னியாகியவிளைய தையலைத்தேக்குபால்
பம்புகடலம்புலியு டன்றரவரும்பெருமை
பன்னுவார்பெறுகருணை வல்லியைப்போக்கொணா

மங்களமனந்தமுறு செந்திருமடந்தையினை
வண்மைதோய்முனியரசு சொல்லுநற்பாக்களாம்
வந்தனைபுனைந்தவளை யிந்திரர்தொழுஞ்சரண
மன்னுவாடனையிணையில் செல்வியைப்போற்றுவாம்
வெங்கணரவஞ்சநட னம்பயில்சிகண்டிமிசை
மின்னும்வேலுடனிலவு செய்யனைச்சேட்டையே
மிஞ்சமணர்துஞ்சமுதிர் செந்தமிழ்பொழிந்தவனை
வென்னிடாதமர்புரியும் வல்லமைத்தோட்கள்சேர்
சிங்கமிகவொன்பதின்மர் தந்துணையையும்பர்புகழ்
சென்னியாறுடையமுதல் வள்ளலைக்கோட்டிலோர்
செண்டுகொடறைந்துமகிழ் துங்கனைவளம்பெருகு
சென்னைமாநகரின்முரு கையனைக்காக்கவே. (ரு)

## பிரமன்.

தன்னதனதன தனதத்ததத்தன.

மண்ணுமுயிர்களி னுடன்முற்றுமிட்டதாம்
வண்மைதிகழ்கர மலரொட்டும்வித்தைமா
தண்ணமிளிர்சது முகநட்புமுற்றுவா
லன்னமிசைவரு மயனைப்பழிச்சுவாம்
விண்ணுளிமையவ ருறவைத்தசத்திவேல்
வெண்மைநிறமலி தருகுக்குடப்புள்வாழ்
திண்ணமொழிபவர் பலர்மெச்சுபொற்பினோர்
சென்னைநகருறை குகனைப்புரக்கவே. (சு)

## சரசுவதி.

தந்ததனதானதன தத்தத்தனந்தனன
தன்னனுதனதான தத்தாத்தனத்தன.

என்றனதுநாவினு மிருக்கைக்கிசைந்தவளை
யெண்ணிலாமறையோதி வைத்தாற்றல்பெற்றதா
லெண்டிசையினுவலரு மெச்சச்சிறந்தவளை
யின்னநூல்பலபாடி நட்போர்க்கும்வித்தெனு
நின்றவளைவாலிய நிறப்பொற்பமைந்தவளை
நின்மலாகரஞான முற்காட்டுபெட்பதே
நெஞ்சில்வளர்பேதையை யிடுக்கத்தில்வந்துதவு
நின்னயாதரவாணி யைப்போற்றிநத்துவாம்
வன்றகுவர்வேரற வறுத்துக்கடம்பணியும்
வண்மைசேர்புயவீர னைக்கார்த்திகைப்பெணார்
மஞ்சுதிகழ்மால்வரை யெனத்தக்ககொங்கைநுகர்
வண்ணவாயுறுசேயை விற்கோட்டுமற்செய்வார்

சென்றழும்வினோதிய ரிலக்கத்தினொன்பதின்மர்
தென்னுலோகனுகா னுறத்தாக்கும்வெற்றிதோய்
திண்பெறமுனிபவனை வித்தைத்திறம்பெருகு
சென்னைமாநகர்வே லனைக்காத்தளிக்கவே. (எ)

## கிரகங்கள்.

சூரியன்றிங்களங்காரகன்புந்திகுரு சுக்கிரன்சனியிராகு
தொந்தமுறுகேதுகுளி கன்சிலையிராசிநாடுமேகேதுப்பரிவேடம்
வீசிடிக்களரிகாவலன்முதற்பெரியோர் விளம்புபலகோட்களுக்கும்
விரதாதியுற்றுந்துதித்துந்தினந்தோறு மேன்மேலுமஞ்சலிப்பா
மாரியமருந்தமிழ்முதற்பரவுகலைமுழுது மறிபுலவனைக்கிரியெலா
மாடரங்காமுருகவேடனைத்தேவர் புகழயில்வேலனைக்குறத்தி
சீரியமுலைத்துணைக்குருகுமதிமோகனைத்தெய்வானைபுணர்கேள்வனைச்
சென்னைமாநகரில்வரு கந்தசாமியைமிகச் சிந்தித்தளிக்கவென்றே.()

## பலதேவர்.

உயிரொன்றுமுலவருத்தாமை யொருவர்தருமூன்புசியாமை
யோரஞ்சிறிதுமுறையாமை யுதவுந்தொழிலிற்சலியாமை
பயிலுமுதுநூற்பழியாமை பாழ்த்தமுகத்தோடலையாமை
பழகுமனத்தார்தொழுமளவில் பலதேவரையும்பணிந்தெழுவா
மயிலிற்பவனிவருவானை வடிவேலணிந்தபுயத்தானை
மலையாவினும்போய்நடிப்பானை வணங்குமவருக்கெளியானை
கயிலைக்கிரியார்தருமகவைக் கழனிவளஞ்சேர்சென்னைநகர்க்
கந்தக்கடவுடனைநாளுங் காப்பதுமக்கேகடனெனவே. (கூ)

## ஒருமை.

தனனதன தனனதன தனனதன தனனதன
தன்னதன தனதந்த தனதன தனத்தனு.

அருளுததியிடையுலக முழுதுமுதவியபொருளை
யன்னையெனவவைதுன்று முயிர்வகைதமக்கெலா
மமுதுதவிவிழிதுயில விடுமுதலைவடவனலை
யன்னசினமொடுகொன்று மகிழ்வதனைநுட்பமா
மறிவையறிவரியதிரை யிடுகொடுமையுடையதனை
யம்மைவினைதவிர்வென்றி தருகுரவர்பற்பலோ
ரரசதெனமிளிர்சுடரை யுளசமையநியதிகளி
லண்ணியகல்பெருவஞ்ச மருவியதைநட்பினோ
ருருவமெனிலுருவுமரு வெனிலருவுநிகழ்வதனை
யுன்னுமனதினுமொன்று செயலினதைமுத்தர்தா

மொருநொடியிலெளிதிலுணர் தரவுதவுமுடிவையமு
துண்ணுமிமையவர்சிந்தை யணுகரியதைத்தொனூ
லுரையதனின்மருவிமரு விலதையமர்செயமுடுகு
மொன்னலரையடுசிங்க மனையரைவெறுத்திடா
வுரிமையொடுநிலவியதை யணுவிலணுவெனநிறையு
முண்மைவடிவெனநின்ற வொருமையைவழுத்துவாம்
வருமமிகுதகுவர்குல மழியவிடுமயிலணியு
மன்னவனையரனன்று வழிபடும்விதத்தினான்
மறைபலவுநுவலுமுயர் பிரணவமெனொருபொறியின்
மன்னுபொருளினைவிண்ட வரதனைவிடப்பலால்
வலிமருவுமுரகபதி நெளியநடமிடுமயிலின்
வன்னமளவறவிஞ்சு கலபநிழலிற்பொனேர்
வனிதையர்களிருவரொடு திகழ்குமரகுருபரனை
வண்மையுறுபலகுன்றி லமர்குகனையற்றைநாள்
செருமுமொலியொடுகனலில் வருதகரிவரவல
சின்னவனையுயர்தென்றல் வரையினில்வசிக்குமோர்
சிறுமுனிவன்மயல்களையும் விழியினனையருணகிரி
திண்ணமொடுபகர்செஞ்சொல் விழைபவனைமிக்கவேய்
செறிவனமதனிலெனது கனவின்மிகவுறுதிபகர்
தென்னவனையனம்வந்து வயல்களின்வரப்பிலே
தினமடையும்வளமருவி யமரருலகெனநிலவு
சென்னைநகரினில்வந்த முருகனையளிக்கவே. (௰)

## செங்கீரைப்பருவம்.

திருமகள்விரும்பியவண்மருமகளுடன்பணி தினஞ்செயும்பெருமைபெற்ற
சிவையெடுத்துச்சிமோந் தென்னுயிர்த்துணைவனார் செந்தழல் விழிப்பிழம்பில்
வருமதலையேயெனது மாதவப்பயனே வருந்திடேலென்றுகொஞ்சி
வளையணிகரங்கொண்டு நீராட்டியுயிரெலாம் வாழ்வதுகுறித்துமுன்னா
ளருமறைக்கிழவன்படைத்தபுவியைக் கைவிரலாலுரைத்துத்திலகமிட்
டணிமுலைசுரந்தபாலுதவிடக்களிகூரு மறுமுகக்குமரேசனே
செருமலியுநவவீரர் துணைவந்தமுருகனே செங்கீரையாடியருளே
சென்னைமாநகர்தழைய வருகந்தசாமியே செங்கீரையாடியருளே. (க)

மாதவரும்வானவரும் மற்றையவருந்தினம் வருந்தித்தொழற்கிரங்கி
மணிமிடற்றிறைவனார் புரிதவமுதிர்ந்தவர்தம் வன்னிவிழியிற்பொறிகளா
யேதமறவந்துசரவணவாவியிற் கமலமேறித்தவழ்ந்துமடவா
ரிருமூவர்முலையமுதருந்தியும்பசிகொண் டியங்குமிமவான்வளர்த்த

காதலிமுலைத்துணைக் கலசத்தினமுதங்களித்தருந்தும் பவளவாய்க் [ய்
காங்கேயனேயடியர் பிழைமுழுதொழிக்குங் கடைக்கண்மூவாறுகொண்டா
சீதளமலர்க்குரவ மாலையணிதோளனே செங்கீரையாடியருளே
சென்னைமாநகர்தழைய வருகந்தசாமியே செங்கீரையாடியருளே. (௨)

உலகினிற்றிசையாறெனச்சத்தியாறென வொழிக்கருந்தொழிலைந்தினோ [ர்
டொன்றுபுணராறெனவெழுத்தாறெனச்சமையமுள்ளவாறெனவெண்ணிலா
பலவிதம்பகரவருளானந்தவாரியிற் பத்திநீரிடைமலர்ந்த
பதுமமலரெனமிளிரு மறுமுகக்குமரனே பன்னிருபுயத்தண்ணலே
மலரவன்றருமறையு மானுதவுமாகமமும் வாய்விட்டுரைத்துமுரையா
வண்மையேவடிவாய திருவடிக்குரவனே வானுலகமங்கையர்க்கோர்
திலகமெனவளருமொரு தெய்வானைமகிழ்கணவ செங்கீரையாடியருளே
சென்னைமாநகர்தழைய வருகந்தசாமியே செங்கீரையாடியருளே. (௩)

அத்திரத்தாருகனை வெற்பொடுதடிந்தாயொ ராயிரமுகச்சிங்கனு
மவுணனையவன்சிறிது மதியாதவச்சிர மதைக்கொண்டழித்துகந்தா
யெத்திரத்தோர்மனமும் வெருளவளர்சூர்மா விரண்டுகூறாகவெட்டி
யிமயவர்படுந்துயர் தவிர்த்தாய்வியன்றிக ழிலங்கிழைமடந்தைநல்லார்
பொய்த்திரத்திற்குருகு மென்போலியர்க்குமெய்ப் பொருளளிப்பது குறித்துப்
புவியிலுளமலைதோறு நடனம்புரிந்தாய் பொறித்தோகைமயிலிவர்ந்தாய்
சித்திரச்செங்கைவடி வேலணியுமுருகனே செங்கீரையாடியருளே
சென்னைமாநகர்தழைய வருகந்தசாமியே செங்கீரையாடியருளே. (௪)

இன்பமலியுஞ்சசியு மிந்திரனுமற்றுள்ள விமயவரும்வந்துநின்றா
ரீரிருமுகப்பிரமனுந் தவளவாணியுநி னிசையெடுத்தேத்துகின்றார்
பொன்பரவுமார்பினிற் பைந்துளவணிந்தமுகில் போலுமரிமிகவிழைந்தான்
புரமெரியநகைசெய்த புண்ணியப்புனிதர்தாம் புரிதவப்பயனிதென்ன
வென்பலருமிதழியுட னணியுமொருநான்குபுய மெட்டாகிடக்களித்தா
ரிமயமகளளவற்ற வாஞ்சைகொண்டுருகித்த னிருமுலைப்பால்சொரிந்தா
ளன்பொண்ணியபடி விளங்குமுருகேசனே யாடியருள்செங்கீரையே
யன்னமலிசென்னைநகர் தன்னில்வளர்கந்தனே யாடியருள்செங்கீரையே. (௫)

வண்டமிழ்ச்செஞ்சொற் கவித்தொடைதொடுக்குமவர் வறுமைநோய்முற்றுநீங்
மாநிலத்திற்றிங்க ளொன்றுக்குமும்மாரி வந்துவந்தினிதுபொழியுங் [கு
தெண்டனிட்டுன்னைமிக நம்புமவர்தமைநிந்தை செய்யுமவர்குலநசிக்குஞ்
செங்கோல்விளங்கிக் கொடுங்கோல்பிடிக்குமவர் சீரழிந்திடுமேவுணராற்
றண்டமடையாதும்பர் களிகூர்வர்மாதவந் தழையுமலரோன்வகுத்த
சட்சமையமும்பெருகு மற்றையர்விளம்புபொய்ச்சமையமெல்லாமொளிக்கு
மண்டமுகடெங்கும்விரி யுங்கலபமயிலாளி யாடியருள்செங்கீரையே
யன்னமலிசென்னைநகர் தன்னில்வளர்கந்தனே யாடியருள்செங்கீரையே. (௬)

## வே று.

பணிபவர்சிந்தையி லுண்மைநலந்திகழ் பத்திமிகுத்தாடப்
பங்கயமாத ருட்சிவையோடு பரிந்துவியந்தாடத்
திணிபெறுதோள்வய வீரரிகற்பிணி தீர்கைநினைத்தாடச்
செங்கண்முராரி முதற்பலர்கொண்ட திடுக்கமொழிந்தாட
மணியுமிழ்கட்செவி யாடிடவாடு மயூரமுடன்சேவல்
வாழியெனக்கவி பாடுநராட வனப்புறுகிண்கிணியோ
டணிகலனுட் வசைந்துமகிழ்ந்தினி தாடுகசெங்கீரை
யாசறுசென்னையில் வாசமுறுங்குக னாடுகசெங்கீரை. (எ)

சந்ததமன்பர்கள் சிந்தையிலுற்றொளிர் சண்முகமதியாடச்
சத்திமுதற்பல பற்றியசெங்கை தடம்புயமுட்னாடக்
கொந்தலர்வெட்சி கடம்புகுராமலர் கூதளமோடாடக்
குஞ்சிமணித்திரு வரையொடுபண்டி குலுங்கிடுநகையாடச்
செந்தமிழிற்றுதி செய்பவருக்கருள் சீறடியுங்கழலுஞ்
சீர்மலிதண்டையு நூபுரமுந்திகழ் செங்கனகப்பதிசே
ரந்தரவாணர்கள் சென்னியுமாடிட வாடுகசெங்கீரை
யாசறுசென்னையில் வாசமுறுங்குக னாடுகசெங்கீரை. (அ)

தன்னனதந்தன தந்தனதானன தந்தாதந்தான.

மும்மலவெம்பவ மின்றியமேலவர் முன்கூறுஞ்சீர்கொண்
முன்னவனென்றொளி ரும்பலயானைகண் மொய்ம்பார்கொம்போடு
தம்மதமிஞ்சி முழங்கியுலாவிய சஞ்சாரஞ்சோலை
தண்முகில்பைந்தினை யுந்திவில்வேடுவர் தங்கூர்வன்பாரு
மெம்மதமொன்றிய தொண்டருமேவியி தெந்தேவின்முன
மென்னவிளம்பி வணங்கிநிலாவிடு மின்பாருங்கோவில்
செம்மணிகொண்ட குறிஞ்சியின்வானவ செங்கோசெங்கீரை
சென்னையில்வந்த மருங்கதிர்வேலவ செங்கோசெங்கீரை. (௯)

சின்னமொழிந்த பெரும்புகழீபவ செங்கோசெங்கீரை
செம்மணியென்ற நிறம்பெறுசேவக செங்கோசெங்கீரை
சின்னவனென்றிடி னுங்களிகூர்குக செங்கோசெங்கீரை
தென்னவனென்றும் வருங்கருணாகர செங்கோசெங்கீரை
சின்னலமென்ற னெடும்பகர்மேலவ செங்கோசெங்கீரை
திண்மைபொருந்திய செந்தகர்மாவல செங்கோசெங்கீரை
சின்னமுழங்க வருங்குருதேசிக செங்கோசெங்கீரை
சென்னையில்வந்த மருங்கதிர்வேலவ செங்கோசெங்கீரை. (௰)

# தாற்பருவம்.

நீறுபுனைந்தகனகவனா நெருப்புமலையொன்றளித்தாற்போ
னிலவுங்குமரகுருபரனே நெடுவேலணிந்தபுயத்தானே
யாறுமுகத்தெம்பெருமானே யடியார்க்கெளியமுருகோனே
யனந்தம்விளையாட்டுடையானே யருணகிரிக்கன்றருள்புரிந்து
கீறும்பவளமுகத்தினொரு கிளியதாக்கிமணியொடுபொன்
கிளர்கேயூரத்தணிந்தோனே கிரிகண்முழுதுந்திரிவோனே
சீறுமரவமிசைநடிக்குஞ்சிகியாய் தாலோதாலேலோ
சென்னைநகரிற்பவனிவருஞ்சேந்தா தாலோதாலேலோ. (க)

சீரார்பரங்குன்றுதியெனச் செப்பும்படைவீடாறுடுஞ்
செந்தூர்முதலாத்தமியேன் சொற்றிகழுமாறுருவந்தோனே
யேரார்மயிலிற்கதிர்வேல்கொண் டிமையார்பரவமுனிவர்தொழ
வியம்பற்கரியசமராடி யிகல்வாளவுணக்களைகளைவாய்
காரார்மேனித்திருமாலின் கண்ணின்மணியாமெனவுதிக்குங்
கன்னிமார்களிருவர்முலைக் களபங்கமழுங்கவின்மார்பா
வாரார்சடிலத்தரனுதவு மமுதேதாலோதாலேலோ
வணியார்சென்னைப்பதிபுரக்கு மரசேதாலோதாலேலோ. (உ)

பாகமுணராப்புன்கவிஞர் பனுவற்றொகைக்குமவர்விரும்பும்
பரிசீந்தருள்வேனெனவொருக்காற் பகர்ந்தபவளக்கனிவாயாய்
சோகமுழுதுமறக்களைந்து சுகவாழ்வுதவும்பெருங்கருணை
துலங்கும்விழிகளீரொன்பான் றேய்ந்தமுகமாறுடையானே
யேகமாகிப்பலவாவா யிமையார்சேனைக்கொருமுதல்வா
வெண்ணுயிரவர்கழுவேற வியலாற்கறுவுமிளையோனே
நாகமணிவார்பரவுகுரு நாதாதாலோதாலேலோ
நலஞ்சேர்சென்னைப்பதியாளு நம்பாதாலோதாலேலோ. (ங)

பத்திநலத்தோர்க்கெளியோனே பரமானந்தத்திருநடனம்
பயிலும்பரமன்விழிப்பொறியாய்ப் பதுமத்தடம்புக்குருவானாய்
சித்தித்திறலுமெய்ஞ்ஞானச் சீருங்கொடுக்குஞ்செயலோனே
செங்கணெடுமொன்மருகோனே திகழ்வேலணியுந்திரடோளா
முத்தித்தலைவாமுழுமோன முதலாமுருகாநறைகமழு
மொய்யார்கடம்புபுனைவோனே மொழிதற்கரியபுகழாளா
தித்திந்திடுஞ்சொற்குறமகள்சேர் தேவேதாலோதாலேலோ
சென்னைநகரில்விளையாடுஞ் செல்வாதாலோதாலேலோ. (ச)

வாவிமலர்ந்தநறுங்கமல மலர்மேற்புதுநீர்த்திரையொதுக்க
மணிச்சூன்முதிர்ந்துபெரிதொலிக்கும்வளைவாழ்வதனைக்கயல்பாயக்
காவிலுலவிச்சிலவீதி கடந்துபலவாமனைவாயிற்
கடையிற்புகுந்துமடமாதர் கழுத்தினெழில்கண்டுளநாணிச்

சேவிலிவர்வார்செவிக்கணியாந் திறமைநாடிக்களிகூர்ந்து
தெண்ணீர்ச்சாலினருகின்மணி திகழக்கான்றுதுயில்வளஞ்சேர்
தாவில்சென்னைப்பதிமுருகா தாலோதாலோதாலேலோ
தனிவேற்குமரகுருபரனே தாலோதாலோதாலேலோ. (௫)

காருங்குளிர்தென்றலுமுலவுங் கவினர்சோலைக்குரங்கினினங்
கமழ்பூந்துணரின்கள்ளருந்திக் களித்துக்குதித்துத்திரிதல்கண்டு
வாருங்கிழியப்பணைத்தமுலை மடவார்படைசூழ்மதவேடன்
வரியார்கருப்புச்சிலைவாங்கி மலர்வாளிகளைப்பொழிவதனற்
சோருமயல்கொண்டொன்றையொன்றுதொழுதுபுணர்ந்துபலவினது
சுளைவிட்டெறிந்துவிளையாடித் துலங்கும்வளத்தாற்சுரர்புகழ்சீர்
சாருஞ்சென்னைப்பதித்தலைவா தாலோதாலோதாலேலோ
தனிவேற்குமரகுருபரனே தாலோதாலோதாலேலோ. (௬)

## வேறு.

பரமன்விரும்பியபிரணவமெய்ப்பொருள் பகர்தருசண்முகனே
பங்கயமங்கையர்தங்கணவர்க்கருள் பன்னிருதோளானே
சரவணவாவியினூடுபிறந்து தவழ்ந்தமுதற்பொருளே
தண்ணருண்மாரிபொழிந்தடியார்புடை தன்னையளிப்பவனே
குரவமலர்த்தொடைசூடி மடந்தையர்கோலமொழிப்போனே
குன்றுதொறுடியெனெஞ்சினும்வந்து குதிக்குமெழிற்குகனே
சரபமெனத்தகுசேவலணிந்தவ தாலோதாலேலோ
தாழ்வறுசென்னையில்வாழ்வுறும்வேலவ தாலோதாலேலோ. (௭)

கஞ்சமலர்ப்பிரமன்றனைவென்றுயர் கையுறுசெய்யவனே
கார்கடலன்னநிறத்திருமாலருள் கன்னியர்தங்கணவா
நஞ்சமயின்றபிரானழலம்பக நல்கவரும்புதல்வா
ஞானவினோதசிவாகமுளார்பணி நண்ணியபுண்ணியனே
யஞ்சலளித்துமெனெஞ்சம்வருந்த லறிந்துறையுங்குகனே
யனைமுகத்தொருவன்றுணையாவரு மாறுமுகத்தரசே
சஞ்சலமுற்றுமொழிக்குமகாரத தாலோதாலேலோ
தாழ்வறுசென்னையில்வாழ்வுறும்வேலவ தாலோதாலேலோ. (௮)

## வேறு.

தத்தனதந்தன தன்னன தானன தானாதானனா.

தத்தையிலங்கியபன்னிருதோள்கொள்வி சாகாதாலேலோ
சற்சனர்சிந்தையினண்ணிடலீயுமு தாராதாலேலோ
சித்தையிகழ்ந்தவருன்னரிதாகிய தேவாதாலேலோ
செக்கருமொஞ்சியசெம்மைகுலாவிய தேகாதாலேலோ

நத்தையணிந்துளகைம்முகில்பேணிய நாதாதாலேலோ
நக்கன்வணங்கலினுண்மையையோதிய நாவாதாலேலோ
வித்தையனந்தமுமன்னியநீறணி வேளேதாலேலோ
விற்பனர்மிஞ்சியசென்னையில்வாழ்கதிர் வேலாதாலேலோ. (௯)

தனதன-தந்தன-தன்னன-தானன-தானுதானுனு.

சருவசுதந்தரசண்முகதேசிக தாலோதாலேலோ
தகுவர்பயங்கொளமின்னியவேலவ தாலோதாலேலோ
தருவனாயன்றருகன்னிகைநாயக தாலோதாலேலோ
சமணழியும்படிபன்னியபாவல தாலோதாலேலோ
சருவொடுசெந்தினைதன்னையுமார்பவ தாலோதாலேலோ
சரவணமொன்றியதண்மலர்வானவ தாலோதாலேலோ
தருமனைவென்றவர்கண்மணியானவ தாலோதாலேலோ
தமிழ்நயமிஞ்சியசென்னையில்வாழ்குக தாலோதாலேலோ. (௰)

---

## சப்பாணிப்பருவம்.

குரவமலருஞ்செச்சை மலருமலர்நீபமுங் கூதாளமும்புனைந்து
குன்றங்கடோறுங் குறிச்சிதொறுநடமிடுங் கோலாகலக்குமரனே
யரவரசினுடலநெளி வுற்றலையவிளையாடு மணிமயிற்கலபகிழவூ
டரிவையர்களிருவரொடு பவனிவருமொருவனே யமரரொடுமுனிவர்தாமும்
பரவசிசரர்தமது குலமறக்களையும்வேற் படைகுலவுபுயவீரனே
பங்கயமலர்ப்பொகுட் டுறையும்விதியறியாத பரமரகசியமுணர்ந்துஞ்
சரவணப்புனலிலொரு சிறுகுழவியானவா சப்பாணிகொட்டியருளே
தன்னைநிகர்சென்னையினின் மன்னிவளர்சண்முகா சப்பாணிகொட்டியருளே

கானவர்கள்கண்டெடுத் துக்குடிலில்வைத்தெமது கருகூலமென்றுகொஞ்சிக்
கண்குலவுபீலியக் தானையும்பலகறைக் கலனுந்திருத்தியப்பா
லேனலிற்பரண்மீ திருத்திடக்கவணொ டிளங்குயிலெனக்குலாவு
மெம்மைதருதினைமா விழைந்துகிழமுனிவேட மிட்டுமுன்பட்டபாடு
வானவர்கண்மகளறிந் தூடிக்கொளக்கெஞ்சி வஞ்சமன்றுன்றனுவன்
மனதிலவளாவலுட லத்தெனச்சொல்லியவண் மகிழுங்குறிப்பறிந்து
தானனுகிமெல்லெனச் சருவுமணவாளனே சப்பாணிகொட்டியருளே
தன்னைநிகர்சென்னையினின் மன்னிவளர்சண்முகா சப்பாணிகொட்டியருளே.

கொங்காருமென்மலர்த் துணர்மருவுகற்பகக் குளிர்சோலைநீழலின்கட்
குலவுநவமணியாத னத்தமரர்பலருங் குனிந்திறைஞ்சக்குவிவுரு
வங்காவிமலரனைய விழிமினர்நடமாட வம்புயப்பருமலனைநே
ராயிரங்கண்ணொடு கொலுவிருப்பவன்வலி தளித்தமகளருகிருக்கப்

பைங்கானகத்தொரு குறத்திக்குமயல்கொண்ட பண்பினனம்புமன்பர்
பலர்நிற்கவென்னைப் பரிந்தாண்டொருண்மையும் பகரத்துணிந்தமுருகா
சங்காயகுழைநம்பர் தரவந்தகந்தனே சப்பாணிகொட்டியருளே
தன்னைநிகர்சென்னையினின் மன்னிவளர்சண்முகா சப்பாணிகொட்டியருளே.

வஞ்சகீமனக்கயவ ருணர்வரியபுகழ்கொண்டு மலைதோறிலங்குமரசே
வள்ளியினுமென்றனக் கினிதாகுமன்பர்பகர் வண்டமிழெனப்பகர்ந்தாய்
செஞ்சரணயுகளங் குறிப்பார்கடமைநிந்தை செய்யுமவர்குலமழிப்பாய்
சேவலங்கொடியொன்று திண்புயங்கருதுநர் செயம்பெறக்கண்டுமகிழ்வாய்
சஞ்சலமொழித்தெழிற் பன்னீரிலைக்குளுறு தவளவெண்ணீறுதானே
சருவபிரசாதமென நம்பிடுங்கவுமாரர் சமரசவிளக்கமாவாய்
குஞ்சரமுகக்கடவு ளுடன்வந்ததுணைவனே கொட்டியருள்சப்பாணியே
குற்றமறுசென்னையினி லுற்றகுமரேசனே கொட்டியருள்சப்பாணியே. (௪)

வாரமிகுபொன்னகர்த் தேவர்கோன்மனைமுன்றில் வாயின்மும்முரசுகொட்ட
வளமருவுபாற்கடலில் வந்தமின்னுருள மகிழ்ந்துநெடுவீணைகொட்டச்
சூரன்முதலாமவுணர் நெஞ்சிற்றிடுக்கெனத் தொலையாதபறைகொட்டலூன்
றுய்க்குமகல்வாயசுரமங்கையர்கள்கண்ணீர்தொடுத்தருவியென்றுகொட்டப்
பூரமிவர்வாள்கணவ னெடுமோயனன்னவர்கள் புந்தியினிலுவகைகொட்டப்
பொதியைமாமுனியனைய புண்ணியர்கண்மதுரம் பொலிந்ததுதிகொட்டமற்
கோரமிகுபூதகணர் தோள்கொட்டவின்றுநீகொட்டியருள்சப்பாணியே [றுங்
கொற்றமிகுசென்னையினி லுற்றகுமரேசனே கொட்டியருள்சப்பாணியே. ()

## வேறு.

ஆலக்கொடுவாய்ப் பணியணிபூண் டருந்துமிரையுமதுவாக்கொண்
டதன்மேனடிக்கு மயில்விரிக்கு மழகார்தோகைப்பெருநிழலின்
ஞாலத்தினையுண் டுமிழ்ந்தபிரா னளினமலர்க்கண்ணுதவுமிரு
நல்லாரருகிற்களிகூர நடுவீற்றிருந்து ஞாங்கர்முனைச்
சூலப்படைவெண் குலிசமுதற் றுலங்குமவைபற்பலபூண்டு
தொண்டுபுரிவார் வசிக்குமிடந் தோறுந்தினம்போய்விளையாடுங்
கோலக்குமரகுருபரனே கொட்டியருளாய் சப்பாணி
குறைதீர்சென்னைப் பதிமுருகா கொட்டியருளாய்சப்பாணி. (௬)

மதிக்குந்திருப்பாற்கடலமுதம் வழியுமொழிப்பாவையர்சூழ
வன்னக்கிளிமேற் றினம்பவனி வருவான்றொடுக்குமலர்க்கணையால்
விதிக்குமுதுநூனெறிதவறி வீணுட்கழித்து மனம்புண்ணாய்
வெறுக்கையுடையார் மனைதொறும்போய் வெதும்பியெனைப்போன்மெலியா
கதிக்குவிருப்புற்றருந்தமிழாற் கனவினிடத்துங் கடம்பணியுங் [மற்
கழலைப்பரவியெழுத்தாறுங் கருதும்பெரியோர்கண்காணக்
குதிக்குங்கருணைக்குகவேளே கொட்டியருளாய் சப்பாணி
குறைதீர்சென்னைப் பதிமுருகா கொட்டியருளாய்சப்பாணி. (௭)

தனதன தானன தன்னன தந்தன தத்தன தத்தான.

கணவமொடடிய கன்னியர்சிந்திய கற்பணிமிக்கேய்தல்
கதிரவனூர்வெயி லென்னவிலங்கிடல் கைக்களிறுற்றுசின்
மணமதனீொரு மும்மையுமிஞ்சிடன் மட்குதலற்றாரும்
வளையுமிழ்மாமணி வெண்மைதுலங்கிடன் மத்தமெருக்காதி
யிணரொடுசூடின ரன்னவர்தம்புடை யித்திறமொப்பாகு
மெழில்வளமாயிர மன்னுநெடுந்தெரு விற்றெருறுமெய்ச்சீர்கொள்
குணதரர்வாழ்வுறு சென்னையில்வந்தவ கொட்டுகசப்பாணி
குருபரனாகிய சண்முகபுங்கவ கொட்டுகசப்பாணி. (அ)

மதியணிவார்சடை யண்ணல்வணங்கலின் மற்றையர்கற்காத
மறைபொருளோதிய வண்மைபெறுங்குக மற்புயவிற்காரர்
துதிபகர்சேவக விண்ணவர்முன்படு துக்கமொழித்திடில்
சுவணநிலாவிய நன்னகரின்பருள் சொற்பெருமைச்சில
விதியழமோதிய பன்னிருதிண்கர வித்தகமுற்பாவ
வினைமலிசாரணர் தம்மைமுனிந்தவ வித்தைகளொப்பாய
கொதிதிரையோலிடு சென்னைபுரந்தவ கொட்டுகசப்பாணி
குருபரனாகிய சண்முகபுங்கவ கொட்டுகசப்பாணி. (௯)

தானன தந்தன தன்னன தையன தத்தானத்தான.

கூரநெடுங்கதிர் துன்னயில்வல்லவ கொட்டாய்சப்பாணி
கோமளமொன்றிய கன்னியர்புல்புய கொட்டாய்சப்பாணி
கூ.ரறிவின்சில புண்ணியருள்பவ கொட்டாய்சப்பாணி
கோபமிகுந்தக ரின்மிசையெய்தினை கொட்டாய்சப்பாணி
கோரணிமிஞ்சிடு மம்மணர்வைவினை கொட்டாய்சப்பாணி
கோகனகம்பொரு பன்னிருகைகொடு கொட்டாய்சப்பாணி
கோரமில்சுந்தர மன்னியசெய்யவ கொட்டாய்சப்பாணி
கோதில்வளந்திகழ் சென்னையில்வைகினை கொட்டாய்சப்பாணி. ()

# முத்தப்பருவம்.

சாலிப்பயிரில்விளைந்தமுத்துந் தவளநிறச்சங்குமிழ்ந்தமுத்துஞ்
சசியின்முகிலிற்றழைத்தமுத்துந், தந்திமருப்பிற்றயங்குமுத்தும்
வேலிக்கழையில்வெடித்தமுத்தும் வென்றிமதன்கைச்சிலையின்முத்தும்
விளம்புமிவைநேர்முத்தனைததும் விரும்பிச்சிறிதுமேலிவடையேன்
பாலிப்பவனான்முகன்கனகப் பதியோன்பெறும்வாழ்வையும்வெறுத்துன்
பதம்பேணிவோர்தமைப்பணிவேன் பரிதியிருமூன்றெனத்திகழு
மோலிக்குமரகுருபரனே முத்தந்தருகமுத்தமே
முழங்குங்கடற்சென்னையிற்குமரா முத்தந்தருகமுத்தமே. (௧)

அழியும்பொருளீதழியாம லவிரும்பொருளீ தழிந்ததுபோன்
றழியாப்பொருளீதெனமூன்று மறியப்புரியும் பிரணவத்தி
னுழியொன்றியமெய்ப்பொருளைவிரித் துமையாளமரு மிடப்பாகத்
தொருவன்றனக்குமலயமலை யுறையுந்தமிழ்க்கா வலன்றனக்கும்
பொழியுமதுரக்கவிபாடும் புனிதக்கிளியா மருணகிரிப்
புலவன்றனக்கும்வளங்குலவும் போரூர்முனிவன் முதற்பலர்க்கு
மொழியும்பவளத்திருவாயா முத்தந்தருக முத்தமே
முழங்குங்கடற்சென்னையிற்குமரா முத்தந்தருகமுத்தமே. (௨)

திருந்துந்தவளக்கமலமலர்ச் சீரார்பொகுட்டின் மிசையனம்போற்
றினம்வீற்றிருந்து கலைமுழுதுந் தெரிக்குங்கருணைப்பெருமாட்டி
கருந்தும்பிகளாடியகூந்தற் கற்றையனைய வியற்றமிழ்க்குங்
கரந்தாளிதழ்போற் சிவந்திலகுங் கவினுரிசைக்குங்கலன்கலைமேல்
பொருந்துநிறநா டகத்தினுக்கும் புலவர்விரும்புமவைகொடுத்து
பொருப்புத்தொறுமாடிடுமவனேபுத்தேளினர்கோவெனல்கடவேன்
முருந்துநகைவா யிருமூன்றுன் முத்தந்தருகமுத்தமே
முழங்குங்கடற்சென்னையிற்குமரா முத்தந்தருகமுத்தமே. (௩)

மின்னார்முலைக்குங்குமக்கோட்டில் வேரிக்குமுதமலர்வாயில்
விடவாளரவக்கடிதடத்தில் வீணைமயல்கொண்டுழல்வேனைத்
தன்னால்வலியத்தடுத்தாண்டு தமிழ்வாரிதியின்முழுக்காட்டித்
தடமாமலையின்மிசையுருட்டித் தனித்தோர்கனவிற்றருமுத்த
மென்னுருயிரினழுக்ககற்றி யிமையார்க்கரியபெருவாழ்வை
யீயவிலையால்விழைகின்றே னின்னேதரினன்றியாவருக்கு
முன்னுமுளைத்தமுருகோனே முத்தந்தருகமுத்தமே
முழங்குங்கடற்சென்னையிற்குமரா முத்தந்தருகமுத்தமே. (௪)

## வேறு.

எப்பொழுதுமம்பலத் தாடிக்கபாலத் திரந்துண்டதந்தையாரு
மிழையெனத்திகழ்சிற் றிடைப்பேதையென்றுரு வெடுத்துற்றவன்னையாரு
மெப்பொழுதுகாட்டுமொரு சுடருற்றவயிறிலகும் வேழமுகவண்ணனாரும்
வேலையிற்கமடமொடு மீனாகியுஞ்சிறிது விளையாடுமோமனாரு
மிப்பொழுதுவரல்போத லென்னுமொருநிலையற் றிலங்குதிருமாமியாரு
மிருமனைவிமாருமொரு கிளியுமெனதுள்ளமு மியம்பரியவுவகைகொண்டு
முப்பொழுதுமுத்தமிடு முருகையனேயின்று முத்தங்கொடுத்தருள்வையே
முதிர்புகழ்ச்சென்னையிற்குடிகொண்டகந்தனேமுத்தங்கொடுத்தருள்வையே.

சத்தியமதாகவொரு முத்தமென்கனவினிற் றந்ததுண்டருணகிரிநீ
தானெனப்பலகா லுரைத்ததுண்டின்சொற் றமிழ்க்கடலுயர்ச்சியென்று
பத்தியுறுசாட்சியறி சீட்டுக்கொடுத்தவுட் பட்சமுண்டிணையில்கலிகோய்
படருற்றபேரொனப் பொருளிரந்துழலெனப் பலவூர்க்கனுப்பலுண்டு

பொய்த்திரையெனத்தக்க மூவேடணைப்பேய்கள் போராடவிட்டதுண்டு
பொதியைமுனியாதியர் மகிழ்ந்துதழுவத்தகும் போதசாரத்தைநல்கி
முத்திதரலுண்டென்னின் மயின்மீதுவந்தின முத்தங்கொடுத்தருள்வையே
முதிர்புகழ்ச்சென்னையிற் குடிகொண்டகந்தனேமுத்தங்கொடுத்தருள்வையே.

தத்தன தந்தன தன்னன தையன தனனு தத்தந் தந்தனனு.

எட்குணிறைந்திடு மெண்ணையையொவ்விடு மியல்பாகிற்கும்புங்கவனே
யெற்குநினைந்திடும் வண்மையைநல்கிட வெனவேநித்தஞ்சிந்தைசெய்வாய்
கட்குடிவண்டுகள் பன்னியபஃறொடை கனபூண்மொய்க்குந்திண்புயனே
கற்புமலிந்துள பன்னியர்நல்லுமை கழருர்வத்தின்சம்பிரமா
புட்குறவன்குக னென்னினுமெய்யருள் பொழிசீர்முற்றுங்கண்குவியாய்
புத்தியில்வஞ்சக முன்னியபொய்கெடு புகழ்வாழ்வுற்றுன்றன்கழலா
முத்தியில்வந்திருண் மும்மையைவெல்லுவன் முடியாமுத்தந்தந்தருளே
முப்பொருளுந்திகழ் சென்னையில்வைகிய முருகாமுத்தந்தந்தருளே. (௭)

தனதனதத்தன தனதனதன்னன தனனுதத்தந் தந்தனனு.

விதிமறையிற்பகர் மகமெனமன்னுயிர் வெருள்கூரக்கொன்றுண்டறியார்
விலைமகளிர்க்கதி மயல்கொடுசொன்னவை விரைவாயிட்டுந்தொண்டுசெயா
ரதிவிதசித்திர மதுரவியன்மலி வமர்பாடற்கண்டும்பழியா
ரருள்விழியைத்தரு குரவரின்முன்னவ னயில்வேல்பற்றுஞ்சிங்கமதே
துதியெனப்பகர் புலவர்மதன்மலர் தெர்டநாணுற்றஞ்சுந்தெளிவோர்
துரியபதத்துறு முழுநிலைதுன்னினர் சுரரான்மெச்சும்பண்பினர்நேர்
முதிரறிஞர்க்குயி ரெனவளர்சண்முக முடியாமுத்தந்தந்தருளே
முறையினடப்பவர் பலர்வளர்சென்னையின் முருகாமுத்தந்தந்தருளே. (௮)

## வே று.

தனதனதானன தன்னனதந்தன தத்தனதத்தனனு.

வயமதனுணது புன்னைமலர்ந்தருண் மற்கண்மிகுத்துணலான்
மயல்கொடுபாடிட விண்முகிலம்பிடை மட்டில்புனற்கொடுபே
ரியல்புறுமோரொலி பண்ணிடவெண்டின மிற்பிறகிற்செலலா
லெமனென நூல்வலை பின்னியவன்கைய ரெய்த்துநுளைச்சியர்பா
னயமொடுபேசிட மின்னுசெழுங்கய னற்பனைமட்டையின்மே
னகுகனிசூழ்குலை யின்மிசையுந்திட நச்சரவக்கடிநேர்
முயலுடலான்மகிழ் சென்னையில்வந்தவ முத்தமளித்தருளே
முழுதுணர்பாவல சண்முகமுங்கொடு முத்தமளித்தருளே. (௯)

முருகுநிலாவிய பன்மலைகொண்டவ முத்தமளித்தருளே
முனைமலிவேடுவர் பெண்ணைமணந்தவ முத்தமளித்தருளே
முருகுகுகூதள மன்னுநெடும்புய முத்தமளித்தருளே
முதிர்கவிவாணர்க ளெண்ணமறிந்தவ முத்தமளித்தருளே

முருகுகெடாதுறும் வண்மைபெறுங்குக முத்தமளித்தருளே
முதல்வர்வினவியி வுண்மைமொழிந்தவ முத்தமளித்தருளே
முருகுயர்வீதிகொள் சென்னையில்வந்தவ முத்தமளித்தருளே
முழுதுணர்பாவல சண்முகமுங்கொடு முத்தமளித்தருளே. (௰)

---

## வாராவணப்பருவம்.

கந்தாவருகத்திருஞானக் களிறூர்ந்தருமைக்கவுமாரர்
கண்முற்றிகழ்வாய்வருகாறுங் கமலமலரிற்கடவுண்மிகச்
சிந்தாகுலத்திற்படமுனிந்து சிரத்திலிடித்துத்தளைபூட்டுஞ்
செல்வாவருகச்சிவன்பணியுந் தெய்வக்குரவாவருகவிரு
பந்தாமுலைக்குஞ்சரிதழுவும் பவளமலையேவருகவொரு
பரண்மீதிருந்தாளடிபரவிப் பணிவாய்வருகப்பார்ப்பதியாண்
மைந்தாசென்னைப்பதிக்குமரா வருகவருகவருகவே
மயில்வாகனத்துப்பெருமாளே வருகவருகவருகவே. (௧)

தளஞ்சேர்கமலமலரோங்குந் தண்ணீர்த்தடத்திற்பசுந்தேனுந்
தயங்குமிசைவண்டினமுமணி தருஞ்சூலுளையும்வளைத்திரளுங்
குளஞ்சேர்மொழியார்விளையாட்டேங் கொல்லுமவர்கண்மலர்க்கொதுங்குங்
குவளைத்திரளு மகல்வானிற் குதிக்கச்சலிபாக்கொழுமையுறு
மிளஞ்சேவினமுமுழுகியெழு மெருமைமுலைக்கண்சொரிபாலு
மெகினத்தொனியுமிருக்கையுந்தோய்ந் திமையாருலகமெனத்தோன்றும்
வளஞ்சேர்சென்னைப்பதிமுருகா வருகவருகவருகவே
மயில்வாகனத்துப்பெருமாளே வருகவருகவருகவே. (௨)

ஆடவருகவெடுத்துமுகந் தணைக்கவருகப்பலபணியு
மணியவருகத்திருமுலைப்பா லருத்தவருகவலருமலர்
சூடவருகவுடற்புழுதி துடைக்கவருகக்குதலைமொழி
துலங்கவருகமடிமீதிற் றுயிலவருகவெனவுமையாள்
கூடவிருக்கும்பெருமான்கண் குழைச்சங்கணிகாதொடுகுளிரக்
கொஞ்சியழைக்கில்வருங்குமரா கூவுமொழிகேட்டிலைகொல்லோ
மாடமலிசென்னையிலொருக்கால் வருகவருகவருகவே
மயில்வாகனத்துப்பெருமாளே வருகவருகவருகவே. (௩)

தறுதுமருமைத்திருவுளத்தின் றுயார்முலைப்பான்மணங்கமழ்பற்
றவிர்ந்துமடவாரிதழ்விரும்பத் தகும்பன்முளையாப்பருவத்தே
பெறுதண்டமிழான்மிகத்துதித்தும் பிரசமலர்ப்பூசனைபுரிந்தும்
பெரியோர்பதந்தோய்ந்துதிர்ந்ததுகட் பிறங்குஞ்சுடர்முற்றலைக்கணிந்தும்

வறுமைக்கனலாற்சுடுண்டு மலைமீதுருண்டுந்தமியேன்முன்
வந்தாயிலையேயந்தோவென் வருத்தமுழுதுமறியாயோ
மறுவில்புகழ்ச்சென்னையிற்றலைவா வருகவருகவருகவே
மயில்வாகனத்துப்பெருமாளே வருகவருகவருகவே. (௪)

## வேறு.

முத்தமிழ்ப்பனுவற்பெருக்கினைக்கனலினொடு முந்நீரில்விட்டெறிந்து
முப்பத்துமுக்கோடிதேவர்முதலியாவரையு முறைமாறிநிந்தைசெய்துஞ்
சத்தவிதபேதங்கலந்தபொதுவேடர் தரித்தும்பொருட்கலைந்துந்
தாளநகைமதிவதனமகளிரிளமுலைநலந் தன்னைக்குறித்துழன்றுஞ்
சுத்தபரமானந்தமுற்றவல்லோர்கள்பலர் சூழமகிழ்வாழ்வினிச்சை
தொலையாதுவளரப்புரிந்தனையுனைக்கண்டு தொழநாடிமிகமெலிந்தேன்
சித்தருக்கரசாயசிவனும்வழிபடநிலவு தெய்வநாயகவருகவே
சென்னைமாநகர்தழையவருகந்தனேயதிக சீக்கிரத்தினில்வருகவே. (௫)

அருணகிரிதானென்றொராயிரந்தரம்வந் தருட்கனவிடத்துரைத்து
மஞ்சலென்றிருகரங்காட்டியும்பொருளிரந் தலையவிட்டனையன்றியுஞ்
சருவபிரசாதமென்றிலையிலுறும்வெண்ணீறு தந்துமடமங்கைநல்லார்
தருமயலுமலிவுறக்கண்டனையிவற்றினொடு சாற்றிடத்தக்கவாய
பெருவழக்கின்னமுமனந்தமுண்டன்பரெதிர் பேசாமல்விடுவதில்லை
பீலிநிழலிற்றிகழும்வேலினொடுநீனவிற் பிறங்காதிருக்கைமுறையோ
திருமகள்பிரானுக்குமருமகனெனக்குலவு தெய்வநாயகவருகவே
சென்னைமாநகர்தழையவருகந்தனேயதிக சீக்கிரத்தினில்வருகவே. (௬)

## வேறு.

தனதன தனதன தனதன தனதன தன்னனதனனா தனதனா.

அரன்வழிபடமகிழ்குருவெனமொழியினு மன்னவனுதலுடவிர்வதா
மழல்விழிதரவருசிசுவெனநுவலினு மங்கனமிசைவாமியல்பினு
னிரவலரொடுபலபுலவர்கண்மிடிகெட விம்மையிலருள்கூர்பெருமையா
னிமகரர்மறுவிலர்சிலருலவிடனிக றொன்னுநன்முகமாறுடையவேள்
சரவணபவனழகியமயின்மிசைதிகழ் தன்மையனடியார்பகைவரூர்
சலதியின்முழுகிடமுனிபவன்மறமகள் சம்மதவழிபோநடைகொள்சேய்
திரமுறுபரமெனுநிலைதவறிடனொளிர் செந்நிறமுகிலேவருகவே
தெளிதமிழ்நயமுணருணர்வினர்மருவிய சென்னையின்முருகாவருகவே. (௭)
அலைகடலணிபுவிமலர்மகளொடுதின மண்ணியபுயமான்மருகனே
யரவமுமதியமுமிதழியுமவிர்சடை யண்ணலையகலாள்புதல்வனே
கொலைமலிநிசிசரர்தமையவர்பவமொடு கொன்முனைநெடுவேல்வயவனே [ய்
குகுக்குகுகுகுகுவெனுமொழி தருகொடிகொண்மலைநிகர்தோள்வரிசையா

நிலைதொனிசுவைநிறமறிகிலர்கவியையு நெய்ம்மலிகுரவோடணிகுவாய்
நெறிகளினுயர்வதுகருணையதெனுமொரு நின்னயமுடையாருறவனே
சிலைமதன்மலர்தொடவனசரர்குடிலிடை சென்மலரடியாய்வருகவே
தெளிதமிழ்நயமுணருணர்வினர்மருவிய சென்னையின்முருகாவருகவே. ()

## வேறு.

தன்ன தனன தனன தனன தன்ன தனன தனதன.

பருவமகளிருருகியினிது பன்னுமழகவருகவே
படிறர்கதறிமறுகுகொடுமை பண்ணுமொருவவருகவே
யிருமினிடையினிலவுபவள மென்னுமுருவவருகவே
யிமயமகளுமரனுமருமை யெண்ணுபுதல்வவருகவே
கருணையருவிசொரியு நெடியகண்ணின்மிகையவருகவே
ககனவனிதைமுகர வுதவுகன்னவணியவருகவே
செருவிலுயரும்வலிமை குலவுதென்னர்தலைவவருகவே
திருவும்விதியின்மனையு மருவுசென்னைமுருகவருகவே. (௬)

தய்யதாத்த தன்னதாந்த தனனதனன தனதன.

வள்ளிமாக்கொடுண்ணு மாண்டிவருகவருகவருகவே
வைதபாட்டுநண்ணு சேந்தன்வருகவருகவருகவே
வள்ளலாக்கமன்னுமாண்பன் வருகவருகவருகவே
மையின்மேற்கொடுன்னுபாங்கன் வருகவருகவருகவே
வள்ளைமாப்பெண்முன்னுகாந்தன் வருகவருகவருகவே
வல்லவேற்கைதுன்னுதோன்றல் வருகவருகவருகவே
வள்ளர்போற்றுமஞ்ஞைதாங்கி வருகவருகவருகவே
வையமேத்துசென்னைவேந்தன் வருகவருகவருகவே. (௭)

# அம்புலிப்பருவம்.

## சாமம்.

சீதகிரணப்பிரபை மலிவுற்றுவெண்ணிறந் திகழவருகின்றசீருஞ்
சேயிழைமடந்தையர்கள் சிலர்நிந்தைசெய்யச் சிலர்க்குவகைநல்குபண்பும்
வேதனொடுவேந்தமத வேளுக்குமேலென்ன மெய்ப்புலவர்செப்புபுகழும்
வெள்ளத்தினும்பொருவில் வெற்பினுமிகச்சென்று விளையாடுகின்றவியனு
மாதமொருநாளுலகி லனைவோரும்விரதமொடு வழிபடத்தக்கமாண்பு
மழுவாளிகண்ணில் வருவோனெனப்பலநூலு மாறுதுணைக்குமியல்பு
மாதவனடுச்சென்று மீளலுமிவற்குமுள தம்புலீபாடவாவே
யன்னமமர்செய்துலவு சென்னைமுருகையனுட னம்புலீபாடவாவே. (௧)

நல்லகிர்த்திகைமகளிர் காதலனெனப்புலவர் நவிலச்சிறந்துபல்லோர்
நடுவினிற்கொலுவிருந் தும்பர்வழியாயிந்த நானிலஞ்சுற்றிமலரோன்
சொல்லவளோராறு நெறிகளின்பொதுவாய்த் துலங்கியொருமங்கைவலிதிற்
றேயுநலமெய்தியீ ரொண்கலையின்வெவ்வேறு தோற்றமெனவுருவெடுத்து
வெல்லவலமேடத்தின் மீதேறிமற்றுமனம் வேண்டுசிலவாகனத்தின்
மேற்கொண்டுபல்லுயிரும்வெருளவுலகெங்கணும் விரிந்தெமனும்வெட்கநிற்கு
மல்லறமுனிந்திடுத விருவர்க்குமுடைமையா லம்புலீயாடவாவே
யன்னமமர்செய்குலவு சென்னைமுருகையனுட னம்புலீயாடவாவே. (உ)

செங்கரும்புச்சிலைக்கஞ்சித் தொடற்கரியசேயிழையை மருவுபண்புஞ்
சித்திரத்தினுமதிக வுல்லாசமாகச் சிறக்கின்றபெருவனப்பும்
பங்கயமலர்த்தொகுதி நாணுமுகமுந்துணைப் பட்சமும்பட்சியுறவும்
பனிமலர்த்தருநிழற் புலவர்குலம்வாழமுன் பாடுபட்டுயர்சீர்த்தியுஞ்
சங்கரன்சடிலந் தொடும்பேறுமொருகளிறு தலையாற்சுமக்குநலமுஞ்
சலதிநடுவிற்சென்று மீளலுங்கொளுமிவன் றனையனையனீயெனத்தேர்ந்
தங்கரங்கொண்டுவா வாவெனவழைப்பதா லம்புலீயாடவாவே
யன்னமமர்செய்குலவு சென்னைமுருகையனுட னம்புலீயாடவாவே. (௩)

## பேதம்.

பதினாறுகலையுடைய னீயிவன்கலையாறு பத்தோடுநாலுநம்பும்
பத்தருக்குதவுவோ னரவினைக்கண்டுட் பயந்ததுவிழுங்கியுமிழுந்
ததிநாடிமேவிவைநீ யிவனேறுமயிலுந் தடந்தோளிலுறுசேவலுந்
தடையறக்கொத்திக் கிழித்துண்ணுமிந்திரன் றனதேவல்செய்குவாய்நீ
புதிதாயமணிமுடி தரித்தவன்விரும்புமுயர் பொன்னகரில்வைத்தோனிவன்
போரவுணர்பேர்சொலி னடுங்குவாய்நீயவர் புறங்காணவல்லானிவ
னதியாவலுற்றுனை யழைக்கத்தகாதுகா ணம்புலீயாடவாவே
யன்னமமர்செய்குலவு சென்னைமுருகையனுட னம்புலீயாடவாவே. (௪)

முன்போதுசூரியர்கள் பலர்நாணமிளிருமணி முடியாறுகொண்டோனிவன்
முளரிமகிழொருபரிதி முற்படினுமுள்ளவொளி முழுமையுமழுங்குவாய்நீ
பொன்போகம்விழைகின்ற தேவர்களிலொருவனீ புரதகனனுதியோரும்
போற்றுமுயர்புகழ்துன்று புனிதவேளிவன்மதன்புனையுமொருகுடையாவைநீ
மின்போலுமலர்மக ளிடத்தவனையீன்றவனும் வெட்கவருசாமியிவனீ
வெளிறிலகுசயரோகி யிவனருட்சுடரா விளங்குதிருமேனியுடையா
னன்போடும்வாவென வழைப்பதனதிட்டமே யம்புலீயாடவாவே
யன்னமமர்செய்குலவு சென்னைமுருகையனுட னம்புலீயாடவாவே. (௫)

மலரவன்கைகொண்டு சிட்டித்தபொருணீ வருந்தியவனழவிடித்து
வன்றளையிலிட்டகை யுடையனிவனின்னுடல் வளர்ந்துகுறைவாமிவன்ற
னிலகுடலொரோதன்மை யென்றென்றுநிற்கும்விண்ணிட மன்றியறிகிலாய்நீ
யிவனண்டபிண்டங்க ளெங்கணுந்திரிகுவா னிடைவிடாமறவுனக்குன்

லெகறியவொருசிறிது மறுவில்லையிவனுக் குனக்கிறப்பும்பிறப்பு
முண்டிவனைநம்புமவர் தொண்டர்க்குமவையுறு துவகையுற்றுனையழைத்தா
னலகில்வளமருவுமலை தொறுநடமிடுங்குகனொ டம்புலீயாடவாவே
யன்னமமர்செய்குலவு சென்னைமுருகையனுட னம்புலியாடவே. (சு)

## தானம் - வேறு.

மயிலாலரவப்பகைநீங்கி மலர்க்கண்ணருளான் மறுத்திர்ந்து
வழங்குமிலைவெண்டிருநீற்றுன் மாறுச்சயநோய் வழக்கொழிந்து
கயிலைக்கிரியார்செவிகேட்கக் கழறும்பொருளை யுணர்வதனுற்
காலபயமுந்தவிர்ந்துமலர்க் கடவுள்விதியுங் கடந்துதமிழ்ப்
பயிலுமுனிவன்முதலாய பழமைக்கவுமா ரரிற்கூடிப்
பலவாறும்பெரும்பேற்றைப் பரிசாமெனப்பெற் றிடலாகு
மயில்வேற்குமரகுருபரனே டாடவருவா யம்புலியே
யழகார்சென்னைப்பதிக்குகனே டாடவருவா யம்புலியே. (எ)

வேலுமயிலுந்துணையெனுஞ்சொல் விளம்பியறியாக் கவிஞரையும்
வேதன்வகுத்தநெறியாறும் விடுத்தோருயிர்கொன் றுணவுகொள்ளு
மாலுந்தியபாழ்மதம்புகுந்து வஞ்சம்புரிவோர் தமையும்வென்று
வல்லோர்வணங்குந் தலந்தொறும்போய் வளமைத்தமிழாற் றுதிபாடிப்
பாலுமமுதும்பலகோடி பத்தருடனே பகிர்ந்தருந்திப்
பாருள்ளளவுந்திகழ்புகழும் பதமும்பெறலாம் படப்பாம்பு
மாலுந்துயின்மான்மருமகனே டாடவருவா யம்புலியே
யழகார்சென்னைப்பதிக்குகனே டாடவருவா யம்புலியே. (அ)

## தண்டம்.

உன்னைவிழுங்கியுமிழ்வானை யொருக்காற்பிடித்துக் கொவேந்தோ
னுடலையிவன்றுண்டரிலொருவ னுரவாட்படையா லொறுத்ததுவும்
பொன்னைநிகரு மிவன்றேசைப் புரவிதிருமா லிவர்கருடப்
புள்ளையெளிதிற் புசித்ததுவும்போதனிவர் வாலோதிமப்புட்
டன்னையிவன்கைப்பெருஞ்சேவ றட்டாதெடுத்துப் பருகியதுஞ்
சீர்தந்தகருண்டானையுண்டு தறுகண்கொளிலெவ்விதமாமோ
வன்னையெனும்வேற் படையானேடாட வருவாயம்புலியே
யழகார்சென்னைப் பதிக்குகனே டாடவருவாயம்புலியே. (கு)

## வேறு.

தந்தன தத்தன தன்னன தானன தந்தன தந்தனனு

தந்தியுனைப்பொரும் வெண்ணிறமாமமு தவகவளங்கொளலே
சண்டைவிருப்புட னுன்னிடமேடம தன்பகைநின்குலமே
திந்திமிதித்தக தொம்மெனவாடிய செஞ்சிகிஞ்சுணலே
தின்பெறுருக்குட மன்னியகாலிகல் சிந்தமுனிந்திடலே

வெந்திடுமக்கினி யென்னவவீரர்கள் வென்றிமலிந்துளதா
மின்றிகழ்சத்திகொண் முன்னவனுடிடும் விந்தைசெய்கின்றவரோ
மந்திரமுற்றருள் சண்முகவேளிடம் வந்தருளம்புலியே
மங்களமிக்குயர் சென்னைவிசாகன்முன் வந்தருளம்புலியே. (௰)

# சிற்றிற்பருவம்.

அருமைப்புலவர்பகர்தமிழ்ப்பாட் டனந்தம்வினவிக்களிகூர்ந்து
மம்பொற்பிடியுங்கருங்குயிலு மனையார்மகிழ்முத்தாடியுநற்
றருமத்தொடுபாவமுமிமையாத் தடங்கண்மலராற் பார்வையிட்டுந்
தாய்மாரெழுவர்முலைப்பாலுஞ் சருவுந்தினைப்பிண்டியும்புசித்து
மருமுற்றியசெங்கடம்பாதி மலர்மிக்கணிந்துமலைதொறும்போய்
மாறுநடனம்புரிந்துநிகழ் வழக்கமுழுது மறந்தனையோ
திருவுக்கினியமருகோனே சிறியேஞ்சிற்றிற்சிதையேலே
சென்னைப்பதிவாழ்குமரகுரு தேவாசிற்றிற்சிதையேலே. (௧)

பொல்லார்நிணத்தைக்கழுகாதி புசித்துமகிழுஞ்சமராடப்
புலவர்பதியிலவுணர்குலம் புகுதாவண்ணம்புரந்துவக்கக்
கொல்லாவிரதப்பெருந்தவமே குறியென்றுணரார்சமையநெறி
குலையத்திருவாய்மலர்திறக்கக் குறவர்மகளுங்குஞ்சரியு
மல்லாடிடுமுன்னடுத்தீர்க்க மதுரத்தமிழையிகழ்தியோர்
மணிநாவறுத்துக்கனலிவிட வழுத்துமவர்க்கு வரமுதவச்
செல்லாதெமையோரெதிராக்கிச் சிறியேஞ்சிற்றிற்சிதையேலே
சென்னைப்பதிவாழ்குமரகுரு தேவாசிற்றிற் சிதையேலே. (௨)

மருத்தாமரையானுணர்வரிய மறையின்சிரத்தி லாகமத்தின்
மதியம்புனல்கொக்கிறகாதி வயங்குஞ்சடையில் வானுலகத்
தருத்தாரகத்தாரொலும்பணியுந் தடமார்பகத்திற் றமிழ்முனிவன்
றனதுள்ளகத்திற்கவுமாரத் தவத்தோர்வாயத் தருமேட்டில்
விருத்தாகரக்குங்குமத்தனத்து மேனைமகளார் மேகலையில் [கைத்
விழியிற்பலவாமலைக்குவட்டில் விளங்கித்தொனிக்கும் வியன்சதங்
திருத்தாண்மலரிற்பொடிதோயச் சிறியேஞ்சிற்றிற் சிதையேலே
சென்னைப்பதிவாழ்குமரகுரு தேவாசிற்றிற் சிதையேலே. (௩)

யாங்கள்வருந்திமணற்கொழித்தீண் டிதுசோறடும்வீடிதுகூட
யிரவிற்றுயிலுமரங்கிதுநிற் கியைந்தபூசைக் கிடமிதுநற்
பாங்கர்மகிழ்பட்டகசாலைப் பக்கத்திண்ணை யிதுவிதெனப்
பலவாறுயபெயரமைத்துப் பகுத்துச்சமைத்த விதம்பாராய்

தாங்கலரியதுயரொமக்குத் தந்துமகிழே லெம்மொடுநீ
தானுமிருந்துவிளையாடிற் றலைமையுனதென்பதுந்தவறே
தீங்கருணராப்புகழோனே சிறியேஞ்சிற்றிற் சிதையேலே
சென்னைப்பதிவாழ்குமரகுரு தேவாசிற்றிற் சிதையேலே. (௪)

அன்னமூதநற்பல்லுணவுமுனக் களித்துவணங்கிநீமகிழ்வுற்
றருந்திக்கழிக்குமவைதாமே யருள்வாழ்வெனப்பெற்றமையேமா
வன்னத்தளிர்மெல்லிளமேனி மகளிரினத்தினீவிரும்பும்
வண்ணமணத்தற்குதவேமா மதிவாணுதலில்வெயர்வரும்ப
வின்னபணிகண்முடித்ததற்பி னேன்வந்தனையென்றிசைத்தேமா
யாதுபிழையாமிழைத்தேமென் றிவ்வாறுளத்திற்சினங்கொண்டாய்
சின்னவிரற்றுட்டுணைநோவச் சிறியேஞ்சிற்றிற்சிதையேலே
சென்னைப்பதிவாழ்குமரகுரு தேவாசிற்றிற்சிதையேலே. (௫)

## வே று.

தந்தியின்பேரொலியு முகிலொலியுமேலிடத் தாவிப்பயந்தொதுங்கிச்
சந்தவண்டமிழெனப் பொழிகின்றபெருமழைத் தாரைகள்சகித்திடாமற்
கந்தியிற்றென்னையிற் பூவிரியுமடலெனுங் கவிகையின்கீழ்க்கிடந்து
கதிர்வெயிற்கண்டேன் பலவினிற்பாய்ந்துமுதிர் கனிகளைக்கீறியுண்டு
மந்திரசடாக்கரஞ் சிறிதுமொழியாதகவி வாணர்களெனப்பிணங்கி
வண்டுண்டுமிஞ்சியமலர்க்கட்குடித்துவெறி மண்டைமேற்கொண்டுகனிகட்
சிந்திடும்பொழின்மருவு சென்னைமாநகர்முருக சிற்றிற்சிதைத்திடேலே
சிறியேமையெதிரா மெனக்கண்டுநோஞ்செய்த சிற்றிற்சிதைத்திடேலே. (௬)

வாயஞ்சிடாதிரக் கின்றவர்முனிடிபோலும் வன்சொல்லுரைத்துளேமா
வந்தவர்பசித்திருக் கப்புசித்தேப்பமிடு மாகொடுமைசற்றுளேமா
நீயன்றிவேறுமொரு தெய்வமுண்டெனவெங்க ணெஞ்சிற்குறித்துளேமா
நெறிதவறியுயிர்வதைத் தூனுண்டுதேமொரு நீசரையடுத்துளேமா
பேயஞ்சிவம்பினி லுயிர்ப்பலிகொடுக்கின்ற பித்தரைமதித்துளேமா
பெரியோரையும்புலவர் தங்களையுமதியாத பேராண்மைகொண்டுளேமா
தேயமெங்கும்பரவு சென்னைமாநகர்முருக சிற்றிற்சிதைத்திடேலே
சிறியேமையெதிரா மெனக்கண்டுநோஞ்செய்த சிற்றிற்சிதைத்திடேலே. (௭)

நம்பிவந்தவர்தமது கண்களைக்கட்டியு நடுக்காட்டில்விடலாகுமா
நானுனக்கடிமையென வழிபடுமெய்யடியவர்க ணைவுறச்செயலாகுமா
தம்பியொருவனையேவி யந்நாளுரைத்தமொழி தனைமறந்திடலாகுமா [குமா
தண்டமிழ்ப்பொதியைவரை தருசெம்புநதியினிடை சாற்றல்பொய்த்திடலா
கொம்பினிற்றிகழ்முலைக்கோதையர்க்குருகியுட்கூச்சமிக்குறலாகுமா
குற்றம்பொறுத்தெம்மை யாண்டுகொண்டாலுலகுகுடிபோகுமெனலாகுமா
தெம்பிலுயர்வார்மருவு சென்னைமாநகர்முருக சிற்றிற்சிதைத்திடேலே
சிறியேமையெதிரா மெனக்கண்டுநோஞ்செய்த சிற்றிற்சிதைத்திடேலே. (௮)

## வேறு.

தனதன தானன தன்னன தானன தத்தத்தனதானு.

உயிர்வதையாதிய புன்மைகொள்வாரிட முற்றுத்தவியாதே
யுலகமெலாமிகழ் துன்மதியாளரொ டொத்துப்பழகாதே
பயிரனையார்களை யன்னவராலிடர் பட்டுச்சுழலாதே
பதுமமுளானுவல் சண்மதவாணர்கள் பற்றைப்பழியாதே
வயிரவலாரிதன் விண்ணுலகாசையின் மட்குற்றெருழியாதே
மதுரிதகோமள நன்னயவாணர்சொல் வைப்பைக்கழியாதே
செயிரறுசீர்தரு சின்மயதேசிக சிற்றிற்சிதையேலே
தெளிவினர்மேவிய சென்னையில்வேலவ சிற்றிற்சிதையேலே. (கூ)

திருமகளார்தரு கன்னியர்நாயக சிற்றிற்சிதையேலே
சிவபெருமானது கண்ணருள்பாலக சிற்றிற்சிதையேலே
திருகியகோடுறு செந்நிறமாவல சிற்றிற்சிதையேலே
செறிபொழில்சூழ்தரு பன்மலையாதிப சிற்றிற்சிதையேலே
திருடியுமோர்கவி தன்னிடமீபவ சிற்றிற்சிதையேலே
திகழ்துவர்மேல்கொடு பொன்மயிலூர்குக சிற்றிற்சிதையேலே
திருவருண்மேவிடு சின்மயதேசிக சிற்றிற்சிதையேலே
தெளிவினர்மேவிய சென்னையில்வேலவ சிற்றிற்சிதையேலே. (ம)

## சிறுபறை.

தெய்வமொன்றன்பர்க ணிமித்தம்பல்வாருய திருவுருக்கொள்ளுமென்றுஞ்
செந்தமிழ்ச்சந்தக் கவிச்சுவைக்குயர்பேறு செவிகளுக்கில்லையென்று
மெய்வழிகிடக்கப்பொய் வழிதேடியுழலுவது வெவ்வினைக்கொடுமையென்றும்
வீடுபெற்றுப்பிறவி நோய்தவிர்ந்தொழிவதே மேலானபெருமையென்று
மைவனப்பிலகியகண் மங்கையர்களின்பத்தின் வாஞ்சையறலருமையென்று
மாலயன்முதற்றேவர் தாமுமானிடராகி வருவதுஞ்சாதமென்றுஞ்
செய்வளம்பெரிதிலகு சென்னைநகர்வேலவா சிறுபறைமுழக்கியருளே
சிவபிரான்வழிபடத் திகழ்ஞானதேசிகா சிறுபறைமுழக்கியருளே. (க)

அம்பொன்வார்சிலைகொண்டு முப்புரமெரித்தவனு மாடலம்பிகையுமுன்னு
ளமரர்குலம்வாழ்வுறக் கடல்கடைந்தமுதுதவ வரிவையுருவாயினானுங்
கொம்பொன்றொடித்திகலு மவுணேசனுருயிர் குடித்துக்களித்துளானுங்
குலவுகரமாயிரங் கொண்டிருட்பகைவென்று குவலயஞ்சுற்றுவானும்
பைம்பொன்மழைக்கோண் முதற்குரவர்பலருநின் புதுமமுகமாறென்னமெய்ப்
பத்தருணர்வுற்றபடி பலருந்தெரிந்துயப் பதினுலுலோகத்தினுஞ்
செம்பொன்மாமதிள்குலவு சென்னைநகர்வேலவா சிறுபறைமுழக்கியருளே
தென்பொதியைமுனிபரவு சிவஞானதேசிகா சிறுபறைமுழக்கியருளே. (உ)

வெளிறுப்படுபலமுத் தினங்களுஞ்சூலுளைவு மிஞ்சியிளைகின்றசங்கும்
 வித்துருமமிகையுமணி வகைகளும்பலர்மனம் வெதும்பப்பறித்தபொருளாற்
களிபெருகிவேறொருவ ருக்குமிட்டுண்ணுது காலங்கழிக்குமவர்தாங்
 காசொன்றுநூறுகு மெனமரக்கலமதிற் கட்டிவிட்டிடுவபலவுங்
குளிர்கமலமுங்குவளை யும்புரையுமலர்வகைக் குவியலுந்தினமிரந்து
 கொள்ளுமவருக்காய கலமும்பசுந்தழைக் கொத்துமுதலாயபிறவுந்
தெளிகடற்றிரைசிந்து சென்னைநகர்வேலவா சிறுபறைமுழக்கியருளே
 செந்தமிழ்ப்பைங்கிள்ளை யுணர்ஞானதேசிகா சிறுபறைமுழக்கியருளே. (௩)

வடமருவுகவுமார மாதவர்கண்மிகவேலு மயிலுமெனவேமுழக்க
 மதிசூடியைப்பரவு வார்பலருமரகர மகாதேவவெனமுழக்க
வியனிலகுபஞ்சா யுதக்கடவுளாதியரை வேண்டுவோரவரவர்க்கு
 விழைவானபடிமுழக்கக் கலிக்கஞ்சாது விப்பிரர்கண்மறைமுழக்க
நயமலியும்விழிமகளிர் செம்பவளவாய்கொண்டு நற்குரவையொலிமுழக்க
 நால்வகைப்புலவோர்கள் கவிமுழக்கத்தோளி னடுகின்றுசிறகடித்துச்
செயமுழக்குங்கொடிகொள் சென்னைநகர்வேலவா சிறுபறைமுழக்கியருளே
 தென்போரியானனையர் தெரிஞானதேசிகா சிறுபறைமுழக்கியருளே. (௪)

ஒன்றுபடுமொழியக் தேருடைச்சுடரோனை யுச்சியிற்காணுமுன்ன
 முழவரோர்விட்டவிழ்க் குங்கரும்பகடுபல வோடிக்குதித்துவப்புற்
றன்றுமலர்தாமரைத் தெண்ணீர்த்தடத்திடை யவாவறமுழுக்காடிமீண்
 டணிவேயெனக்குலவு கன்னலங்காவினி லதட்டிப்புகுந்தவற்றை
மென்றுசில்முத்தைக் கடித்துமிழ்ந்தகடளவின் மேய்ந்துசெவியசையவாயில்
 வெண்ணுரையுகச்சுவைத் தங்கையொன்றில்லாத வேழமாமெனநடந்து
சென்றுதொழுவிற்றுயில்கொள் சென்னைநகர்வேலவா சிறுபறைமுழக்கியருளே
 தெண்டனிடுவோர்க்குதவி செயுஞானதேசிகா சிறுபறைமுழக்கியருளே. (௫)

## வே று.

காவற்கடவுண்மகளிர்மனங் களிக்கும்விளையாட்டுடையானே
 கருதுமவரைக்கனற்கோபக் காலனணுகாதருள்வோனே
யேவற்றொழிலும்புரிந்துசில ரியம்பும்பனுவல்புனைவோனே
 யீராறுருவனெனப்பெயர்கொண் டெண்ணில்வடிவமெடுப்போனே
சேவற்கொடியொன்றுடையானே சிறுதாட்கொடியிற்சலியானே
 சீரார்கொடியிற்புனைபீலிச் சேலைக்கொடிபாலிரங்தோனே
மூவற்றவிர்மெய்ப்புகழோனே முழக்கியருளாய்சிறுபறையே
 முதிர்வண்டமிழ்ச்சென்னையிற்குமரா முழக்கியருளாய்சிறுபறையே.

கன்னித்தமிழைவேறுளபல் கலையோரிகழ்ந்துகழியாமற்
 காயுங்கனியுமிருக்கவுடற் காதியெவருமருந்தாமல்
வன்னிக்கரத்தானொனவிரக்கும் வல்லார்பெருமைமறையாமல்
 வரையாமொழியுமாகமத்தின் வகையுஞ்சிறிதுமழுங்காமற்

பொன்னிற்பெரிதொன்றில்லையெனப்புகல்வாராண்மைபொலியாமற்
பொய்மெய்யாகிமெய்பொய்யாய்ப் போகிடாமற்புகழ்வார்தம்
முன்னிற்பவனேயுலகெங்கு முழக்கியருளாய்சிறுபறையே
முருகார்பொழிற்சென்னையிற்குமராமுழக்கியருளாய்சிறுபறையே.

தீதுமலிதாருகனுடலிற் றீராமயனேய்தருமலையிற்
றெண்ணீர்க்கடலிற்றிறன்மாவிற் றிகழ்வாளொடுநேர்வருஞ்சூரி
லோதுமெழுவர்வெளிற்றுடம்பி லூரஞ்சேர்குதிரைத்தலைப்பேயி
லோராயிரவருறுங்குகையிலொருபாட்டுணர்வான்றனையெதிர்த்து
வாதுபுரிவார்நடுமார்பில் வளந்தோய்ந்திலங்கு முதுகுளத்தூர்
வந்தாற்பகைத்தோன்மந்திரத்தில் வழுத்தச்சலியார்மனத்துயரின்
மோதும்வடிவேற்குகவேளே முழக்கியருளாய்சிறுபறையே
மூவாப்புகழ்ச்சென்னையிற்குமரா முழக்கியருளாய்சிறுபறையே.

வேறு.

தனதன தனதன தன்னன தானன தனத்த தனதனன.

உனதிருபதமலர்நண்ணியமாதவ ருவப்புமலிவுறவா
னுலகினரவுணர்கள்பண்ணியதீதறு முயர்ச்சிபெறமலர்மீ
தனவரதமுமுறைபுண்ணியவேதிய னணைக்குமிளமுலையா
ளனையவர்தமையிருடுன்னியமூடர்க ளதட்டும்வினைகெடநீள்
கனமெனவுதவிடுதன்மையைநாடிய கருத்தர்பலர்தழனேர்
கலியிடைமுழுகியபுண்ணறவார்புவி களித்துமெலிதுயர்போய்
முனமெனமிளிர்தரமுன்னியெநேரமு முழக்குசிறுபறையே
முதுகடலொலிமலிசென்னையில்வாழ்குக முழக்குசிறுபறையே. ()

தத்தன தத்தன தன்னன தானன தனத்த தனதனன.

முத்தநகைச்சிவைமுன்னருள்பாலக முழக்குசிறுபறையே
முப்புரமட்டவர்கண்மணியானவ முழக்குசிறுபறையே
முத்தர்பெறத்தகுமெய்ம்முதலோர்பவ முழக்குசிறுபறையே
முற்றுமுணர்த்திடும்வண்மைகொள்பாவல முழக்குசிறுபறையே
முத்தமளித்தொருசொன்னுவல்வானவ முழக்குசிறுபறையே
மொய்க்குரவுற்றலர்பொன்மலைநேர்புய முழக்குசிறுபறையே
முத்தமிழ்கற்றவருன்னிட்லீபவ முழக்குசிறுபறையே
முட்டுதலற்றுயர்சென்னையில்வாழ்குக முழக்குசிறுபறையே. (ய)

## சிறுதேர்ப்பருவம்.

புன்னைமலர்வண்டினிசை குயில்பாடுமிசையினொடு பொலிவுறப்புனலருந்தும்
புயலினொடுதென்றல்வந் துலவமரகதநிறப் புள்ளிமாமயில்கலாபந்
தன்னையுஞ்சிறகையும் விரித்தகவிநடமிடத் தாவுகோட்டரமகிழ்ந்து
தண்ணுமையின்முட்கனி தனைக்கொட்டியகன்மலர்த்தாளமுமிடக்கண்டதாற்

பொன்னிலமாவுடைய புனிதநகர்மங்கையர் பொருமையுற்றுக்கணிமையாப்
புலர்வுறத்திகழ்பொழிற்செறிவுடுத்திணையின்மெய்ப் புகழ்பொறுத்துக்குலாவு
சென்னைமாநகரினிற் குடிகொண்டகந்தனே சிறுதேருருட்டியருளே [ஞ்
சிவன்விழிப்பொறியெனச் சரவணத்துற்றவா சிறுதேருருட்டியருளே. (க)

சங்கரன்வியந்துகொளு மிருதலைச்சூலமுந் தமரியப்பதிபுரக்குந்
தலைவன்முதலோர்புகழும் வயிரமுஞ்சாபமுஞ் சாயகமுநெடியவாளுந்
துங்கமுறுபலகையுஞ் சக்கரமும்வளையுந் துறட்டியுங்கயிறுமேந்திச்
சுடரனையசெஞ்சுட்டு வாரணம்பற்றித் துளங்குமிலைவேலணைத்துக்
கங்கணமிலங்கச் சிலர்க்கபயவரதமுங் காட்டியிவையன்றிமற்றுங்
கழறுவார்கழறுமவ் வண்ணமவர்நெஞ்சிற் கவின்றிலைவிபூதியுதவுஞ்
செங்கமலமலரனைய கைகொண்டுசென்னையிற் சிறுதேருருட்டியருளே
தெண்டிரைத்திரள்குலவு சரவணத்துற்றவா சிறுதேருருட்டியருளே. (உ)

அரிநெடுங்கணையாக மேருமலைவில்லாக வரவரசுநாணதாக
வமரரும்பூதரும் படையாகநான்முக மமைந்தவன்சூதனுக
விரியுமறையொருநான்கு மாவாகநீயுணரு மெய்ப்பொருளிருந்தபதியாய்
வெள்ளையறிவுள்ளவரும் விள்ளக்கிடந்தபொறி விசைகொண்டகசையதாகப்
பரிதிமதியுருளாழி யினமாகவரையினம் பரவையினமாதியாவும்
பல்வகையுறுப்பாக நகையினுங்கனலுடைய பரமனெருதலைவனுகத்
திரிபுரம்பொடியாக வருபெருந்தேரிலொரு சிறுதேருருட்டியருளே
சென்னையின்புகழனைய சரவணத்துற்றவா சிறுதேருருட்டியருளே. (ங)

பாலுடைக்கவரியின முழுகிடவவற்றினது பருமடியின்மீதுமுட்டிப்
பைங்கன்றெனக்குழைந் தவைசொரிந்திடன்மிகப் பருகிப்பருத்துவப்பால்
வாலுடற்குருகினந் தனைவெருட்டிக்கமுகில் வாழையிற்றுழைதன்னின்
மலிகுலையபறப்பாய்ந்து மின்னெனக்கோடரமும் வாளரவுமஞ்சவுன்னிச்
சாலுமுகிலைக்கிழித் தாதித்தன்மண்டலந் தாண்டியிமகரன்வசிக்குந்
தலமும்விட்டுத்தனது பெயர்புனையுமுடுவினந் தனையுழக்கித்திரும்புஞ்
சேலுலவுபுனல்வளச் சென்னைநகராதிபா சிறுதேருருட்டியருளே
செம்பவளமலையெனச் சரவணத்துற்றவா சிறுதேருருட்டியருளே. (ச)

## வே று.

கைந்நீடியசெம் புகர்வனப்புக் களிறுபொழியு மதப்புனலுங்
கதலிக்கனிமாங் கனிபலவின் கனியாதியவிற் கசிதேனு
மைந்நீங்கரிய விழிமகளிர் வனசமுகைப்பொற் புறுமுலையின்
மாறுதிழியு மணச்சேறும் வாவிக்கமல மணிக்குவளை
மொய்ந்நீந்தலிற்சிந் தியநறவு மொழியுமிவைநேர் வனபிறவு.
முந்நீர்க்கடலின் புலவகற்றி முகிலுமலையு மணங்கமழச்
செய்ந்நீர்திகழ்சென் னையிற்குமரா சிறுதேருருட்டி யருள்வாயே
சேவ்வேலணிந்த புயமுருகா சிறுதேருருட்டி யருள்வாயே. (ரு)

வல்லாருளத்திற் குறியுருள வாக்கிலிருமூன் றெழுத்துருள
மலர்மென்கரத்தின் மணியுருள வானிற்கதிர்வெண் மதியுருளப்
பொல்லாருடலங் களத்துருளப் புலவர்மிடிநோய் புறத்துருளப்
பொன்னூரமரர் துயர்முழுதும் புலைவாளவுணர் புரத்துருளக்
கல்லாமனத்துக் கயவர்கொடுங் கண்ணீரருவி கரைந்துருளக்
காமர்முழுவெண் டிருநீற்றோர் களிக்கட்டரளங் கனிந்துருள்ச்
செல்லார்பொழிற்சென் னையிற்றலைவா சிறுதேருருட்டி யருள்வாயே
செவ்வேலணிந்த புயமுருகா சிறுதேருருட்டி யருள்வாயே. (சு)

வெப்பசமரி னவவீரர் வெற்பின்மயங்க வுருட்டுமொரு
வேழத்துதிக்கை முதலுறுப்பு வெவ்வேறுருள வுருட்டியப்பாற்
சையமனைய பெருஞ்சியத் தலையுங்கரமு முருட்டியது
தனையுமுருட்டித் தனிச்சூதந் தறிபட்டுருள வுருட்டியொரு
பையல்பரவிப் பணிவானைப் பட்சத்துடனோர் மலைக்குவட்டிற்
பாற்றுக்குதவா வணமுருட்டிப் பரிந்தாண்டருளி யுலகில்விடுஞ்
செய்யபுகழோய் சென்னைநகர்ச் சிறுதேருருட்டி யருள்வாயே
செவ்வேலணிந்த புயமுருகா சிறுதேருருட்டி யருள்வாயே. (எ)

வே று.

தனதனதனதன தன்னனதானா தனத்ததனதானா.

இருள்படுமிடியிடை யின்னமுநாயே மிளைத்துமறுகாதே
யெமன்விடவருபடர் நின்னடியார்பா லெதிர்த்துமொழியாதே
கருணையில்வனசர ரன்னவர்மேலோர் கருத்தையிகழாதே
கடகரிநிகரொலி துன்னியபாவார் கலக்கமடையாதே
மருமலர்சொரிதரு கன்னல்விலானூல் வழக்குமலியாதே
மரகதமணிநிற மஞ்ஞையைநேர்வான் மகிழ்ச்சியுறமேனா
ளொருபரசிவனருள் சண்முகநாதா வுருட்டுசிறுதேரோ
யுயர்புகழ்மருவிய சென்னைவிசாகா வுருட்டுசிறுதேரோ. (அ)

தந்தனதந்தன தன்னனதானா தனத்ததனதானா.

நம்பறிவின்றிய புன்மையர்தாமே நடுக்கமடையாரோ
நன்றியுணர்ந்துனை யெண்ணுநர்மேலா நலத்திலமிழாரோ
கொம்பவிர்கின்றவை யுண்ணவுநாணூர் குதர்க்கமழியாதோ
கொன்றிடலஞ்சிய நன்னெறிசேர்வார் குதித்துமகிழாரோ
செம்பதுமங்கொளு மின்னனையாணீர் திருத்தமருவாதோ
செந்தமிழின்சுவை மும்மையுமோர்வார் தியக்கமறையாதோ
வும்பர்தொழும்பத மன்னியவேலா வுருட்டுசிறுதேரோ
யொண்புகழ்தங்கிய சென்னைவிசாகா வுருட்டுசிறுதேரோ. (கூ)

### வேறு.

தனதய்யனத் தனதன்னனத் தனனாதனத் தனனா.

தெருணல்குமுத் திரபொன்மயச் சிறுதேருருட்டுகவே
சிவனுள்ளுமெய்ப் பதபன்மணிச் சிறுதேருருட்டுகவே
செருவல்லவர்க் கெமவன்மரச் சிறுதேருருட்டுகவே
சிகிமைகளிற்றிவர் தென்னமற் சிறுதேருருட்டுகவே
திருவௌவுபொற் பிடியெண்ணநற் சிறுதேருருட்டுகவே
சினவள்ளியைத் தொழுமன்னவிற் சிறுதேருருட்டுகவே
தெருவைகுமத் தியபின்னவைச் சிறுதேருருட்டுகவே
திறன்மல்குகைக் குகசென்னையிற் சிறுதேருருட்டுகவே.

பிள்ளைக்கவி முற்றிற்று.

௯ பருவம் பத்துக்குக் கவி - நூறு.

---

## வேலுமயிலுந் துணை.

---

நேரிசைவெண்பா.

அந்தரரும்போற்று மணிச்சென்னை மாநகர்வாழ்
கந்தனதுபிள்ளைக் கவிமுற்றுஞ் - சிந்தனையிற்
கொண்டால் வினைப்பிணிபோங் கோடாநுகோடிநல
முண்டாகு நெஞ்சே யுணர்.

---

## தெய்வமே துணை.

உ
முருகக்கடவுடணை.
சென்னைமாநகர்க்கந்தசுவாமி

# திருப்புகழ்.

காப்பு-நேரிசைவெண்பா.

அன்னையெனநகர மத்தனைக்கு மாதரமாஞ்
சென்னைநகர்க்கந்தன் றிருப்புகழ்க்கு-முன்னையொரு
கோட்டாலைந்தாமறையைக் குன்றில்வரைகின்றபுகழ்க்
காட்டானைகாக்கக் கடன்.

## குழிப்பு.

தன்னதனதானதந்த-தொங்கல்-தனதான.

பொன்மலிவுகாடுகின்ற தன்மையுடையார்கண்முன்பு
புன்மைபகராதுன்வென்றி-புகலேனே
பொம்மைநிகராமுடம்பை மெய்ம்மையெனவோதும்வம்பர்
பொய்ம்மதமெலாமடங்க முனியேனே
கன்மமுதலாவிளம்பு மும்மையினுமீறுகண்டு
கைம்மைதவிர்வார்பதங்கள்-பணியேனே
கண்மருவுதோகைகொண்ட மஞ்ஞைமிசையோரிரண்டு
கன்னியர்களோடும்வந்து-னருடாராய்
பன்மறைகள்கூடிவிண்டு மின்னமமையாதுநின்ற
பண்ணவர்முனுள்பயந்த-புதல்வோனே
பண்ணையவாசகஞ்சொ லம்மைகவுமாரியும்பர்
பன்னுபுகழ்வாலைகொங்கை-நுகர்வாயா
ஜென்மவினைமாறவென்று வெண்மைமிகுநீறணிந்த
திண்ணியரொலாம்விரும்பு-முருகோனே
தென்னைகமுகாதியெங்கு மன்னுமெழிலாலுயர்ந்த
சென்னைநகர்வாழவந்த-பெருமாளே. (க)

தன்னதானனதாத்த-தனதான.

கண்ணிலாதவர்போற்பல் வண்ணம்வாடிடவாட்டு
கன்மவாதனைதீர்க்க-வறியாயோ
கன்னனுதியர்கீர்த்தி யுன்னியீகையைவேட்ட
கைம்மகாரதர்நாட்ட-முடியாயோ
புண்ணிலாமதியூக்க நண்ணிநாடொறும்வாழ்த்து
புண்ணியோரெதிர்காட்சி-யருளாயோ
புன்மைதீர்தருநூற்கள் சொன்னவாறயலியாக்கை
புண்ணெனுமதியார்க்கு-ளமைவாயோ

விண்ணிலாடியமூர்த்தி யொன்னலார்புரநீற்றும்
வெம்மையார்நகைவாய்த்த-கனிவாயார்
மின்னும்வார்சடையார்த்த சென்னியாரொதிர்கூற்றன்
வென்னிடார்துடன்மாய்க்கு-மவர்பாலா
தெண்ணிலாவணிகாட்டு சண்முகாவிதிர்வேற்கொள்
செம்மலேயடியார்க்கொ-ரொளியோனே
செந்நெலார்வயலாக்க மன்னம்வாழெழில்பூத்த
சென்னைமாநகர்காத்த-பெருமாளே. (௨)

தன்னத் தனதன-தனதானா.

இம்மைத்தொடர்பினு முன்னைக்கருதிடு
மெம்மைப்புவியின-ரிகழாதே
யெண்ணற்றவிர்தரும் வண்ணக்கவிபெறு
மெண்ணப்புலவர்கண்-மெலியாதே
வெம்மைக்கயவர்சொ லின்னற்புதுநெறி
விண்ணிற்புருடனி-லவிராதே
வெண்ணெய்க்கலமரு கண்ணற்குயர்வருள்
வின்மற்கலபியின்-மிசைவாராய்
கொம்மைக்குவிமுலை துன்னற்குயிலிணை
கொண்மெய்க்குறமகண்-மணவாளா
குன்மப்பிணிதவிர் வண்மைத்தவனொடு
கொன்னித்திலநிழல்-வருவோனே
செம்மைத்துவர்கன லென்னத்திகழொரு
சின்னக்கிரிநிகர்-வடிவோனே
தென்வெற்புதவிய மும்மைத்தமிழ்மலி
சென்னைப்பதியுறை-பெருமாளே. (௩)

தன்னதனத் தானதந்த-தனதானா.

கன்மனமிட்டோர்தங்கண் முன்னமிகப்போயலைந்து
கன்னனெனப்பாடி நொந்து-மறுகாதே
கன்னமலெனப்பேசுகின்ற நன்னயவித்தாரமிஞ்சு
கன்னியர்குற்றேவலுஞ்செய்-துழலாதே
நின்மகிமைச்சீர்விரும்பி யென்னளவிற்கானதொண்டி
னின்னயம்வைத்தேமுயன்று-பிழையேனோ
நின்மலநிர்ப்பாவகஞ்சொ னண்ணருசிற்கோலமென்று
நிர்ம்மயசத்தானவிஞ்சை-யருள்வாயே
வன்மமனத்தாருகன்கை தன்னைமுதற்கூறுகண்டு
மைந்நிறவெற்போடுபொன்ற-முனிவோனே

வைம்மழுமுச்சூலமங்கி துன்னுகரத்தார்வணங்க
மன்னுமறைத்தாரகஞ்சொல்-புலவோனே
தென்மதுரைக்கோயிலின்கண் முன்னமரிட்டோர்மொழிந்த
செம்மொழியிற்சிருணர்ந்து-மகிழ்வோனே
சின்னமெடுத்தூதவன்சொ லம்மணரைப்பாடிவென்று
சென்னைநகர்க்காவல்கொண்ட-பெருமாளே. (௪)

தனதன தன்ன தானனத்-தனதானு.

சரவணசண்முகேசசற் குருபரவென்னவேமிகத்
தமிழ்கொடுபன்னுவார்களைத்-துதியாதே
தமநியவன்னமாதர்சிற் றடிதொழுதின்னல்கூர்மடத்
தனமிகுபுன்மையாலிளைத்-தொழியாதே
யரனரியன்னவாகனத் திவரயனென்னுமூவருக்
கலமருமென்முனியெழிற்-சிகிமேலே
யருகிருபன்னிமாருறக் கதிரயின்மின்னநாளுமுற்
றருமறைசொன்னதாரகப்-பொருளீவாய்
குரவர்களென்னவாழ்பவர்க் கரசெனநண்ணுவார்வினைக்
குலமறமுன்னும்வீறுடைக்-குகவேளே
குருகுலமன்னர்வாழ்சபைக் கிடையமுதுன்னிவாடுமக்
கொடியுணர்தன்மையாளனுக்-கினியோனே
திரமிகுதன்மராசனைக் கொலைசெயுமண்ணலார்தொழத்
தெரிவருமுண்மையோதிமிக்-குயர்வோனே
தெளிதமிழ்பொன்னெனுவெடுத் துரைசெயுநன்மைசேர்துணைத்
திருவளர்சென்னைமாநகர்ப்-பெருமாளே. (௫)

தனனதனதன தனதனதனதன தனனதனதன தனதனதனதன
தன்னத்தனத்ததன தன்னத்தனத்ததன தனதானு.

சரசவிகசித நயமிகுமொழியினர்
கபடமொடுபல களவுறுநினைவினர்
கன்னற்சிலைச்சமர்செய் மன்னற்குரித்துமிகு
படையினதிபதி யெனமிளிர்தகையினர்
நடனவபிநய மிசையொடுபயில்பவர்
கிண்ணத்துணைக்கிணைசொல் வன்னத்தனத்தியர்கள்
சபலமொடுபல விளைஞர்கண்மறுகுற
விழிகளெனும்வலை விசிறிடுகொடியவர்
பொய்ம்மைத்தொழிற்கலவி தன்னைக்குறித்துலகி-லலையாதே
சலசமலர்மிசை யநுதினமுறைதரு
பிரமனுதவிய குறுமுனியருளிய
வண்ணத்தமிழ்க்கடலி னுண்ணிற்கும்விற்பனரை

யிணையில்சமரச வநுபவமதுபெரி
தெனவுளுருகியு மதன்வழிமுயல்வுறு
முண்மைத்தவத்தினரை மண்ணிற்பெருக்கமுறு
சகலவுயிர்களு மகவினமெனுமுயர்
நினைவினெடுமுது நெறிவழியரசுசெய்
திண்ணப்புயத்தரசர் தம்மைக்குறித்தணுவு-மிகழாதே
யரசமரநிழ லதனிடைவழிபடு
பிடகர்முதலினர் தமையிகழ்பகைமையு
மன்னத்தினிற்கழுகு தின்னக்கிடப்பதனை
விரவிநுகர்தரு மிழிவினரனைவரு
மதனைவிடவென மிகமுயல்பெருமையு
முன்னைத்துதித்துநித மெண்ணித்தவித்துருகு
மரியதவமுதிர் நிலைமையுமனல்புனல்
கவரமறைதரு மளவறுபனுவலு
மிம்மைப்பிறப்பில்வர லுன்னிக்களிப்பதுவு-நழுவாதே
யதிகவளமுறு பொதியையின்மகள்பொரு
பொருளையறியமுன் மொழிதருபுதுமையும்
விண்ணிற்சுடர்க்கடவுள் கண்முற்பெருத்ததிரு
மலையிலவணை யருளியசரதமு
மருணைநகருறு சிகரியின்வடபுற
முன்வைத்தசிற்றுணவை யுண்ணற்குறித்தொருசொ
லறையுமதிரக சியமுதலியபல
பலவுமுலகமு மறிதரவொருதர
மெண்ணற்றகட்கலப மஞ்ஞைத்தனிப்பரியின்-மிசைவாரா
யிரவிமதிகன லெனும்விழியுடையவர்
சரபவடிவுகொ டரியுடனிறைதரு
செம்மைப்புனற்பருகும் வெம்மைக்குணத்தமலர்
தவளவுததியி னிடைவருகருவிட
மதனையமரர்க ளுயவெனநுகர்தலின்
ஞம்மற்பொருத்துகளவுன் மத்தர்சித்தர்தொழு
மிறைவர்திரிபுர மொருநொடியிடைபொடி
யுருவமுறவரு மெழிலிளநகையினர்
முன்னைத்தவப்பயனி தென்னக்களிக்கவரு-புதல்வோனே
யிமையவரைமிசை வருமரகதநிற
மயிலையனையவள் குயில்பொருமொழிசில
பன்னித்தனக்குரிய ருண்ணட்புறப்புரியு
மமலைபக்ஷவதி திரிபுரையபிநய
புனிதைவனிதைய ரரசெனுமுமையெதி
ருன்னிக்குறித்துவரு சண்ணைப்பகட்டுமுக

ணியமன்வசமுற முனிதருகழலினள்
சகலபுவனமு முதவியபரைசிவை
கொம்மைத்தனத்தமுத மண்ணித்தழைக்குமொரு-சிறியோனே
வரதனரிமுர கரிரகுபதிசது
ரதருநிறைதரு களமதிலொருதனி
வின்மற்புயத்துவிசை யன்முற்கசைக்கையொடு
குதிரைநடவிய கருணையின்முதியவ
னுரகபதிமிசை யறிதுயிலமர்பவன்
விம்மிப்புடைத்தரிகொள் கண்ணிற்கலப்புனலும்
வடியவழுதுருகிய மகள்கொடிநிக
ரிடையிலளவறு கலைவரவருள்பவ
னன்மைக்குவித்தனைய தொன்மைத்திதிக்கடவுண்-மருகோனே
வகுளதரன்மன மருளுறுமழகிய
குமரகுருபர சரவணபவகுக
வெண்ணித்திலச்சிவிகை தன்னிற்றமிழ்ப்பொழியு
மரியதொழிலொடு மதுரையில்வருமுயர்.
புலவசமணர்கள் குலமெனுமிருளற
லுன்னிச்சுரத்திலயர் தென்னற்குவப்புமுடல்
வளைவுநிமிர்தரு பெருமையுமருளிய
வொருவவெனநனி துதிசெயுமடியவர்
துன்னிச்சிறப்புமலி சென்னைப்பதிக்குளுறை-பெருமாளே. (௬)

தன்ன தத்த தத்த தய்யன தனதான.

கன்னலைப்பழித்தசொல்லிபர்-மயலாலே
கண்மையுற்றதுட்டர்வைதிடும்-வசையாலே
யென்னகத்தடுத்தபஃறுயர்-தவிராதே
யின்னமிப்படிக்குனுள்ளம-துறலாமோ
பன்னகத்துறக்கமுள்ளவன்-மருகோனே
பண்ணியற்றமிழ்க்குவல்லவர்-குருநாதா
தென்னருக்குயர்ச்சிநல்கிய-தனிவீரா
சென்னைபட்டினத்தில்வைகிய-பெருமாளே. (௭)

தன்னதன தந்த தந்த தந்தன தனதான.

புண்ணியமுயன்றுநைந்தசிந்தையொ டுன்னருள்வளந்தெரிந்துகெஞ்சுநர்
பொன்வலையெனும் பெருங்கிடங்கினில்-விழலாமோ
பொய்ம்மொழிபகர்ந்துகொஞ்சுமங்கையர் தம்மயல்வளைந்துகொண்டுதந்து
புன்மையினைவென்றதொண்டருந்துய-ருறலாமோ [ள
வெண்ணிலவுமொஞ்சமிஞ்சிடுந்தகை துன்னியமண்மங்கவென்றவெண்பொடி
மெய்ம்முழுதணிந்தபின்பும்வெம்பிணி-வரலாமோ

விண்ணவர்பணிந்திறைஞ்சுபங்கய மன்னசரணங்களின்புறம்பினின்
மின்னியசிலம்பலம்பவந்தருள்-புரிவாயே
கண்ணிலிமுனம்பயந்தவஞ்சக மன்னவனிடந்துணிந்துசென்றுயர்
கண்ணன்மருகன்கடம்பனென்பவர்-துணையாவாய்
கைம்மலைமுகம்பொருந்துமைங்கர முன்னவன்வருந்திறந்தெரிந்தொரு
கன்னியைமணம்புணர்ந்ததிண்புய-முருகோனே
செண்ணிறைதருங்கொடும்பெருஞ்சிறை மன்னுகழுகும்பருந்துமுண்டமிழ்
செந்நிணமிகுங்களந்தொறுந்திகழ்-புகழோனே
செய்ந்நலமியைந்தபொங்கரின்றலை மைம்முகிலினந்தவழ்ந்தவண்பெறு
சென்னைநகரந்துலங்கவந்தமர்-பெருமாளே. (௮)

தனதன தன்னத் தனதனதய்யன-தனதான.

கருவெனுமின்னற் பிணியிடைநைவுறு
தமியனுமுன்னைக் கருதிடவல்லவர்
கழறியவண்மைத் தமிழுணர்நல்லறி-வடையேனோ
கனிமுதலுண்ணத் தருபொருள்பல்வகை
யுலகிடைமன்னித் திகழவுமெல்லுடல்
களைமிகநண்ணித் தினுமவரவ்வினை-தவிராரோ
மருவளர்பின்னற் குழலியர்மையலி
னலிதருபுன்மைக் கயவர்கள்வைகிய
மனைதொறுமுண்மைப் புலவருமொல்குத-லொழியாதோ
மரகதவன்னச் சிகிமிசைவள்ளியு
மமரர்களன்னப் பெடைநிகர்தையலு
மகிழ்வொடுதுன்னப் படையினமல்கெழி-லுடன்வாராய்
குருகுலமன்னர்த் திரளமர்செய்துள
களமதின்மன்முற் றியபொழுதொள்வளை
கொடுசிலர்தம்மைத் தளர்வுறவெல்பவன்-மருகோனே
கொடுவிடம்வெண்மைக் கடலிடைபையர
வுமிழ்தலும்விம்மித் தொழுதழுமையர்கள்
குறைவறமுன்னுட் கொளுமவர்வெஃகிய-புதல்வோனே
செருமலிதன்மைக் குருகமர்கையினன்
முருகவிழ்பொன்மைத் தொடைமிகுமையொரு
சிறுகிளிபுன்மற் புயனெனிலுள்ளக-மகிழ்வோனே
திருவொடுகன்னித் தமிழ்வளமெய்திய
புகழினைமும்மைப் புவியினர்சொல்லிய
செயமுறுசென்னைப் பதியினைவெளவிய-பெருமாளே. (௯)

தன்னன தானன-தனதான.

பெண்ணரசேநிகர் கன்னியர்மால்கொடு
பின்னியபாழ்வினை-முதிராதே

பெய்ம்முகில்போல்பவ ரென்னவுலோபியர்
பின்னலைவாரொடு-பழகாதே
பண்ணவர்வாழ்வையு மின்னலெனூல்பல
பன்னும்வலோர்தமை-யிகழாதே
பன்னகமேறிய மஞ்ஞையினீயிரு
பன்னியரோடெதிர்-வருவாயே
தண்ணளிவாரிதி யென்னநிலாவிய்
சண்முகவேளெனின்-மகிழ்வோனே
சந்நிதியேகதி யென்னுமவாவுறு
தன்மையர்நோய்வலி-களைவோனே
திண்ணனையாள்பவர் கண்மணியாவரு
செம்மலையேமலைதொறும்-வாழ்வாய்
தென்னவனுகவு முன்னுறைவாயுயர்
சென்னையின்மேவிய-பெருமாளே. (௰)

தன்ன தானன தாந்த-தனதானு.

முன்னநீயருள்கூர்ந்து சொன்னதாகியபாங்கை
முன்னலாவிவணீங்கு-தளர்வேனே
மும்மையாமெனவோர்ந்த திண்ணியோர்பகர்தீங்கு
முன்னெணுவிருள்போன்று-மலிவாமோ
பொன்னவாவிடைமாய்ந்து தன்னையேபுகழ்மாந்தர்
பொய்ம்மைசேர்மொழியாய்ந்து-திரிவேனே
புண்ணியோர்பலர்சூழ்ந்து துன்னமாமயிலூர்ந்து
புன்மைதீரயிலேந்தி-வருவாயே
பன்னகாடவிதாங்கு மண்ணலாரிடம்வாய்ந்த
பன்னிபான்முலையார்ந்த-கனிவாயா
பண்ணருமறைநான்கி னுண்மைசால்பொருடேர்ந்து
பன்னுவானமுதேங்க-முனிவோனே
தென்னனுடதிலேன்று முன்னைநாளினில்வாழ்ந்து
செம்முசாரணவேந்தர்-குலகாலா
செம்மையாடகமேய்ந்து மன்னுமேடைகள்வாய்ந்த
சென்னைமாநகராண்ட-பெருமாளே. (௰க)

தன்ன தன்ன தன்ன தன்ன தனதானு.

இன்னமென்னு மின்னலென்னும்
வன்னிதுன்னு மென்னிலுன்னை
யெண்ணியெண்ணி நண்ணுதன்மை-தவறுமே
யிம்மைநன்மை யென்னவண்மை
துன்னுதொன்மை பன்னல்பொய்ம்மை
யென்னும்வெண்மை மண்ணிலுன்னி-நிலையாமே

யன்னமன்ன முன்னைசொன்ன
கைம்மைதன்னை யுன்னியுன்னை
யண்ணுமும்மை யென்னதென்னல்-பிழையாமே
யம்மவம்ம முன்னமென்ஞெ
டெண்ணிலுண்மை சொன்னவண்ண
மம்மைதுன்னு மஞ்ஞைதன்னில்-வருவாயே
மன்னர்மன்ன ரண்ணலென்ன
விண்ணினண்ணு மன்னவன்முன்
வண்ணமன்ன மின்னுசொன்ன-வடிவேலா
மண்ணைவிண்ணை வெண்ணெய்தன்னை
யுண்ணுமண்ணல் பின்னைகொம்மை
மம்மர்செம்மு கண்ணின்முன்னம்-வருபாலா
தென்னனென்ன மண்ணின்மன்னி
விண்ணின்மன்னை மின்னுமெண்ணில்
சென்னிதுன்னு பொன்னையம்மை-முனிவோனே
தென்னைபுன்னை கன்னல்செந்நெ
லன்னமன்னு பண்ணைதுன்னு
சென்னைதன்னி லெம்மைநண்ணு-பெருமாளே. (௰உ)

திருப்புகழ் முற்றிற்று.

## வேலுமயிலுந்துணை.

நேரிசை வெண்பா.

பொன்னைப்பொருமயில்வேற் புங்கவனைப்போற்றுநர்வாழ்
சென்னைத்திருப்புகழைச் செப்புவார்-முன்னைவினைத்
துன்பங்களெல்லாந் தொலைந்துதொலைவரும்பே
ரின்பங்க ளெய்துநர்தாமே.

## தெய்வமேதுணை.

முருகக்கடவுடுணை.

# சென்னைப்பதிச் சண்முகன்வகுப்பு.

தனனத் தன்னத் தனனத் தன்னத் தனனத் தன்னத்
தனத்த தனனா.

அகிலத்துண்மைப் புலமைத்தன்மைக்
கவிர்நற்கண்ணோத் திருக்குமிளையோ
னருளிற்றுன்னிக் கயமைக்கன்மத்
தசடற்றுன்னற் கினித்தபுகழோ
னலைதற்கொண்மற் கிரிகட்பின்னுற்
றடுகைத்திண்ணற் குயிர்க்குநிகர்வா
னருமைச்சொன்னக் கமலத்தன்னத்
தமர்விற்பன்னற் புடைத்தகரவேள் (ஷ)

சுகிர்தத்தெண்ணத் தரசர்க்கண்மைத்
துணையொக்கும்மைப் புயற்குமுயர்கோ
சுடர்கட்கண்ணிற் கொளுமத்தன்முற்
றெழுதற்கண்ணுற் றுவப்பொடருள்சேய்
சுரருக்கின்னற் பிணிமிக்கண்ணச்
சுமைவைக்கும்மற் புயத்துமுதுசூர்
தொடர்பற்றன்மைக் கடலிற்றுன்னித்
தொலையப்பண்ணிக் களித்தபெரியோ (௨)

னெகினத்தும்விற் றெறிகைச்சின்னத்
தெயினப்பெண்முற் குனித்ததலையா
னிருபொற்கிண்ணத் துறழச்சுண்ணத்
திசைநற்கொம்மைப் பிடிக்குண்மகிழ்வோ
னிமயக்கன்முற் றருமக்கன்னிக்
கினிமைச்சொன்மிக் குரைத்துவளர்வோ
னிரவிக்கும்வெட் கமளித்தம்முற்
றிகன்முற்றுண்விற் படைக்கைமிகையா (ஹ)

னுகிரிற்செய்ம்மற் ககநட்டம்முற்
றொருகரப்புண்முத் தமிழ்ச்சொல்கிளியா
னுதகத்தண்ணுற் றெழிலிக்கம்மிக்
குயர்வெற்பெண்ணிக் கைகயற்றதுடையா
னுரையற்றெண்ணற் குளமற்றம்மைக்
குடலற்றெம்மைக் கலக்கமுயல்வா
னுலகத்தின்மிக் குயர்மற்றுன்னுற்
றொளிர்நற்சென்னைப் பதிச்சண்முகனே. (க)

## சென்னைமாநகர் வேலர் திருவருள் வினோதவகுப்பு.

தனனதன தனனதன தனனதன தனனதன
தன்னதானனதான தனனதனதானனு.

சதுமறைகண்முதலளவில் பலகலைகள்பகர்பகுதி
தம்முளேயமைவாகி யமைவிலதுநீடுமே
சரமசரமெனவுலகி னிகழுமிருவகைமருவு
சன்மவாதனைதீரு மநுபவமதாகுமே
தவளமதகரியிவரு மகபதியையமரொடு
தண்ணறுநிழன்மேவு தருவருகிலாளுமே
தளநிரைகள்குலவவலர் கமலமிசையுறையும்விதி
தன்னைவாய்விடமோது தனிமகிமைசூடுமே
தரளமெறியலைகடலி னிடைதுயிலுமரியினது
தன்மமாறிடிலாழி தனைவலிதிலீயுமே
சரபமென்வடிவுகொடு புவனநிலைபெறவருள்செய்
தன்மையாரநுபூதி யுறவொருசொலோதுமே
சகலபுவனமுமினிது தருகவுரிமடியினிடை
தன்னதானனதானவென நடனமாடுமே
தமிழிலளவறுமினிய துதிபகருமறிஞருணர்
சன்மதாகரமான தனிவெளியின்மேவுமே (௧)

கதிரயிலையநுதினமும் வழிபடுநலறிஞரொடு
கன்மநோய்பகையாம லவரைநனிசூழுமே
ககனமுகடிடியநிமிரலகை மகண்மடியமுது
கன்மகாமலைபேரவொரு படையையேவுமே
கதறியழுதலமருமொர் கொடியிடைகைவிழுமுன்மறு
கைம்முனுளுளதேகொ லெனவுதவிநீளுமே
கடியநமபடர்பதறி யவசமுறவிகழடியர்
கண்முனேபலவாறு திகழ்பெருமைதோயுமே
கருமறவர்கொடியருகி லொருகிழவன்வடிவுகொடு
கன்னியேயருள்கூரொன் மொழிசிறிதுகூறுமே
கபடநினைவறும்விடலை வளையவருதிருடருயிர்
கண்மையோடறமோதி யெளிதுகளிகூருமே
கருதுமடியவரையிகழ் கொடியவர்கண்மிடியினிடை
கைம்மையோடழுமாறு விடுகருணைசாருமே
கவலையிடைதளருமெனை யனையவர்கள்கவியுமுதிர்
கன்னலாலடுபாகை நிகர்வதெனநேருமே (௨)

யதுவிதவனவவெனவு முழல்சமையமுழுமையினு
மண்ணுமோரணுவேனு மணுகிலதென்மூலமே

யருணைநகரதனிலொருசிகரியருகுயுமுனிவ
னன்னபாவலர்பாட லதனிலுளசாரமே
யபரிமிதகலைமுழுது முயிர்வதைசெய்திடல்கொடுமை
யம்மகோவெனவோது மெனுமறிஞர்பாகமே
யசடரொனவுலகிகழ மிகுபுலையிலமிழுமவ
ரஞ்ஞவாசனைமீறி யவமெனும்விரோதமே
யடிபிடியென்மொழி முருடரதரிலடியவர்களுட
னம்மைவேலொடுதோகை யெனவருகிலேல்குமே
யகரமுதலியபொறிகண் முழுதுமிசைமொழிமுழுது
மங்ஙனுகியவீறு பொருண்முழுதுமோருமே
யறிவனவுமறிவரிய பிறவுநடுநிலையுமென
வண்ணலாகமநூல்கள் பகர்தருவிலாசமே
யசனமெனமனைகடொறு நுழைபவரைவெகுள்பவரு
மன்னமேயெனமாறி யலையவிடுநேயமே

திதிபுரியுமரியெனம ணுலகின்மகிழ்பவர்கருது
சின்னமாமலர்போலு மிருசரணரூபமே
சிவனெனவிணுலகிலடை பவர்பலர்தமறிவினிடை
செம்முசீர்புணராறு பொறிகளினுள்வாழுமே
திருமலையின்முகடதிர வுருளொருவனுடல்கழுகு
தின்னமாய்தருஞாய மதுதவிரமாறுமே
தெளிவுமிகுபுனல்குலவு பொருநைநதியிடைபழைய
சென்மமானதையோத வொருவிதநிலாவுமே
சிகரிதொறுமடியரக கமலமலர்தொறுமுலவு
செம்மலேபிரமமெனு மவர்சொல்வழிகூடுமே
திகழ்கனகவரையயலை கடலைமகபதியையடர்
தென்னனுதியரொனவு முலகிடைகுலாவுமே
செவியினமும்விழியினமு மொருமைபடுமரசர்பலர்
செம்மையாநுவல்போது முடிவிலதிபாரமே
செறிபொழிலுமுதிர்தமிழு மிகுதிருவுமருவிவளர்
சென்னைமாநகர்வேலர் திருவருள்விநோதமே.

---

## சென்னையுறைகந்த னிருபாதவகுப்பு.

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததனதன்னதன தந்ததன தானனு.

பத்தியெனுநற்புன னிறைத்ததடமொத்திலகு
பக்குவர்களுளன்னிடவ கண்டநிலையீயுமே
பற்பலநெறித்தலைவ ரொப்பியபொதுத்தகைமை
பற்றுமறையின்முடிவி னின்றுநடமாடுமே

பட்டரொனுநற்பெயர் பொறுத்துளகுருக்களினர்
பட்சமுறுதொன்னெறி விளங்கவிளையாடுமே
பற்றருகனற்கொடு புரத்தைமுனெரித்தவர்சு
பத்தவசிலுன்னிய பெரும்பயனதாகுமே
பச்சைமயிலொத்திமைய வெற்பரசளித்தமகள்
பட்டுமடியின்மிசை தினந்தினநிலாவுமே
பைத்தலைவிரிக்குமர விற்றுயில்கைவிட்டவுணர்
பட்டுவிழவென்முகில் விரும்புமதிநேயமே
பற்றறுதவத்தினர்த மக்குமயல்சற்றுதவு
பத்திரமுமன்னுதிரு வொன்றுமலர்போலுமே
பப்புகமலத்திடை யுதித்தவிதிகுட்டெனுமு
பத்திரவமுண்ணுமு னிகழ்ந்துளசொரூபமே
பைத்துயரொழிக்கமுய லத்தகுமுழுப்புலவர்
பக்கலுறும்வெண்மக ளுணர்ந்துசொல்வினோதமே
பக்கமறவத்திரியனைத்தையு மடக்குமரி
பத்தினியொடம்முறை செயும்பெருமைமேவுமே
பட்டினிமுந்தற்பல துயர்க்கொடுசிறைப்படொரு
பத்தனதுநன்மன மறிந்திடமுனேகுமே
பத்துமுடியுற்றவனை யட்டிடும்விறுட்டருள்செ
பத்திறல்கொண்மன்முனிவனெஞ்சினிடைநீடுமே
பத்தினாயிரத்தமு மிழக்கைகொடிடித்தவல
பத்தொருவன்வன்னமுடி யின்கணணியேறுமே
பட்சியினத்திலுயர் பொற்பொடுநடித்தகல
பப்பரியின்மென்முது கிடம்பழகுமார்வமே
பச்சிலையில்வைத்தபொடி யைப்பெரிதுமெச்சியவர்
பத்தியமிலுண்மைநினை வின்கணநுகூதமே
பத்தயமதுட்புலியெனக் குமுறிவெற்றிமலி
பற்பமணிதன்மையினர் கண்புனையநேருமே (௮)

சத்திரமொடத்திர மெடுத்தமர்விளைக்குமிர
தச்சதுரர்தம்முளு நினைந்துகொள்சகாயமே
தத்துவமுடிப்பினை யடுத்தவர்தமக்குரைசெய்
சற்குரவனொன்னமிளிர் கின்றவர்சினேகமே
சட்டிவிரதத்தினி லிளைத்தவர்நினைத்தபடி
சட்டெனமுனண்ணிட முயன்றுளகுணாலமே
சர்க்கரைநெய்ப்பமவ லெட்பயறுமொக்குகரி
தத்தடிகொண்முன்னுலக முங்கடிதுசூழுமே
சத்தியர்தமைப்பெரி திகழ்ச்சிபுரியற்பர்மிகு
தத்தடையவென்னமுயல் கின்றவரையாளுமே

தக்கமெனுமைக்கட் விடத்தின்முழுகித்தளர்ம
　　தத்தினர்களெண்ணலரி தென்றவெகுதூரமே
சட்சமயநிச்சயமு மொப்பியுமறுத்துமகிழ்
　　சத்தநிலைநின்னய முணர்ந்தவர்சமீபமே
சற்றுமொருயிர்க்கிடர் வரிற்றுடிதுடித்தழுது
　　தட்டழியுநன்மையின ருண்டணுகுபோதமே
சக்கிரியினத்தர செடுத்தவுலகுக்கினிய
　　சத்தமுகின்மன்னுபல குன்றுதொறுலாவுமே
தக்கவிசைமிக்ககுற ளைத்தவனுரைத்தசொல
　　தைக்கொடொருகன்னிகை யுறும்புனமுளோடுமே
சத்துவகுணத்தினை மறைத்தெயினமுட்டையெனோர்
　　தப்புமொழிபன்னுகை யிலங்கழலொடாருமே
சச்சபுடமுற்பகர் பவற்றினைநிறுக்குமொரு
　　தத்தைபகர்வண்ணமள வின்றியவைதோயுமே
தட்டறுவளத்தினுயர் கச்சியினொருத்தன்மகிழ்
　　தற்கவனையெண்முனிவர் தங்களிடைபோகுமே
தச்சரின்முனைப்பகழி விற்பவனிசைத்தகவி
　　தைக்குமிகுபொன்னுதவ வென்றுநசைகாணுமே
தற்புகழ்குறித்துமணி யற்றிடவுரைத்துமனி
　　தத்திரண்முன்வண்மைபெறு துங்கனநுராகமே
தக்கையிடுமெச்சிய ரிறைக்கருகொர்பத்தனவ
　　சக்கலியினின்னல்கெட வன்றுநடைபூணுமே (உ)

மத்திநிலையிற்பெரிது வக்குமறிவிற்பழகு
　　மக்களுயிரொன்னமிக நம்புசுகபோகமே
மட்கலின்மதிச்சடை முடித்தவரிடத்துமைவ
　　லத்திருவர்தம்மிடை விளங்குறுமெஞானமே
மைக்கடனிறத்தரிமுதற்பலருமெச்சும்வெள்வ
　　னப்புவிடையின்மிசை யுறைந்துயர்சுபாவமே
வட்டவிழியைத்திருகு மைக்கருமருப்பையுறு
　　மற்றகரில்விண்ணவர்க ளுய்ந்துகொளவூருமே
வச்சிரமெடுத்தவுண ணைப்பொருசுவர்க்கபதி
　　மத்தகயமுண்மகிழ வும்பிடரிலேயுமே
மற்றிணையில்சத்துவ மெனத்தெளிஞர்செப்பிடுமெ
　　மூக்கரியிலன்னவ ருணர்ந்திடவிராவுமே
வற்றருமதுக்குவளை செச்சைகுரவத்துணர்ம
　　ணத்துயர்வதென்விரி கடம்பனையசேருமே
மற்றடமலர்த்தலை யுதைத்தறுவர்தத்தமடி
　　வைத்தருமைபண்ணிட விளைந்தவவிரோதமே

மட்டவிழ்குழற்சசிமு தற்பலருமுத்திமுன்வ
ளர்த்தபிடிதன்னிரு கரங்களினுநாறுமே
வத்திரமெனத்தழையு டுத்திதணிலுற்றகுயின்
மச்சநிகர்கண்ணருள் சுரந்தவழிசாருமே
வக்கணைவிளைத்தபல பொய்க்கதைகளிற்குமையு
மட்டிகளையங்ஙன மிடைந்துழலவோவுமே
மற்கடவயிற்றிலணை குட்டியெனநத்துமவர்
வக்கிரர்செய்புன்மையை முனிந்திட நடாவுமே
மட்கடமுடைத்தழும கர்க்கெனநினைத்தளவில்
வட்டிபெறுபொன்வினைஞர் நெஞ்சிகழ்விகாரமே
மைப்புயலுகைப்பவன் முதற்பலருயிர்ப்புறவ
ைத்தலையவண்முயலு மந்தணனையோருமே
வைக்கணையறுத்ததலை கைக்கொடுதொனித்தபற
வைக்கயர்வுதுன்னிட விரைந்தினிதுதாவுமே
வற்புறுதமிழ்ப்பனவ னைக்குருகையிற்சதும
றைப்பனவனென்னநல் விலங்கிட்வுசாவுமே (௫)

சித்திரமும்வெட்குமெழி லுற்றிளமைபெற்றுளதொர்
செட்டிமகள்கண்ணெதிர்க ரந்தழையவாயுமே
செக்கரைநிகர்த்தமுடி யுற்றதொரரக்கனது
சித்தமிகவெண்ணவொரு குன்றினிலைகாணுமே
திட்டுமொழிகற்றுள மறக்கொடிதலைக்குமிசை
செக்கனையகன்மலை விழுந்திடுமுனேலுமே
தித்தியொடுமத்தள முழக்கநடமிட்டுவளர்
சிற்சபையின்மன்னருர மொன்றுபொடிமூடுமே
செத்தவனைமற்றொருரு பிறப்பினிலெடுத்தருள்செ
யத்தகுமவன்மவுன மந்திரகுடாரமே
திக்குமொழிகட்குமரு மைப்பொருள்விரித்திடும
தித்திறமைகொண்முனி பகர்ந்தததுதிகூடுமே
செற்றமலியப்பெறு துலுக்கர்கள்குடத்துமணல்
செப்பியவனுண்ணவரு ளுந்தவசியோகமே
சித்தியொடுமுத்தியு முறப்பெரிதுழைக்குமவர்
சிக்குமயலென்னவைக ளைந்திடநுகூலமே
தெற்கினிலிருக்குமெமன் முற்பகரிகற்றொருகைதி
டுக்கமுறமின்னிய சிலம்புகழலோலுமே
சிற்றறிவினைப்பரமெ னப்பகர்கலக்கமறு
தெட்டுடையதிண்ணியரை யென்றுநனிகூவுமே
திக்குவகைபத்தினிலும் வெற்றிபெறநத்தியதி
றற்புதல்வர்சொன்னதல மெங்கணுமளாவுமே

தெற்றிமலர்பொற்புறுகு றிச்சியிலயற்சமய
திட்டமுளரும்வழி படுங்களியிலாழுமே
திப்பியகவித்தொடை தொடுத்தணிபவர்க்கெதிர்தி
ருட்டறிஞர்சென்மவினை யின்கணுறவீசுமே
செற்கொலைமுதற்றவிர்த வத்தினர்நினைத்துணர்தி
ருச்சகளமும்மருவ முங்கொளதிபேதமே
சிச்சியெனவுத்தம நடைக்குரியர்பற்பலர்சி
ரிக்கவருமென்மனதி னும்பதியுமீரமே
சித்தர்பரமுத்தருயர் பத்தர்தருமத்தின்முயல்
சிட்டர்புகழ்சென்னையுறை கந்தனிருபாதமே. (க)

வகுப்பு முற்றிற்று.

## வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

# சென்னைமாநகர்க் கந்தசுவாமிபேரிற் பதிற்றுப்பத்தந்தாதி.

## காப்பு.

பன்னருஞ்சீர்ச்சென்னைப் பதிற்றுப்பத்தந்தாதி
கன்னல்வில்லினானுமெழிற் கந்தன்கழற்கணிவான்
முன்னமொருவேத முனிமொழிந்தவாசகத்தைப்
பொன்னசலந்தன்னிற் பொறித்தானைப்போற்றுதுமே.

## நூல்.

அருள்வாரிதியின்முழுக்காட்டி யகிலத்தினரோடலமருமென்
னிருள்வாதனைதீர்த்தளிப்பதனுக் கின்றாளிரங்கவொண்ணுதோ
சுருள்வார்குழற்பார்ப்பதிமதலாய் துணர்ப்பூங்கடப்பந்தொடையானே
தெருள்வார்மலியுந்தமிழ்ச்சென்னைத் திருக்கோயிலில்வாழ்செவ்வேளே. (க)

செவ்வேலணிந்துமயிலேறித் தேவர்பெருமான்றிருமகளும்
வெவ்வேடுவர்தங்குலக்கொடியு மேவவொருக்கான்மிளிராயோ
பொய்வேதனைதீர்த்தருள்வானே பொருப்பாயிரத்தும்விருப்பானே
கைவேழத்துக்கிளையானே கவினூர்சென்னைக்காவலனே. (உ)

காவற்கடவுள்விரும்புநலங் கருதியுருகுங்கடையேனை
யேவற்றொழில்செய்பவர்பாலு மிரக்கவிடுத்தாயென்செய்வேன்
சேவற்கொடியேயுயர்வெனுஞ்சீர் தெரிவார்க்கெளியசேவகனே
நாவற்பொலம்பூணணிவானே நலஞ்சேர்சென்னைநாயகனே. (௩)

நாயிற்கினிதாமவையருந்து நரர்க்குமெளிதாவனவேட்டுப்
பேயிற்றிரியவெனைவிடனின் பெருமைக்கழகாமெனலாமோ
சேயிற்றடுத்தாண்டருளிலையோ சிந்தையறியாத்திருட்டுளதோ
கோயிற்பெருமைதிகழ்சென்னைக் குமராவமரர்கோமானே. (௪)

அமரர்க்கிறைவன்பெருவாழ்வு மாகாதெனநீத்தவர்தமையே
தமரிற்கருதுந்தமியேனைத் தறைமாறொடரத்தகுங்கொல்லோ
கமரிற்சொரிபாலெனத்தமிழாற் கயவர்தமைப்போற்றியுமெலிந்தேன்
குமரப்பருவநீங்கானே குறைதீர்சென்னைக்குருபரனே. (௫)

குருவாமெனவந்தருள்புரியுங் குணநின்றனக்குண்டெனக்கூறுந்
தெருணூல்வழியின்முயல்வேனைத் தெய்வமுருவாத்திகழாதென்
மருள்வாதிகண்மிக்கிகழ்கின்றார் மனத்துளுனைப்போல்வரலாரோ
பொருவாப்புகழ்தோய்சென்னைநகர்ப் புலவாவடிவேற்புயத்தானே. (௬)

புயலுந்தருவுமிருநிதியும் போல்வபிறவும்புலைமுயலுங்
கயவர்கரங்கட்கிணையென்னாக் கழறுங்கவிஞரினுங்கடையா
யயருந்துயரீண்டளித்தனையே யந்தோவொருசற்றருள்புரியாய்
வயலும்பொழிலும்புடைசூழும் வளஞ்சேர்சென்னைவாழ்குகனே. (௭)

குகனேயமரர்க்கெளியானே குன்றாதிபனேகுலக்கவுரி
மகனேயெனப்போற்றிசைத்தவர்முன் வாழ்ந்தவிதங்கேட்பதனாலென்
னகநோவதுநீயறிகிலையோ வளியோர்சிறிதின்றளித்தருள்வாய்
முகமாறுடையாய்சென்னைநகர் முருகாமறைநூன்முழுமுதலே. (௮)

முதல்வன்கருணைப்பெருங்கடலின் முளைக்குமுளையாமுனைத்துதித்தும்
விதமொன்றியமூவிருசமய விகற்பங்கடந்துமெலிவேனோ
பதபங்கயமென்றலைமீது பதித்தோர்நிலையும்பகர்ந்தாளாய்
கதமிஞ்சியசூர்ச்செகுத்தோனே கடல்சூழ்சென்னைக்காங்கெயனே. (௯)

காங்கேயனையேபரவுதமிழ்க் கவுமாரரினோர்கடைத்தாய
பாங்கேய்நலனுமறியேனைப் பலருமவன்றாள்பணிவானென்
றீங்கேத்தியசீர்வலிதடைந்த தியைந்தவருட்பேறெய்தாதோ
தீங்கேமருவாச்சென்னைநகர்ச் செஞ்சொற்புலவீர்செப்புமினே. (௰)

## வேறு.

செப்புமின்றமிழ்க்கவிதையொன்றீந்தொரு சிறுகவியந்நாளில்
வெப்புமிக்குறுபாலையிற்கொண்ட[illegible]மேதினியறியாதோ
கைப்புறுதவென்கவிபலவினவியுங் கருணைசெய்திலையந்தோ
வொப்புறாக்கருஞ்சென்னையம்பதிபுரந் தொளிரும்வேலுடையானே. (௧௧)

உடையகின்னருட் சீர்சிறிதெய்தியு முலகவாசனையென்னு
நடையினுடுழன் றிடுவதுமுறையல நவின்றவாறினிதாள்வா
யடையலர்க்கெம னுங்கதிர்வேற்படை யண்ணலேயடியாருள்
ளிடையருதொளிர் சோதியேசென்னையி லென்னையும்விழைவானே. (௰உ)

விழையுமென்மன மாதியுங்கவர்ந்துநீ விளங்குமாறுணரார்போற்
றழையும்வல்வினைச் சழக்கினுட்புக்குறத் தக்கதோர்பணியீந்தாய்
பழையதொண்டனென் றுரைத்ததுமெய்மைகொல் பழுதுநொலறிகில்லேன்
மழைகுலாம்பொழிற் சென்னையில்வன்னமா மயின்மிசைவருவானே. (௰௩)

வானநாடரு மண்டலத்தினர்களு மற்றையவுலகோரு
மீனமார்புற நெறியினிற்சேரினு மியானுனைமறவேனின்
மானவேற்படைப் பூசையுநீறணி வண்மையும்வழுவேன்காண்
டேனருமலர்க் கடம்பணிவாய்திருச் சென்னையிற்றிகழ்சேயே. (௰௪)

சேயவாரணக் கொடியுடைக்குமரனைத் திருப்புகழ்பலபாடும்
வாயபைங்கிளிக் குரியனைச்சென்னையில் வழுத்துநாவலர்தம்பாற்
றூயதாமரை யாளெனச்செங்கிறந் துலங்குமுண்டகப்பாவை
மேயநாள்வரி னல்லதென்றன்மனம் விகசிதமருவாதே. (௰௫)

மருவருமலர்க் குழலியர்முலைதரு மயன்முதற்பலதீங்கு
மொருவுமெய்யருட் போதம்வந்துறுமுன மூற்றவரொனப்பாடற்
கருவருக்கமென் னெஞ்சகத்துன்றிரு வடிச்சுவடுறல்பொய்யோ
திருகிலாவிய சென்னையம்பதிபுகழ் செஞ்சுடர்வேலானே. (௰௬)

வேலையாதிய புனலினுங்கனலினும் விடுத்தவென்றமிழ்ச்செஞ்சொன்
மாலையாவையும் விரும்புமாறுதவவும் வல்லையென்றுள்வேனை
யோலைதோய்கரத் தெமன்விடுந்தூதர்வந் துறுக்குநாள்வருத்தாதே
சேலைநேர்விழிச் சிறுமியர்நடம்பயில் சென்னையிற்செயவேளே. (௰௭)

வேளைகண்டருட் செயவலாயெனமிக விரும்புமென்னிடைதோன்றி
நாளையென்றசொற் பகர்ந்துநாட்கழித்தனை நானிலத்துழல்கின்றே
னாளையிவ்வண மலக்கழித்திடலுன தருளினுக்கழகேயோ
வாளைபாய்புனற் கழனியஞ்சென்னையின் மருவியமுருகோனே. (௰௮)

முருகுவான்மலர் கொணர்தரச்சென்றவன் மூரியாக்கையையன்றே
ருருகனங்கியி லிடும்படிகண்டனை யதுநினைத்தயர்கின்றேன்
றிருகுகார்மருப் பாடுகைத்தருந்தவர் தியக்கறச்செயல்பொய்யோ
பெருகுவார்கடற் சென்னையைச்செங்கைவேல் பிடித்துநின்றளிப்போனே. (௰௯)

அளிக்குழாமுரல் கடம்புறழ்பனுவலோன் றணியவந்தனன்றன்னைத்
தெளிக்குமாறுசெய் திருவிளையாடலைத் தினநினைத்தயர்கின்றேன்
களிக்குமின்சுவைக் கவிதையொன்றெனு மியான்கழறிடுமிவற்றின்றே
பளிக்குமேடையின் மதிதவழ்சென்னையம் பதிக்குருபரவேளே. (௨௰)

## வேறு.

பரவைநெஞ்சுவப்பவேண்டும் பாவலன்றனக்கப்பேறுந்
தரவலான்மகவாநீயென் றமிழினுக்கிரங்கொண்ணுதோ
விரவலர்வருத்தந்தேரா தியாவையுமறிந்துற்றுயோ
கரவினர்மருவாச்சென்னைக் கந்தனுங்கருணைவாழ்வே. (உக)

கருணையோர்சிறிதுமில்லார் கடைத்தலைவாயிருேறுந்
தெருமரலொழிக்கினன்றிச் சிறிதுமுண்மகிழேன்கண்டாய்
யருணையிற்கிளியென்றென்னை யறைந்தமைமறந்திட்டாயோ
திருமருமார்பன்போற்றச் சென்னையிற்றிகழ்வேலோனே. (உஉ)

வேலனைச்சென்னைமூதூர் விகிர்தனைவிரும்புநெஞ்சிற்
காலனையனையகண்ணூர் கனிமொழித்துவர்வாயாதிக்
கோலமுமிலங்கக்கண்டு குலைவதென்றெழிவேனந்தோ
பாலருவாயன்போல்வார் பதத்துகள்சுமக்கின்றேரே. (உ௩)

ஓரமுன்னுளத்திலுண்டே யொருகணத்தினுமுன்னுதான்
சீரவிருணைக்கோயிற் சிகரியில்விழுமன்றுண்டாய்
வாரம்வைத்தெனக்கந்நாளம் மலையிலவ்வளவேசெய்தாய்
கூரவேன்முருகவேளே குளிர்பொழிற்சென்னையானே. (உச)

சென்னையம்பதியிலுற்றுச் சிறியனேன்றொடுக்கும்புன்சொற்
றன்னைமிக்கணியும்வேலா சரதமொன்றுரைக்கக்கேண்மோ
வுன்னைநான்விரும்புமாறிங் கொருசிலரொணவேட்டுள்ளா
ரென்னையாள்வதன்முன்னன்னோர்க் கினியபேறருள்செய்வாயே. ()

வாயசத்துருவுமெய்தி மகபதிக்கருள்வான்றன்பின்
மேயநீயெனையிவ்வாறு வெருட்டிடன்முறையாங்கொல்லோ
நீயநாளறைந்தமாற்ற நிசப்படப்புரிந்தாற்போதுஞ்
சேயசண்முகத்தோர்குன்றிற் சென்னையிற்றிகழ்கின்றேனே. (உ௬)

திகழ்கதிர்வடிவேலேந்திச் சிகிமிசையொருக்கால்வந்து
புகழ்படவாழ்வார்பல்லோர்போற்றிடும் பொதுச்சீர்நல்கி
யிகழ்வொருங்கொழிப்பதென் றென்றேங்குவதறிகில்லாயோ
வகழ்கடற்சென்னை மூதூரறியநின்றுடுவானே. (உஎ)

ஆடுறுமயிலும்வேலு மருந்துணையெனப்பல்பாடல்
பாடுறுமவரோடியானும் படியிடத்தொளிரச்செய்வாய்
காடுறுங்குறத்திமோகக் கள்வனென்றிறைஞ்சுவாரை
நாடுறுங்குமராசென்னை நகரிடைநடிக்கின்றேனே. (உஅ)

நடித்தபாண்டரங்கப்பெம்மா னல்வருக்கருளும்பேறும்
படித்தசொற்புலவற்காகப் பருப்பதக்குகையைநின்வே
லிடித்ததுங்கருதிநொந்தே னின்பமுற்றிடுநாளென்றே
வடித்தமுத்தமிழ்சேர்சென்னை மாநகர்க்குமரவேளே. (உ௯)

குமாரநாயகனேசென்னைக் கோயிலிற்குடிகொள்வானே
யமரர்சேகரனேயென்கைக் காசைமிக்குறுமென்றன்னைத்
தமரவரனையாரோனைச் சரிதமுஞ்சழக்குந்தாழாச்
சமரமும்பகரொன்றேதித் தகைவதோர்சளமாமன்றே. (ரு0)

வேறு.

சளமெலாங்கெடுந் தவப்பயனுமெனச்சாரு
மளவில்பேரருட்சித்தியு முத்தியுமமையு
மிளமைநீங்கருங்குமரனைச் சென்னையினிடைகண்
டுளமுநெஞ்சமு முருகிடத்துதிக்குமுத்தமர்க்கே. (ருக)

உத்தமத்துயர்பத்தியைப் பழுதெனவுரைத்துப்
பித்தராமெனப்பலவிதம் பிதற்றுநர்க்கொல்குஞ்
சித்தமுன்னருட்டிவலை தோய்ந்துய்வுறச்செய்வாய்
முத்தர்சூழ்தரச்சென்னையின் மருவுசண்முகனே. (ருஉ)

முகபடாமணிமால்களி றளித்தவன்முனைச்சீர்
நிகழுந்தோட்டிநல்காமையிற் றுயர்செயனெறியோ
சகலஞாயமு நீயறிவாயெனறவரே
மகரநீரொலிச்சென்னையின்மயிலுகைப்பவனே. (ருரு)

பவளமால்வரையாமெனப் பசுமயின்மேடங்
கவள்வாரணமெனு மிவற்றென்றினிற்கவின்று
டவளநீற்றணிச்சங்கரன் றழல்விழித்தனையா
குவளைநீர்வயற் சென்னையிற்குலவியகுகனே. (ருச)

குகனைக்குன்றமுங் குறிச்சியுஞ்சென்னைமுற்கூறு
நகரும்வைகியநாதனை நறுந்தமிழ்க்கவியாற்
பகரவல்லவரியாவ ராயினுமவர்பதப்பூந்
துகளென்சென்னியிற் புனைவதுசரதமாந்துணிவே. (ருரு)

துணியிலாதுபைந்தழை யுடுத்தவளெதிர்தோன்றிக்
கணியுமானவன்கடைய னேன்றொடுக்கும்வெண்கவிதை
யணிவதோர்வியப்பன் றெனத்தேறுமினளவில்
பணிலமூர்புனற் சென்னையிற்குலவுபாவலரே. (ருசா)

பாவலார்க்கொருதலைவனைச் சென்னையம்பதியின்
மூவலாப்புகழ்க்குமரனை முட்டையென்றுரைத்த
நாவலானிலுநானி நாளிழிந்தமைநவிலிற்
காவலாரியர்பலரழத் தகுகடுந்துயரே. (ருஎ)

கடுக்கைவார்சடைப் பண்ணவன்றன்றுதிக்கவிதை
தொடுக்குமன்பருக்குதவு மாறெனக்கருட்டேய்மை
கொடுக்கினின்புகழ்குன்று மென்றொல்கினைகொல்லோ
வடுக்கலாமெனச் சென்னையும்புரந்தவேலவனே. (ருஅ)

அவலநெஞ்சகநீயருட் டருதுமென்றறைந்துங்
கவலைவாரியிற்குளிப்பது காண்கிலைகொல்லோ
சவலையாமெனத்தேம்பு முன்றங்தெனைப்புரப்பாய்
குவலயத்துயர்சென்னை யம்பதியின்வேற்கோவே. (௩௯)

கோவையங்கனியனைய வாயிதழுணக்கொடுக்கும்
பாவைமார்மயற்கடலிடை முழுகியபடிறேன்
றேவையாவையுநல்கவும் வல்லைகொறெரியேன்
மாவைவென்றபின் சென்னையில்வந்தவானவனே. (௪௰)

வேறு.

நவவீரரினு னொருவீரனெனப்
புவனுதிபரும் புகல்பேறருள்வாய்
சிவபாலக சென்னையினிற்பரவுந்
தவர்நாடிய சற்குருதேசிகனே. (௪௧)

சிகரந்திகழ்பல் கிரியிற்றிரியுங்
குகனன்பர் குறிப்பறியாதவனே
நகரம்பல நண்ணியசென்னையினிற்
புகழ்கொண்டொளிர் புண்ணியநாவலரே. (௪௨)

நாவற்றியினன் மெலியச்செயுமென்
னுவற்றிரளென் றழியப்புரிவாய்
சேவற்கொடி சென்னையினின்றடியா
ரேவற்றெழில்செய்யு மெழிற்குகனே. (௪௩)

எழிலித்திர ளுணுறுமீகைநலங்
கழிதுற்ற கரங்களுனக்கிலையோ
வழிவற்றுயர் சென்னையிலன்பர்கடம்
விழிகட்கமு தென்றொளிர்வேலவனே. (௪௪)

வேலங்கை விசாகனெனத்தினநின்
றேலங்க ளிடும்பயனுள்ளுடைவோ
வாலங்கடி துண்டபிரானருளாற்
சீலங்கமழ் சென்னையில்வந்தவனே. (௪௫)

வந்தித்து மனத்திடையெப்பொழுதுஞ்
சிந்திக்கை தெரிந்துமிரங்கிலையே
செந்திற்பதி போலொளிர்சென்னையினிற்
சந்திப்பவர் தம்மையளிப்பவனே. (௪௬)

அளிமொய்க்கு மலர்க்குழலாருறவா
லெளிமைப்படு மென்னையிகழ்ந்துவிடேல்
கிளிபற்றிய கைகொடுகேகயமீ
தொளிர்பொற்பொடு சென்னையிலுற்றவனே. (௪௭)

உற்றானென வூரவரோடுழலப்
பெற்றுய்வுறு பேதைமையென்றொழிவே
னற்றாரணி நண்ணியசென்னையிலோர்
சிற்றாகர மெய்தியசேவகனே. (௪௮)

சேவேறிய செந்தகையார்புரையுந்
தூவேடமுளாரிடைதோய்குவனோ
காவேரியளித்தகளிற்றினிளங்
கோவேகுளிர் சென்னையில்வாழ்குருவே. (௪௯)

குருவென்று குறித்துளகொள்கையினே
னருவென்னு மவர்க்கிடையத்தகுமோ
மருவொன்று மலர்க்குரவம்புனைவாய்
திருமின்புணர் சென்னையின்மன்னவனே. (௫௰)

## வேறு.

மன்னவர்பற்பலர்போற்ற மகிழ்ச்சியுறுமுதுசூரன்
றன்னகலங்கீன்றுவருந் தனிவேலைமறவாநா
னின்னலுறச்செயலாமோ விகழ்ச்சியுனக்கிலைகொல்லோ
பொன்னசலத்தினர்பாலா புகழ்ச்சென்னைபுரியானே. (௫௧)

யானென்றவாணவப்பே ரிருணீக்கியாவையுநீ
தானென்றமெய்யுணர்ச்சி தரிலுனக்கோர்குறையுண்டோ
மீனென்றவிழிமாதர் மிகநடிக்கும்வியன்சென்னைக்
கோனென்றுவ்டிவேலுங் கொடிகுலவுங்குணக்குன்றே. (௫௨)

குன்றமுற்றுமணக்கின்ற கோகனகத்திருத்தாள்வந்
தென்றனதுமனத்தூடிங் கியங்கியதன்பயனீதோ
நன்றறியார்பலர்கூடி நகுந்துயரும்விளைத்தாயே
யென்றருள்வாய்சென்னைநக ரிடத்துறையுமிளையோனே. (௫௩)

இளங்குரும்பைமுலையாரை யெண்ணியெண்ணியீடழிந்து
களங்கமிகுமனப்பேய்நின் கருணைவெள்ளத்தமிழாதோ
விளங்குபலகனவூடு விளம்பியதுப்பிழைதானோ
வளங்கவினுஞ்சென்னைநகர் வாழ்வனையமயிலோனே. (௫௪)

மயிலுகைத்துவானவரு மாதவருநனிசூழ
வயிலெடுத்துவருஞ்சேவை யதைவிரும்பலறியாயோ
குயிலனையகுறத்தியொடு கூத்தாடுங்குகனேபண்
பயிலுமவளிடத்தானே பழஞ்சென்னைப்பதியானே. (௫௫)

பதிகமொரோவொன்றினுக்குமுடன் பரிசளித்தபரமன்றான்
விதிவழிநல்கியசேயா விளங்கியநீமிகையாய
துதிபுகலுமெனையேனின் றொழும்பரிற்கூட்டிலையந்தோ
வதிர்தொனித்தண்கடற்சென்னைக் கரசாயவயில்வேளே. (௫௬)

அயில்வேலும்வச்சிரமு மடற்சூலப்படையொன்றுங்
கையிலேந்திநின்றநிலை கருதார்க்குங்கதியுண்டோ
மயிலேறும்பெருமானே வாரணப்புட்கொடியானே
பயில்வேதமலிசென்னைப் பதிபுரக்கும்பண்ணவனே. (௫௭)

பண்ணமைந்தநான்மறைமேற் பழிகூறிப்பாவவினை
நண்ணலுற்றார்சிலர்தம்பா னுன்பகைத்ததறியாயோ
வெண்ணமொத்தென்றருள்செய்வா யெனக்குமொருசெயலுண்டோ
புண்ணருந்தார்வளர்சென்னை புரிக்குமரப்புத்தேளே. (௫௮)

புத்தேளிர்பெருவாழ்வும் பொய்மையெனத்தெரித்ததற்பி
னித்தேயத்தினர்தம்பா லிரந்துழலவிடலாமோ
முத்தேயொத்தொளிருநகை முருடமகட்கினியானே
சித்தேறச்செயும்வேலா சென்னைநகர்புரப்போனே. (௫௯)

புரந்தரனுதியர்தமையும் பொருட்படுத்தற்கிசையாநா
னிரந்தலையுந்தொழிலொன்று விழிந்தவிதமுணராயோ
கரந்தமொழிபலபேசிக் கடைத்தெருவிலிழுத்தாயே
பரந்தபெரும்புகழ்ச்சென்னைப் பதிமுருகப்பெருமானே (௬௰)

வே று.

மானீன்றமகடந்தமயல்விஞ்சு குகனங்கைவடிவேலையே
நானீண்டுகருதித்துதிக்கின்றதெளிதென்ன நவிலன்மினோ
தேனீந்தமலர்சிந்துபொழிலோடுபலவாவி திகழ்சென்னையூர்
போனீண்டபுகழ்கொண்டு தமிழ்வாரியமுதுண்டபுலவோர்களே. ()

புலமைத்திறன்சற்றுமறியார்தமனைவாயில் புகவிட்டிடா
திலகுற்றதோகைக்குடைக்கானமயின்மீதெனெதிர்மன்னுவாய்
திலகத்தனைச்சந்திரன்போலுநுதல்கொண்ட தெய்வானைதன்
னலவுத்தொழிற்கஞ்சு வாயன்பர்மலிசென்னைநகர்நாதனே. (௬௨)

நாதத்தினுக்கப்புறத்தாடல்செயுமுன்ற னளினப்பதம்
போதக்கருத்தூடுதிகழ்வுற்றுமிவ்வாறு புலர்வெய்தினே
னீதத்தினுக்கொத்தபடியிங்கோரடையாள நீநல்குவாய்
சீதப்புனற்சென்னைநகர்வேலனேயொப்பில் செயவீரனே. (௬௩)

வீராதிவீரர்க்குமிசையாதபேராசை விளைவித்தநீ
யாராதனத்துக்குமிடையூறுபுரிதன்மை யறிகின்றிலேன்
காரானைநிகர்மேதியுடையானும்வருவாறு கைவிட்டிடேல்
சீராயிரங்கொண்டுமிளிர்சென்னைநகரூடு திகழ்கந்தனே. (௬௪)

கந்தக்கடம்பன்னதமிழ்மாலைபலவாறு கழறுற்றுநா
னிந்தக்கொடுந்துன்ப முறுமாறுசெயனன்மையெனலாகுமோ
மந்தக்கருத்தர்க்கு மருள்செய்ததிருவுள்ளமறைவுற்றதோ
சந்தக்கடற்சென்னை நகர்வாழ்வுபெறவந்ததனிவேலனே. (௬௫)

தனியாகுமுனையன்றி மறுதெய்வமிலையென்றசரதஞ்சொனாய்
னனிநாடிமெலிகின்ற நிலைகண்டுமுணராரினலியச்செய்தா
யினியாரொடிதைவிண்டு குறைதீர்வன்மயிலேறியெதிர்வந்திடா
யனியாயமறுசென்னை நகர்வாழவிளையாடுமருளாளனே. (௬௬)

அருள்வாரியிடையண்ட ரொடுதொண்டர்பெறவந்தவமுதாகுநீ
யிருளூடுகிறிபோலு மொழிபேசலியல்பாகுமெனலாகுமோ
தெருண்மோனமுடனுன்ற னடியார்களுறுமாறுசிறிதோதுவாய்
வெருணாகமயின்மாவின் மிசைசென்னைநகர்சூழும்விதிர்வேலனே. ()

விதிபட்டதலைவிட்டு விடெனச்சொலரனுக்கும்வியன்மிக்கதென்
பொதியைக்குண்முனிவற்கு நுவலொப்பிலியிச்சைபுகவுய்த்ததார்
மதிபற்றுமுயர்வற்ற தெனன்மெய்ச்சொலியனட்புமலிசென்னையாய்
நதிபெற்றமகவொத்து வருசத்திமுருகப்பநமதண்ணலே. (௬௮)

நமனஞ்சமுனிகின்ற பதநம்பர்விழியங்கிநடுநின்றதோர்
குமரன்பனிருதிண்கை பெறுகந்தன்வளமிஞ்சுகுளிர்சென்னையா
ணிமமொன்றுகிரிதந்த மகள்கொங்கையமுதுண்டவெழில்வண்ணவா
யமலங்கொள்கிளியென்று மெனுள்வந்துதினம்வம்பிலறைகின்றதே.

அறையாதமொழிகோடி சொலவென்னுள்வருநீயிவகிலத்தினோர்
நிறைசீலனெனுமாறு செயும்வண்ணமொருசற்றுநினைகின்றிலாய்
பிறைசூடிவழிபாடு கொளுஞானகுருவென்கைபிழையாகுமோ
மறையோலமலிசென்னை நகரூடுதகர்மீதுவருதெய்வமே. (௭௰)

## வேறு.

தெய்வத்திருவருள் வண்மைப்புலவோர்
செல்வத்தினைமிகநண்ணித்தமியே
னைவுற்றுழல்வது கண்ணுற்றிலையோ
நல்கிற்பகைதவிர் சொன்மிக்குறுவே
னெய்விற்சமர்பொரு சிம்மத்தினையோ
ரொஃகுப்படைகொடு முன்னட்டுயர்வாய்
கைதைப்பொழின்மலி சென்னைக்குமரா
கள்ளக்குறவரு முன்னற்புதனே. (௭௧)

அற்புதநீடிய சென்னையின்முருகோ
னெப்படியோர்விசை யென்னிடைவருநாண்
முற்பவமோதிட லுண்மையதலவேன்
முத்தியும்வீணென வுன்னிடல்பிழையோ
பூற்புதமேநிகர் கொம்மையமுலைதோய்
பொற்பொடுநோன்முக னண்ணவெணிறமார்
நற்பதுமாதன மன்னியகொடியே
நத்தணிகாதினர் பின்வருபிடியே. (௭௨)

பிடிநிகர்மங்கையர் தம்மயலாலே
பிழைபடுநெஞ்சினு நின்னிருபூநே
ரடிபதியுந்தட மின்னியுமேனீ
யருள்புரிகின்றிலை கண்ணெதிர்வாராய்
தடிகொடுவெண்பொடி யின்முழுகார்வா
சரவணசம்பவ சண்முகநாதா
கொடிவளமிஞ்சிய சென்னைவிசாகா
குமரனெனும்பரு வம்மகலானே. (எங)

ஆனிவர்தந்தைமு னன்னெறியோரா
தானைமுகன்செய னண்ணியதானீ
தானியலுஞ்சின மென்னுள்வராதோ
தாரகவிஞ்சையி னுண்மையையோதா
யூனிணமுண்பவ ரின்மையவாவா
ரோடுமொழிந்துள நின்னியல்போர்வேன்
மேனிலையின்றிரு விண்ணவரூர்நேர்
வீறுபொருந்திய சென்னையில்வேளே. (எச)

வேளுக்குயரொழின் மன்னலெணுதோர்
வேடச்சிறுமக டன்னெதிர்வீழ்நீ
தாளுக்கரனரி முன்னுவல்வானோர்
தாமிக்குருகிய வண்மையைநாடா
தாளுட்கழிவுறு மென்முனநேர்வா
யாகிற்பிழைவரு மென்னவுனுதே
தோளுக்கயிலணி சென்னைவிநோதா
சூதத்தகுவனை வென்முருகோனே. (எரு)

முருகார்குரவலர் பன்னிருபுயமேன்
மொழிமாலிகைபல பன்னியகிளியா
வொருகாலுறனிச மென்னிலென்விழிநே
ரொளிர்வேல்கொடுமெயி னின்மிசைவருவா
யருகாதியபலர் தம்மிகறடையோ
வவர்வேர்களைதர முன்வரல்கதையோ
குருகான்மலர்சொரி புன்னையினருகே
குடவால்வளைமுரல் சென்னையினரசே. (எசு)

அரசர்க்கன்புசெய் தன்மையர்நாயே
னடிமைப்பண்பினை யின்னமெளாமே
சரணக்கஞ்சம தென்முடிமீதே
தருகத்தந்தருள் பொன்மயலார்போ

விரவுற்றிங்குழல் புன்மையனானே
னிவிளப்பஞ்சிறி துன்னையடாதோ
மரமொத்தங்கொரு கன்னிமுனிள்வாய்
வளமிக்கொன்றிய சென்னையினானே. (௭௭)

நானெனுமோர்பொரு ளாண்மையதெனிலோ
நான்மறைநீநிறை வென்னல்பொயலவோ
வேனெனைவீணிலி வின்னலில்விடலே
தேனுமொராடல் செயின்மகிழ்வடையே
ஞானெனுமாகமு முன்னதுவடிவா
மோகையைநாடின னின்னதுமுனதே
தேனெனவேமொழி சொன்மறமகள்சேர்
சேவகனேயுயர் சென்னையினிறையே. (௭௮)

இறையவன்முயல்பல புண்ணியவடிவா
யிலகிடுமுனைநனி யெண்ணியுமடியே
னறைமலிகுழலியர் தம்முலைமயலா
னலிவதுமுறையல நன்னலமருள்வாய்
கறைதவிர்பாகதி யின்முழுமுதலே
கரிமுகமுடையவர் பின்வருமுருகா
தறைபுகழ்வளமுறு சென்னையினதிபா
சமரசநிலைதரு சண்முகமணியே. (௭௯)

சண்முகமன்னிய நின்னருளெண்ணார்
தம்மெதிரொன்மிடி சொன்மடமுன்னா
துண்முகநன்மல ரின்மிசைபொன்வே
லொண்மயில்பன்னியர் துன்னுறநண்ணாய்
விண்முகமண்ணிய பண்ணவர்கண்ணே
மின்னிடையம்மை செய்புண்ணியமுன்னே
திண்முகவண்மலி பன்மலையன்னே
சென்னையிலென்மொழி கொண்முதன்மன்னே. (௮௰)

வேறு.

மன்னுதமிழ்க்குறுமுனிவன்வதிதருபே ரவையிடைபோய்வணங்கிராயே
னுன்னுநினைவத்தனையுமுரையாடித் திரும்புநலமுதவவேண்டு
மென்னுநினைவெனக்களித்துவளர்ப்பது நின்னருளன்றோவிமையார்வாழும்
பொன்னுலகமேயனையசென்னைநகர் புரந்தருளும்புகழ்வேலானே. (௮௧)

வேலைவிடமயின்றபிரான்றிருக்கோயிற் றடத்தொருக்கான்மிதந்துவேப்ப
மாலையுளானொருபுலவன்றனைவணங்கச் செயும்பலகைவழங்கியாண்டு
மேலையுலகினர்தாமும்வியப்புறப்பார்த் திடவேண்டும்வியனார்செம்பொற்
சேலைபணிவாளிருக்கத்தழைபுனைவாண் மணம்புணர்ந்தசென்னைவேளே. (௮௨)

வேள்வழுத்தமயிலுகைத்து வேலேந்திச்சென்னைநகர்வீதிதோறுந்
தாள்வணங்குவார்விருப்பந்தரவருவான் றனையிரக்குந்தன்மைதோய்ந்தும்
வாள்வனப்புக்கண்ணியர்க்குமக்களுக்கும் வேண்டுவனவழங்கென்பாரோ
கோள்வலிக்குமஞ்சாமலெழுத்தாறு மொழிந்தவனைக்குறிக்கின்றாரோ. (௮௩)

குறியுரைக்குங்குலக்கோதை கோமானைச்சென்னைநகர்க்குமரவேளை
மறியணிகையார்பயந்தமணிவிளக்கைக் காண்பதற்குவாஞ்சைகொண்டே
னறிவிழந்துமனமிழந்து வாக்கிழந்துதேகமுமற்றவனதாகி
யெறிகடற்பாரினரிகழவிரந்தலைகின்றே னுணர்மினியல்வல்லோரே. (௮௪)

வல்லைநிகர்முலைவனப்புற்றிலகுமொரு வணிகமகள்வாய்கொண்டோர்பேர்ச்
சொல்லைமட்டுமுரைத்ததனுக்கத்தனைபே றளித்துளநீதொழுதுபோற்றிக்
கல்லையொக்குமனத்தையுநின்கழற்கணிவேன் றனைப்பெரிதுகவற்றலாமோ
குல்லைமலர்த்தாரானேகுறைதவிர்சீர்ச் சென்னைநகர்ககுகப்பெம்மானே. (௮௫)

மானணிந்தகைப்பரமன்றருமகனைச் சென்னைநகர்வாழ்செவ்வேளை
யானணுகுற்றதுமெனதுள்ளிச்சையுமே பெரிதுரைக்குமென்வாயன்றேன்
றனருளும்பெரும்பேறுமிறுமாப்பு மானந்தத்தகையும்பாடி
மீனவனையனையார்பற்பலர்புகழத் திகழ்வதென்றோவெள்ளைமாதே. (௮௬)

மாதாமுற்பகருமொருநால்வகையு மாகியெனைவளர்க்கின்றனைச்
சேதாம்பற்றடமலியுஞ் சென்னைநகர்க்குகவேளைச்சிந்தியாமற்
காதார்கட்சிறுமியர்தந்துணைமுலைச்சீர் மறவாமற்கருதுநெஞ்சே
நீதானென்றுனக்குறவாம்பொறிகளோ டென்வசமாவாய்நிசழ்த்திடாயே (௮௭)

நிகளமிடக்கதறியநான்முகத்தொருவன் விதித்தபொறிநீங்குமாறுன்
னகளபரமாநந்தத்திருவடியென் றலைமிசைவைத்தருளவேண்டுந்
துகளறுக்கவல்லானேதந்தையைப்போற் புலவன்விடுந்தூதுமானாய்
சகளமுதற்பொருளானசண்முகனே சென்னையினிற்றழைக்கின்றோனே. (௮௮)

தழையணிகைச்சாரணைக் கழுவேற்றனிசமாகிற்றவளநீற்றைப்
பிழையெனவுமன்றியதன்பிறப்பிடமுங் கெடுக்குமவர்பெருகலாமோ
குழைதிகழ்காதாறிரண்டிலொன்றுகொ டென்முறைவினவிற்குற்றமுண்டோ
மழைமுழலிசேர்ச்சென்னைநகர்த் தெருத்தோறும்பவனிவரும்வண்மையானே (௮௯)

வண்ணநறுங்கனிவாய்ப்பைங் கிளியிருந்தபுயத்தானைமயிலூர்வானை
விண்ணவருக்கெளியானைச் சென்னைநகர்க்கோயிலிடைமேவினானை
யெண்ணவுமெய்யருட்பெரும்பே றிரக்கவுமென்றலையில்விதியெழுதலோர்ந்தே
னண்ணருமத்திருவமைந்துகளிகூரப் பொறித்துளனோவறிகிலேனே. (௯௰)

## வேறு.

அறியாமையெனும்பகட்டின் முதுகிலேறி
யாணவமாங்கயிறுபற்றி யதட்டிப்பற்ப
லெற்றிவேலார்நடுக்குலவுங் காலனென்மே
லெதிராமற்றிருவருட்பே றீயவேண்டு

மறியேந்தினார்நுதற் கட்பொறியாமைந்தா
மயிலுகைக்கும்பெருமானே வனசம்பூத்த
பொறிநீங்காவளம்பொலியுஞ் சென்னைமூதூர்ப்
புரவலனேமுழங்குதிருப் புகழ்கேட்போனே. (௩௧)

திருப்புகழாதியபனுவல் பலவுந்தெண்ணீர்த்
திரைக்கடலும்பொருனைமுதற் றிகழ்பன்னீரு
நெருப்புமெனக்கீந்தருளப் பெற்றாலன்றி
நீயெனையாட்கொண்டவித நிசமாங்கொல்லோ
பொருப்புமுழுமையுமணக்கும் பதத்தெம்மானே
புலவர்செய்யும்பெருங்கலகம் போக்கினானே
விருப்புவெறுப்பில்லவருட் குடிகொள்வானே
விளங்குதமிழ்ச்சென்னையில்வாழ் விமலவேளே. (௩௨)

விமலமலர்த்திருவடியென் றலைமீதேற்றி
மெஞ்ஞானத்தோடுசித்தும் விளக்கியுன்றன்
றமரவரிற்கூட்டுதற்கு நாட்சென்றாலுஞ்
சகத்தினர்பொய்யுறவையின்னே தவிர்க்கவேண்டுங்
குமரகுருபரமுருகக் கடவுளானே
கொற்றவைவேலொடுசேவற் கொடிகொள்வானே
யிமயமலைக்கன்னிபயந் தருளும்பாலா
வினைதவிர்சீர்ச்சென்னைநக ரிடத்துள்ளானே. (௩௩)

உள்ளமொருப்படவுனையே கருதினாலு
முடுக்கையிடையார்பணிகொண் டொழுகினாலுந்
தள்ளரியவாறுசில பகர்ந்தபின்னுந்
தமியனேன்வருந்தவிடத் தகுங்கொல்கூறாய்
கள்ளமனநின்றிருத்தாட் சுவடுதோய்ந்து
கவின்றவுண்மையாரறிவார் கழறப்போமோ
பள்ளவயற்புனல்குலவுஞ் சென்னைமூதூர்ப்
பரமகுருபரமுருகா பரிந்தாள்வாயே. (௩௪)

பரிமுகத்துப்பெண்பேயுங் குவடுங்கீன்றோர்
பாவலவன்றுதிபுனைந்த பழையகீர்த்தி
விரிகடற்பாருலகுரைப்பக் கேட்டுன்றன்னை
மிகத்துதிக்குந்தமியேனை வெருட்டலாமோ
கரிநிகர்க்குமனத்தொருமா னிடனுந்தீர்க்குங்
கலியையொருபொருட்படுத்திக் கவற்றவேண்டா
முரியபலகுன்றினமு மழுக்காறெய்த
வுயர்ந்தபுகழ்ச்சென்னையில்வந் துறுஞ்செவ்வேளே. ()

செவ்வரிக்கட்குஞ்சரித்தாய் மனமுமுன்றன்
திருவுளமுமிருந்தபடி தினைப்பைங்கானத்
தவ்வனைநெஞ்சமுமிரங்கா திருக்குமாகி
லடியனேனின்னருட்பேற் றருமையோரா
திவ்வகிலத்தினரொடுபெட் டுழல்வேனந்தோ
யாவையுநின்றிருக்கூத்தே யெனவொண்ணுதோ
பௌவநெடுந்திரைமணிமுத் தெறியுஞ்சென்னைப்
பதிக்குமராவிழிக்கடையாற் பார்த்திடாயே. (சுசு)

பார்த்தனடித்திடற்குவந்து கணையொன்றீந்தார்
பழையதவப்பெரும்பயனும் பாலனீயென்
றார்த்தமறைமொழிபிழையன் றுகிற்போற்றி
யடிபணியுமெனக்கிரங்கி யருள்வாயன்றே
சீர்த்தபுகழ்க்கவுமார சமையத்துண்மை
சிறியனேனுளத்துணர்த்துந் திருடனுரோ
கார்த்திகையார்க்கறுமகவாய்க் கவுரிக்கொன்றுங்
காங்கேயாசென்னைநகர்க் கந்தவேளே. (சுஎ)

கந்தரத்துக்கறையுடையான் முதலாமாறு
கடவுளுநின்முகங்களென்றே கருதுவேனுக்
கந்தரத்துவானவரும் புவியினேரு
மதிசயிக்கத்தக்கபய னளிக்கொண்ணுதோ
மந்தரத்துக்கொத்ததிண்டோட் சூரனாதி
வயவேந்தர்குலமுழுது மடித்தநின்றேட்
சுந்தரத்துக்கேற்றகவி தொடுத்திலேனே
துகளறுஞ்சீர்ச்சென்னைநகர்ச் சுகிர்தவாழ்வே. (சுஅ)

வாழ்வனைத்துநல்கியன்பர் நடுவைத்தாலு
மயிலனையார்தருமயலால் வருத்தினாலும்
வீழ்வனைத்துநல்குவதுன் னருளென்றேர்ந்த
விதமறவாவுணர்ச்சியொன்றும் விளக்கவேண்டுந்
தாழ்வனைத்துந்தீர்க்கவல்ல பெருமையானே
சரவணத்துற்பவித்தானே தவத்தோருள்ளத்
தாழ்வனைத்துமித்தகைத்தென் றறிவிப்பானே
யறமலிசீர்ச்சென்னையில்வே லணிந்துற்றோனே. (சுகூ)

உற்றவரும்பெற்றவரு முறவினேரு
முலகோருமற்றுள்பல் லுயிர்களியாவுங்
குற்றமறுங்குடைத்திருப்பே ராடற்கேற்ற
குலக்கருவியினங்களெனக் குறிக்கின்றோர்க்கே

கற்றவர்க்குநற்றவர்க்கு மமுதுகெஞ்சிக்
கனிவோர்க்குமாறெழுத்தே கழறுவோர்க்கு
மற்றமறிந்துதவியெழிற் சென்னைமூது
ரமருமயிற்கந்தனுண்மை யருளுண்டாமே. (ளா)

பதிற்றுப்பத்தந்தாதி முற்றிற்று.

## வேலுமயிலுந் துணை.

நேரிசைவெண்பா.

பத்தர்புகழ்சென்னைப் பதிற்றுப்பத்தந்தாதி
யத்தனையுநெஞ்சிலமைத் தாதரித்தான்—முத்தமிழுஞ்
செம்பொற்பெருக்குந் திருக்கைவேற்சேவகன்ற
னம்பொற்பதமுமெய்த லாம்.

# தெய்வமே துணை.

உ

முருகக்கடவுடுணை.

## வெண்பாக்கள்.

பொன்னைப்பொருளெனவே போற்றுநர்பாற்போகாம
லுன்னைப்பொருளென் றுணரேனே - சென்னைநகர்க்
கந்தனேவேற்கைக் கடவுளேகன்னிபெற்ற
மைந்தனேநீமயின்மேல் வா. (க)

சென்னைநகர்மேவுந் திருக்கைவேற்சேவகனே
யுன்னைநம்பிப்பாடுபட்ட துண்மையன்றோ - வென்னையிந்த
வண்ணம்பரதவிக்க வைத்தாயேயுன்றனுளத்
தெண்ணந்தானென்ன வியம்பு. (உ)

முன்னம்பகர்ந்தமுதிர் தமிழ்ப்பே றீந்தனையோ
வின்னந்தமிழ்விருப்ப மெய்துகின்று - யென்னவிதங்
குன்றுதசென்னைநகர்க் கோயிற்குகவேளே
பொன்றாதென்னே புகல். (ங)

உன்னன்பெனக்கு முளதோவுளதாகி
லின்னமிரங்கா திருப்பாயோ - முன்னம்
பகர்ந்தமொழிபொய்யாமோ பன்னுபுகழ்ச்சென்னைக்
குகந்தவடிவேலா வுரை. (௪)

உன்றன்றமிழ்விருப்ப மூர்தோறும்போயலையு
மென்றன்பொருள்விருப்பத் தேற்றமே - குன்றனைத்துஞ்
சென்றனந்தமாடல்செய்வாய் சென்னைநகர்க்கோயிலிட
நின்றமுருகேச னே. (ரு)

சென்னைநகர்க்கந்தாநீ செட்டிகளைச்சேர்ந்தாலு
முன்னையுதாரியென்றே யுன்னினே - னென்னையிவ்வா
றேமாறச்செய்தனையே யின்னமென்னசெய்வாயென்
பாமாலைச்சொற்கள்கசப் பா. (சு)

## பதிகம்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தங்கள்.

உன்வாழ்வின்பெருக்கமுல குரைக்கக்கேட்
டுனையடைந்தீண் டுறுகண்டீர்வா
னென்வாக்குமாலையொன்று புனைந்துமன
மிரங்கார்போ லிருந்தாயந்தோ
மின்வாய்ந்த வடிவேற்கைமுருகோனே
யளவிறந்த வெற்புள்ளானே
பொன்வாஞ்சையினர்பலர்வந் துறவாடுஞ்
சென்னைநகர்ப் புனிதவேளே. (க)

எத்தனையோமலைதோறும் வசிக்குமுனை
யிந்நகரி லெளியேன்கண்ட
தத்தம்விழைந்தன்றி யில்லையென்றறிய
மாட்டாயோ வருட்சீரின்றே
முத்தநகைக்குஞ்சரியுங் குறக்கொடியுங்
களிகூரு முருகாமுன்னாள்
பத்தர்பலர் களிகூரப்புரிந்தோனே
யெழிற்சென்னைப் பதியுள்ளானே. (உ)

பொய்வழக்குமெய்வழக்கும் பகுத்தறிந்தோ
ருறுதிமொழி புகலார்தம்முன்
னெய்வரிதாமிரண்டுதா ரணமெடுத்துக்
கொடுத்துமன மிடைந்தேன்கண்டாய்

பைவனப்புப் பணிபூண்டார்தருமதலா
யாறிருதோட் பவளக்குன்றே
செய்வளத்துச்சென்னைநகர்த்திருக்கோயில்
கொண்டுறையுந் தெய்வக்கோவே. (௩)

என்னதுசொற்பனத்தில்வந்தென்
னிச்சையையுமுடித்தருளு மியல்புந்தேறு
நன்னலங்கூறிய நீதானிப்படிப்
பேசாதிருக்கை ஞாயங்கொல்லோ
வன்னமலிபசுந்தோகைப் புரவியுடைக்
குகவேளே வனசப்புத்தேள்
பன்னரியபொருளுணர்ந்த முருகோனே
திருச்சென்னைப் பதியாள்வானே. (௪)

இந்நகரமிக்காலஞ் செந்திநகர்க்
கொப்பாய தென்னச்சொல்ல
லெந்நகரத்துள்ளாரு மொப்பும்வண்ணம்
விளையாட்டொன் றியற்றுண்ணுதோ
செந்நகம்போற்றிகழு மெழிற்றிருமேனிக்
குமராவெண் சேவல்கிள்ளை
தந்நகத்தாற்கீறியதோட் சரவணனே
சென்னைநகர்த்தனி வேலோனே. (௫)

அழுக்காறுமையமுந் தோய்ந்துள்ளார்
தம்மவையிடை நானலமராமல்
வழுத்தீர்ந்தபுலவ னொருவனைவிடுத்தாய்
விரும்புநலம் வழங்கொண்ணுதோ
மழுத்தாங்குமவர்பாகத் திருந்தகருங்
குயிலனையாண் மகிழும்பாலா
முழுக்காமருடையானே முதுபுகழ்ச்
சென்னையிற்குலவு முருகவேளே. (௬)

நன்னிலைச்செந் தமிழ்மதுரத்திருவாக்கு
நல்கியநீ நாணுறுமற்
பொன்னிரக்கவிட்டனையே யென்னிழிவும்
புகழுமுன்னைப் பொருந்துங்கண்டாய்
சென்னியிருமூன்றுடைய செவ்வேளே
தகரூர்ந்து திரியுஞ்செல்வா
மன்னியசீர்ச்சென்னைநகர் வாழ்வனையாய்
துடியாடு மலர்த்தாளானே, (௭)

சாரணர்வாழ்வறக்கடிந்தான் றனக்குமற்றுஞ்
சிலர்க்குழுந்தை தனமிக்கீந்து
பாரறியத்துதிகேட்ட தறியாயோ
வுனக்குமந்தப் பண்புறுதோ
வீரவடிவேற் குமரகுருபரனே
திருஞான வேழத்தானே
காரணவும்பொழிற்சென்னைப் பதியானே
யாறுமுகக் கடவுளானே. (௮)

ஆசிமிகப்பகர்ந்துனை யேபரமெனநா
டிடுந்தமியே னறியநீமுன்
பேசியவாறொன்றுநிச மாவதென்றென்
றிடையவிடல் பெருமைதானோ
காசிபன்றன்மக்களொரு மூவரையுந்
தடிந்துவிண்ணூர்க் கடவுளாரை
யேசில்பரமானந்த முறச்செய்தாய்
சென்னைநக ரிடத்துற்றோனே. (௯)

பூங்கமலப்புத்தேளுந் திருமாலுஞ்
சிவனுமெச்சும் புகழ்ச்சீர்வேண்டி
யீங்கடிமை வணங்கல்கண்டு
மேடணையால்வருந்தவிட வியல்புதானோ
தேங்கடம்புகூதாளஞ் செச்சைமுதற்
பலமாலை திகழுமார்பா
தாங்கரியபிழைபொறுத்தன் பரைப்புரப்பான்
சென்னைநகர்தனில் வந்தோனே. (௧௦)

கோலமளவிறந்தவிதங் குலவுபல
குருவாகிக் கொதிநீர்சூழு
ஞாலமதிற்சமயமுற்றும் புரக்குமுன்னை
நம்பியுநா னலியலாமோ
காலனஞ்சக்கனைக்குமடற் றகரேறிப்
பவனிவருங் கந்தவேளே
யாலமுண்டபெருமான் றன்குரவனே
சென்னையினி லமருந்தேவே. (௧௧)

சிந்துரவாய்ச்சேயிழையார் விளையாடன்
மலிவாருஞ் சென்னையூரில்
வந்துறைந்தகந்தனுக்கு வயங்குபிள்ளைக்
கவிப்பனுவல் வனைந்துசூட்டிப்

பிந்துமியல் புணர்வார்க்குத்தோன்றநெல்லை
யூர்ப்புலவன்பேசும்பாடல்
வெந்துயர்ப்பாழ் மிடிநோய்க்குமருந்தாகும்
வேண்டுமெவர் விரும்புவீரே. (கஉ)

முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

ஸ்ரீமன்னாராயணாயநம.

# திருவல்லிக்கேணிப்பதிகம்.

காப்பு-நேரிசைவெண்பா.

கருவல்லலற்றீர்த்தருளுங் காயாம்பூவண்ணன்
திருவல்லிக்கேணியினைச் செப்பப் - பொருவில்லா
வானைமுகத்தாழ்வா னம்புயத்தாளானந்தத்
தேனைமறவாதேநெஞ் சே.

கலிவிருத்தங்கள்.

தொண்டனுக்கிரங்கியோர் சூதனாகியும்
பண்டருள்புரிந்திடும் பகவன்பற்றிட
மண்டலத்தினர்களும் வழுவில்சீர்திக
ழுண்டரும்புகழ்திரு வல்லிக்கேணியே. (க)

கேசவனேயெனக் கிளத்துமேலவர்
பாசநோய்தவிர்ப்பவன் பரிந்துவாழிட
மீசனுநான்முகத் தினனுமேத்தலா
லாசறுநலந்திக ழல்லிக்கேணியே. (உ)

பொன்படுநிறத்தொரு புனிதமங்கள
மின்பழகுரத்துயர் விகிர்தன்மேவிடம்
வன்பருக்கெமனென வயங்குமாண்புதோ
யன்பர்பற்பலர்வரு மல்லிக்கேணியே. (ங)

புற்புதநிகர்முலைப் பொதுவமங்கையர்
கற்புயர்வுறச்செயுங் கடவுள்காப்பிட
நற்புகழ்தவமுத லாவிலும்பற்பல
வற்புதமலிதரு மல்லிக்கேணியே. (ச)

பாடலொன்றியற்றினன் பகர்ந்தவாறவன்
கூடவும்போய்வருங் குரிசில்கொள்ளிட
மாடகப்பாவையொத் தவிருமங்கைய
ராடன்மிக்கவிர்தரு மல்லிக்கேணியே. (௫)

பன்னகப்பாயினன் பரமென்றன்பொடு
சொன்னவர்தம்மெதிர் துலங்குவானிடம்
பொன்னவிர்மென்சிறைப் பொலிவுதோய்தரு
மன்னமார்வயன்மலி யல்லிக்கேணியே. (௬)

காரணனெனப்பலர் கழறுஞ்சீர்பெறு
நாரணனநுதின நண்ணுநல்லிடம்
பூரணபோதமெய்ப் புனிதர்போற்றிசெய்
யாரணத்தொனிமிகு மல்லிக்கேணியே. (௭)

வெங்கராவிடர்செய மெலிந்தவேழமன்
சங்கடந்தவிர்த்தரு டலைவன்றங்கிடம்
பங்கயமலர்முதற் பகருமைந்துகொ
ளங்கசன்விழவுறு வல்லிக்கேணியே. (௮)

இரணியன்றன்னைவென் றிறைஞ்சுவாற்கிரு
சரணளித்தவனுறத் தக்கதாமிட
முரணிகலவர்கெட முனிகுவார்மிகு
மரண்வளைதருமெழி லல்லிக்கேணியே. (௯)

விதிமறைதமிழ்செயும் விகிர்தனுதிய
பதின்மருக்கருள்செயும் பரிவுளானிடங்
கதிர்மதிநுழைதரு காவிற்காரின
மதிர்தருமணிதிக ழல்லிக்கேணியே. (௰)

ஆயனுற்றவிர்தரு மல்லிக்கேணியைத்
தூயநெல்வேலியிற் றொழும்பன்சொல்லிவை
யேயநன்றனைத்தையு மீயுமென்பவர்
மாயவல்வினைப்பிணி வழக்கில்லார்களே. (௰௧)

முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

சிவமயம்.

# திருவான்மியூர்ப்பதிகம்.

காப்பு-நேரிசைவெண்பா.

திருவான்மியூர்ச்சிவனே சீதரனும்போற்று
மொருவாபுலித்தோ லுடையாய் - மருவார்
கடுக்கையணிவானேநின் கண்ணருளாலென்ற
னிடுக்கணெலாந்தீர்த்தருளின் றே.

கொச்சகக்கலிப்பாக்கள்.

அங்கமுற்றுந்திருவெண்ணீ றணியுமுனதடியார்பால்
வெங்கலிநோய்மருவிலுன்றன் வியன்புகழ்க்கோரிழிவன்றோ
பங்கமில்சீர்த்தென்னளகைப் பதியுடையானுயிர்போல்வாய்
செங்கண்விடைப்பரியூர்வாய் திருவான்மியூர்ச்சிவனே. (௧)

மௌவலந்தோட்புரவலர்தம் வாழ்வினையுமதியார்தா
மெவ்வமுறக்காணினுஞ்சற் றிரங்காதன்முறைதானோ
பௌவவிடமுண்டோனே பரமாயபண்ணவனே
செவ்வரிக்கண்ணுமைபங்கா திருவான்மியூர்ச்சிவனே (௨)

இருக்குமுதலாயமறை யீரிரண்டுமேத்தரிதாப்
பெருக்குமுன்றன்புகழ்சிறிது பேசுநலம்பெறுவேனோ
மருக்கமழ்பூங்கொன்றையணி வார்சடையின்மதிவைத்தாய்
திருக்கொழியத்தடுத்தாள்வாய் திருவான்மியூர்ச்சிவனே. (௩)

நாவேறுமவள்கேள்வ னடுத்தலையிற்பலிகொள்வாய்
பாவேறப்புனைவார்க்குப் பரிசளித்தவிதமியாதோ
தாவேறும்வல்லவுணர் தமக்குமருள்புரிவானே
சேவேறும்பெருமானே திருவான்மியூர்ச்சிவனே. (௪)

புத்தர்முதற்பகர்கின்ற புலைச்சமையத்தினர்முன்னென்
சித்தமொல்கித்தளராமற் றிருவருள்வாழ்வடையேனோ
மத்தமெருக்காத்திதும்பை வன்னிமுதற்சென்னியிற்கொள்
சித்தனேயீடில்புகழ்த் திருவான்மியூர்ச்சிவனே. (௫)

பூணாரமுலைமின்னார் பொய்ப்போகமயல்கொண்டு
நாணாமற்றிரிவேற்கு நலஞ்சிறிதீந்தருள்வாயோ
வாணாதியொருமூன்று மாகியொன்றுமாகானே
சேணாடர்பணிகொள்ளுந் திருவான்மியூர்ச்சிவனே. (௬)

கரியவனுங்காணுநின் கழல்பாடிக்கசிந்துருகா
துரியவினைப்போகத்து மெழல்வேனுமுய்வேனே
கிரியினைவில்லெனக்கொண்டு கிளரொளிப்புன்னகைதன்னுற்
றிரிபுரநீறெழச்செற்றுய் திருவான்மியூர்ச்சிவனே. (எ)

மிக்கபுகழ்ப்பார்த்தனது வில்லடிக்குவிறல்வாளி
யக்கணத்தன்றருள்செய்தா யடியேனுக்கிரங்காயோ
முக்கணுடைப்பெம்மானே மூவருக்குமுதலானுய்
திக்கடங்கவுணர்சீலத் திருவான்மியூர்ச்சிவனே. (அ)

அத்திமுகத்தினன்செவ்வே ளாகுமிருவரைப்பெற்றுய்
நத்தியுனைப்போற்றிசைக்கு நாயடியேற்கிரங்காயோ
பத்திவலைப்படல்கூறிப் பணிந்தானுக்கருள்செய்தாய்
சித்தியொடுமுத்திதருந் திருவான்மியூர்ச்சிவனே. (௯)

நால்வர்களுக்கருள்செய்த நலங்கேட்டுநண்ணியுன்றன்
பால்வருமென்றனக்கான பரிசின்னேதரவேண்டுங்
கோல்வனப்புக்கண்ணுளைக் குலவிடைமேற்கூடவைத்தாய்
சேல்வளநீர்வயல்காட்டுந் திருவான்மியூர்ச்சிவனே. (௰)

செல்வமலிதருபான்மைத் திருவான்மியூர்ச்சிவன்பா
னல்வரம்பெற்றுய்வதெண்ணி நறுந்தமிழ்த்தென்மலயமெனுங்
கல்வரைப்பாலவிர்கின்ற கழைவனத்தோன்கழறுமிவை
சொல்வதனிற்றுணிவுற்ரேர் துயர்சிறிதுந்தோயாரே. (௰க)

முற்றிற்று.

---

# குருபாதமேகதி.

உ

முருகக்கடவுடுணை.

## திருப்போரூர்ப்பதிகம்.

---

காப்பு-நேரிசைவெண்பா.

முன்னமுனைத்துதித்த முத்தமிழைக்கைவிட்டர்
யின்னமுனைப்போற்றிசைத்தற் கிச்சித்தேன் - வன்னமயிற்
சேவகாசெல்வத் திருப்போரூர்ச் செவ்வேளே
பாவலுற்றவாழ்வளித்தின் ருள்.

## கலிப்பாக்கள்.

பொன்னைத்தவளமலர்ப் பூவையினைத் தொண்டுகொள்ளு
மன்னைபைவேலாக்கி யணிந்தபிரா னுளுமிட
மின்னைப்பொருவிடைகொண் மெல்லியலார் பந்தாடும்
புன்னைமரச்சோலை பொலிந்ததிருப் போரூரே. (௧)

கற்பாந்தகாலங் கணமாகக் காணவல்ல
நற்பான்மையன்பர்பெற நல்குசெவ்வே ணண்ணுமிட
மற்பாவுகண்ட மமையாவரன்போலும்
பொற்பார்முனிவர்பலர் போற்றுதிருப் போரூரே. (௨)

ஐயானனத்தார்தம் மாருயிரே போலுமொரு
மையாகத்தம்மை மடிப்பாலன் வாழுமிட
மெய்யாச்சுருதி யிசைநலத்தா லெத்தினத்தும்
பொய்யாமறைமுழக்கம் பூண்டதிருப் போரூரே. (௩)

தேங்கமழ்சொற்பாவலவர் சிந்தித்த வாழ்வுதவி
யோங்கலெங்குமாட லுஞற்றுவா னுற்றவிட
நீங்கரியவண்டு நிறைதேனுந் தோய்ந்திலங்கும்
பூங்கமலம்வாவிதொறும் பூத்ததிருப் போரூரே. (௪)

நச்சாடரவணிந்து நன்மனைதோ றுற்றிரக்கும்
பிச்சாடனர்க்கொருசொற் பேசியவன் பேணுமிடங்
கச்சார்முலையாரைக் கைத்தியற்று மாதவத்தாற்
பொச்சாப்பிலாதார் பொருந்துதிருப் போரூரே. (௫)

தக்கபுகழ்கூறிச் சந்ததமும் போற்றிசைக்கு
மக்களெதிர்தோன்று மாமயிலோன் மன்னுமிடந்
திக்கடங்கமெச்சுஞ் செயல்வாய்ந்து சேருமவர்
பொக்கந்தவிர்க்கும் பொருவிறிருப் போரூரே. (௬)

நண்ணியெழுத்தாறு நவின்றுமிக நம்புமவ
ரெண்ணியபேறெல்லா மெளிதருள்வா னேயுமிடம்
விண்ணினர்தம் வாழ்வினையும் வேண்டாதவீறுகொண்ட
புண்ணியத்தோர்க்கின்பம் புகட்டுதிருப் போரூரே. (௭)

காரமருஞ்சோலைமலி காழிநகர்ச் சேயாகித்
தீரமிகுசாரணர்தஞ் சீரழித்தோன் சேருமிடம்
பாரறிந்துவானறிந்து பாதாளங் கண்டுவரும்
பூரமிவர்வாள் புகழ்ந்ததிருப் போரூரே. (௮)

வன்றானவச்சூரன் வாழ்வொழித்து வானுலகை
நன்றாகவைத்தகந்த நாயகனே நத்துமிடங்
குன்றாக்கவுமாரர் கூட்டமிகக் கூடுவதாற்
பொன்றாதவண்மை புனைந்ததிருப் போரூரே. (கூ)

முத்தேவராதியர்க்கு முன்னின் றருள்புரியு
மெய்த்தேவனானவெற்றி வேற்பெருமான் மேவுமிடம்
பொய்த்தேதுஞ்சொல்லாப் பொறியுடையார் தம்புடையாற்
புத்தேளினருலகம் போன்றதிருப் போரூரே. (யி)

பாகத்திருவருறப் பச்சைமயின் மீதேறி
மாகத்துலாவி வருங்குரவன் வைகுமிட
மேகத்துவமுணர்ந்து மேற்றபணி செய்வார்க்குப்
போகத்தையுங்கொடுத்துப் போந்ததிருப் போரூரே. (யிக)

வண்டமிழ்நாட் டோர்முனிவன் வந்ததிருப்போரூரைத்
தொண்டர்மலர்த்தாட்டுக ளணிவான் சொல்லுமிவை
யொண்டகைய்வாமென் றுணர்ந்துரைக்கு முத்தமரைப்
புண்டரிகப்பூவில்வரும் போதன்வழக் கொன்றாதே. (யிஉ)

முற்றிற்று.

## வேலுமயிலுந்துணை.

உ

சிவமயம்.

# திருவொற்றியூர் வெண்பாக்கள்.

## சிவபெருமான்.

வெற்றிமழுவானே வெண்ணீற்று வேதியனே
யொற்றியூர்மேவு மொருவனே-பற்றில்லார்
தம்மைப்புரந்தருளுஞ் சங்கரனே யென்மனத்தின்
பொய்ம்மைதவிர்த் தாண்டருளிப்போது.

## அம்பிகை.

ஓகைக்கடல்விளைவித் தொற்றியூ ருத்தமர்பாற்
பாகைநிகரின்சொற் பகருவாய்-நீகைத்தா
லெவ்வாறிங்குய்வே னெழிற்றிரு வண்ணுமலையி
லவ்வாறியற்றல் பொய்யாமா.

## விநாயகர்.

நெற்றிவிழிச்சீர்குலவ நீடுகளி றுனனத்தா
யொற்றியூரண்ணலுயிர் போல்வாய்-நற்றிருநீ
றள்ளிக்கொடுத்தென் னருவினையை மாற்றியெனை
துள்ளிற் பிரியாதுறை.

## முருகக்கடவுள்.

நீலக்கலாப நிலவுமயில் வாகனனே
காலத்தைவென்றூர்தங் கண்மணியே-சாலத்
திருவொற்றி யூர்புரக்குஞ் செவ்வேளேயிந்தப்
பருவத்திற் சற்றருளாற் பார்.

## சண்டேசுரர்.

ஒற்றியூர்க்கோயி லுறைசண்டிகேச்சுரனே
நெற்றிவிழியாரழகை நெஞ்சத்தாற்-பற்றிமகிழ்
தன்மையுடையானே சைவசமையத் தவத்தோர்
நன்மையுறக் காண்பதெந்த நாள்.

## காளி.

ஒற்றியூர்க்காளீ யுனக்கேனோ வூன்விருப்பம்
வெற்றிமழுவானருட்சீர் வேண்டாமோ-சிற்றுயிரைக்
கொல்வார்க்குமின்பங் கொடாதா னவன்கண்டாய்
நல்வார்த்தை சொன்னேனிந் நாள்.

முற்றிற்று.

---

# தெய்வமே துணை.